66

முப் 30 பது

# சல்லரைக் கோர்வை

REGISTRAR OF ... OFFICE ... 1958 MADRAS



66
3-59
C
R2:417x
N59
78336

சரஸ்வதி புத்தகசாலை No.175, செட்டியார் தெரு
கொழும்பு.

66/3-59

# முப்பது
# சில்லரைக்கோர்வை

[படங்களுடன்]



சென்னை மலர்மணி பதிப்பு

இதன் விலை] 1959 [ரூபா 1

கிடைக்குமிடம்:- சரஸ்வதி புத்தகசாலை

175, செட்டியார் தெரு, கொழும்பு.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
JUL 1959
MADRAS

# முகவுரை

சீருலாவும் பிரபஞ்சத்தின்கண் விளங்கும் தெய்வ ஸ்தலங்கள் பல; அவற்றுள் வீற்றிருக்கும் தேவர்களும் பலர்; அவர்களிடம் நமது கஷ்டங்களைச் சொல்லி ஸ்தோத்தரிப்பதற்கென்றே மகா வித்தியாவதானிகளால் விதவிதமான பதிகங்களும், வெண்பாக்களும், சிற்சில விருத்தங்களும், கீதங்களும் பாடி, தாங்கள் கடவுள்பால் பெற்ற சுகத்தை மற்றவரும் பாமரமக்களும் அடையவேண்டுமென்றே பாக்கள் அனைத்தும் ஒன்றுதிரட்டி, இதனுடன் முக்கியமாய் அனுசரிக்கவேண்டிய இலக்கணங்களும், திருக்கோயில்களிலும் திருவீதிகளிலும் செய்யத்தகாத குற்றங்களும் விளக்கிக்காட்டி முப்பது சில்லரைக்கோர்வையாய் சுத்தப்பதிப்பாக ஆங்காங்கு சுவாமிகளின் திருவுருவப் படத்துடன் அச்சிட்டிருக்கின்றனம். இதைக் கற்றோரும் மிக்கோரும் எமது மலர்மகள் பதிப்பை வாங்கிப் படித்துப் பயன் பெறுவாராகவும்.

பதிப்பாளர்:—

அ. இராஜரத்தின முதலியார்

மலர்மகள் விலாசம் பிரஸ்

23, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை-1.

7 7 9 336

உ

கடவுள் துணை

78 336

## இப்புத்தகத்தில் அடங்கிய

# 30 - ஸ்தோத்திரங்களின் அட்டவணை


| எண் | பாடல்கள் | பக்கம் |
|---|---|---|
| 1 | நடராஜப்பத்து | 1 |
| 2 | பரமசிவன் தோத்திரம் | 9 |
| 3 | அவனாசிப்பத்து | 13 |
| 4 | அருணாசலேசுரர் பதிகம் | 17 |
| 5 | உண்ணாமுலையம்மன் பதிகம் | 21 |
| 6 | வேமனானந்தசுவாமி பதிகம் | 25 |
| 7 | ஸ்ரீராமர் தோத்திரம் | 33 |
| 8 | ஸ்ரீராமர் பதிகம் | 41 |
| 9 | திருநாமப் பதிகம் | 49 |
| 10 | கெருடப்பத்து | 57 |
| 11 | கஜேந்திரமோக்ஷக் கீர்த்தனை | 61 |
| 12 | திருநீற்றுப்பதிகம் | 65 |
| 13 | சுப்பிரமணியர் விருத்தம் | 73 |
| 14 | ஆறுமுகசுவாமி விருத்தம் | 81 |
| 15 | ஆறுமுகசுவாமி ஆசிரியவிருத்தம் | 85 |

| எண் | பாடல்கள் | பக்கம் |
|---|---|---|
| 16 | தணிகாசல பஞ்சரத்தினம் | 89 |
| 17 | ஆறுமுகசுவாமி பஞ்சரத்தினம் | 94 |
| 18 | சண்முகக்கடவுள் பஞ்சரத்தினம் | 95 |
| 19 | காமாட்சியம்மன் விருத்தம் | 97 |
| 20 | வடிவுடையம்மன் விருத்தம் | 105 |
| 21 | துரோபதையம்மன் விருத்தம் | 113 |
| 22 | அங்காளம்மன் பதிகம் | 121 |
| 23 | சூரிய நமஸ்காரப் பதிகம் | 129 |
| 24 | சனிபகவான் தோத்திரம் | 137 |
| 25 | நவக்கிரக ஸ்தோத்திரம் | 142 |
| 26 | அழுகணிசித்தர் பாடல் | 145 |
| 27 | குதம்பைசித்தர் பாடல் | 153 |
| 28 | கதிர்காமவேலவர் செந்திமாலை | 160 |
| 29 | திருச்செந்தூர்ப் பதிகம் | 161 |
| 30 | பழனிவேலவர் ஆசிரியவிருத்தம் | 164 |

# அநுசரிக்கும் இலக்கணங்கள்

கொலை களவு கள்ளுண்ணல், மற்சமாமிசம் புசித்தல், வியபிசாரம் பொய் முதலாகிய பாவங்களை மரணபரியந்தம் விலக்கல். உயிர்களுக்கு இரங்குதல், மெய்பேசுதல், வறியவர்களுக்கு ஒருபிடி அன்னமாவது கொடுத்தல், செய்நன்றி அறிதல், இந்தக்கருமங்களை மரணபரியந்தம் பாதுகாத்தல். மாதா பிதா பாட்டன் பாட்டி தமையன் மாமன் உபாத்தியாயர் குரு இராஜா முதலிய பெரியோர்களை மரணபரியந்தம் உபசரித்தல். சிவதீக்ஷை பெற்றுக்கொள்ளல். விபூதி ருத்ராக்ஷம் தரிப்பது. சந்தியாவந்தனம் சிவத்தியானம் பஞ்சாட்சரஜெபம் சிவஸ்தோத்திரம் இவைகளை மரணபரியந்தம் நித்தமும் பத்துநிமிஷநேரத்திலாவது மனத்தை அடக்கி விதிப்படி அன்புடன் செய்துமுடித்தல். நித்தமுமாவது புண்ணிய காலங்களிலாவது சிவலிங்கப்பெருமானை அன்புடன் விதிப்படி வலஞ்செய்து வணங்கித் துதித்தல். சைவவினாவிடை சிதம்பரமான்மியம் பெரியபுராணம் பிரபந்தம் முதலாகிய நூல்களை வாசித்தாவது கேட்டாவது அறிதல். சிவபெருமானுடைய மகிமையையும் புண்ணிய பாவங்களையும் சிவபெருமானை வழிபடும் முறைமையையும் அறிவிக்கிற பிரசங்கங்களைக் கேட்டுச்சிந்தித்தல். சிவநிந்தை சிவசாத்திரநிந்தை குருநிந்தை இவைகளைக் கேளாது நீங்கிவிடுதல். செய்யத்தகாத பாவத்தைச் செய்தாலும், செய்யத்தக்க புண்ணியத்தைச் செய்யாவிட்டாலும், மனம் பதைபதைத்து அஞ்சி குருவையடுத்து அவர் சிவாகமப்பிரகாரம் விதித்த பிராயச்சித்தத்தை விசுவாசத்துடன் செய்துக்கொள்ளல் என்பனவாம்.

# திருக்கோயிலிலும் திருவீதியிலும்
## செய்யத்தகாத குற்றங்கள்

1 ஸ்நானம் செய்யாது போதல்
2 தோய்த்துலராத வேஷ்டி தரித்துப் போதல்
3 கால் கழுவாது போதல்
4 ஆசௌசத்துடனே போதல்
5 தலையில் வஸ்திரம் தரித்துக்கொண்டு போதல்
6 சண்டையிட்டுக்கொள்ளுதல்
7 போர்த்துக்கொள்ளுதல்
8 மேல்வேட்டி போட்டுக்கொள்ளுதல்
9 பாதரக்ஷை இட்டுக்கொள்ளுதல்
10 வாகனம் ஏறிக்கொள்ளுதல்
11 குடை பிடித்துக்கொள்ளுதல்
12 வெற்றிலைப்பாக்கு அருந்தல்
13 துப்புதல்
14 மலசலங் கழித்தல்
15 மூக்கு சிந்துதல்
16 மயிர் கோதி முடித்தல்
17 சூதாடுதல்
18 சிரித்தல்
19 சண்டையிடுதல்

20 வீண்வார்த்தை பேசல்
21 காமப்பற்றுவைத்தல்
22 காலை நீட்டிக்கொண்டிருத்தல்
23 சயனித்தல்
24 ஆசனத்திருத்தல்
25 சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் குறுக்கே போதல்
26 சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் இடையிலே
நமஸ்காரம் பண்ணுதல்
27 சுவாமிக்கு நேராகக் காலைநீட்டி
நமஸ்காரம் பண்ணுதல்
28 சுவாமிக்கு நேராகக் காலைநீட்டி
நமஸ்கார பிரதக்ஷணம் பண்ணுதல்
29 நிருமாலியத்தைக் கடத்தல்
30 நிருமாலியத்தை மிதித்தல்
31 ஸ்தூபி துவஜஸ்தம்பம் பலிபீடம் விக்கிரகம்
என்னும் இவைகளின் நிழலை மிதித்தல்
32 விக்கிரகத்தைத் தொடுதல்

இந்தக் குற்றங்களைச் செய்தவர்கள் நரகத்திலே தண்டிக்கப்படுவார்கள் என்று ஆகமங்களும் புராணங்களும் சொல்லுகின்றன. குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொள்வதுபோலச் சுவாமி தரிசனமாகிய புண்

ணியஞ் செய்யப்போய் பாவத்தைத் தேடிக்கொள்வது புத்தியன்று. எல்லாரும் இந்தக் குற்றங்களை விட்டு விதிப்படி சுவாமி தரிசனஞ்செய்து திருவருளைப் பெற்று உய்யக்கடவர்கள்.

இந்தியாவிலே உத்தியோகஸ்தர்கள் அநேகர் சுவாமி சந்நிதானத்திலே விதிக்கு விரோதமாக சட்டை இட்டுக்கொண்டும், போர்த்துக்கொண்டும், மேல்வேட்டி போட்டுக்கொண்டும், தலையில் வஸ்திரம் தரித்துக்கொண்டும், பாதரக்ஷை இட்டுக்கொண்டும், குடை பிடித்துக்கொண்டும் போகிறார்கள். அவர்கள் தங்கள் சமயத்தில் விசுவாசம் உடையவர்களானால் இப்படிச் செய்வார்களா? கிறிஸ்தவர்களுள்ளே கவர்னர் முதலிய பெரிய உத்தியோகஸ்தர்களும் தங்கள் கோயில்களுக்குத் தங்கள் சமயக்கிரமப்படியே போவதை அவர்கள் காணவில்லையா? தங்களில் தாழ்ந்த மனிதர்கள் தங்கள் எதிரே பாதரக்ஷை இட்டுக்கொண்டாயினும், குடை பிடித்துக்கொண்டாயினும் நின்றால் அவர்களைக் கோபிக்கிறார்களே! இது குற்றம் என்று கொண்டவர்கள் இந்தக் குற்றத்தை தாங்கள் சுவாமியின் சந்நிதானத்திலே செய்யத் துணியாது இருத்தல் வேண்டும்.

---



உ

கடவுள் துணை

முப்பது ஸ்தோத்திரங்கள்

அடங்கிய

# சில்லரைக் கோர்வை

1 - வது

## நடராஜப் பத்து

மண்ணாதி பூதமொடு விண்ணாதி அண்டம்நீ மறைநான்கின் அடிமுடியும் நீ, மதியும்நீ இரவியும்நீ புனலும்நீ அனலும்நீ மண்டல மிரண்டேழும் நீ, பெண்ணும்நீ ஆணும்நீ பல்லுயிர்க் குயிரும்நீ பிறவும்நீ ஒருவன் நீயே, பேதாதி பேதம்நீ பாதாதி கேசம்நீ பெற்றதாய் தந்தைநீயே, பொன்னும்நீ பொருளும்நீ இருளும்நீ ஒளியும்நீ போதிக்க வந்தகுரு நீ, புகழொணாக் கிரகங்கள் ஒன்பதும்நீ யிந்தப் புவனங்கள்பெற்ற

வனும் நீ, எண்ணரிய ஜீவகோடிகளீன்ற
அப்பனே என்குறைகள் ஆர்க்குரைப்பேன்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 1

மானாட மழுவாட மதியாடப் புனலாட
மங்கைசிவ காமியாட, மாலாட நூலாட
மறையாட திரையாட மறைதந்த பிரம
னாட, கோனாட வானுலகு கூட்டமெல்லா
மாட குஞ்சரமுகத்தனாட, குண்டலமிரண்
டாடத் தண்டைபுலியுடையாடக் குழந்தை
முருகேசனாட, ஞானசம்பந்தரொடு இந்தி
ரர் பதினெட்டுமுனி அட்ட பாலகருமாட,
நரைதும்பை அறுகாட நந்திவா கனமாட
நாட்டியப்பெண்களாட,வினையோட உனைப்
பாட எனைநாடி இதுவேளை விருதோடு
ஆடிவருவாய், ஈசனே சிவகாமி நேசனே
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 2

கடலென்றபுவிமீதில் அலையென்ற உரு
கொண்டு கனவென்ற வாழ்வைநம்பி, காற்
றென்ற மூவாசை மாருதச் சுழலிலே கட்
டுண்டு நித்தநித்தம், உடலென்ற கும்பிக்கு
உணவென்ற இரைதேடி ஓயாமல் இரவுபக

லும், உண்டுண் டுறங்குவதைக் கண்டதே யல்லாது ஒருபய னடைந்திலேனே, தடமென்ற மிடிகரையில் பந்தபாசங்களெனும் தாவரம் பின்னலிட்டு, தாயென்று சேயென்று நீயென்று நானென்று தமியேனை இவ்வண்ணமாய், இடையென்று கடைநின்று ஏனென்று கேளாது இருப்பதுன் அழகாகுமோ, ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 3

பம்புசூ னியமல்ல வைப்பல்ல மாரணம் தம்பனம் வசியமல்ல, பாதாள அஞ்சனம் பரகாயப் பிரவேச மதுவல்ல ஜாலமல்ல, அப்புகுண்டுகள்விலகமொழியுமந்திரமல்ல ஆகாய குளிகையல்ல, அன்போடு செய்கின்றவாதமோடிகளல்ல அரியமோகனமுமலல, கும்பமுனி மச்சமுனி சட்டமுனி பிரமரிஷி கொங்கணர் புலிப்பாணியும், கோரக்கர் வள்ளுவர் போகமுனி இவரெலாம்கூறிடும்வயித்தியமல்ல, என்மனது உன் அடிவிட்டு நீங்காது நிலைநிற்க யேதுளவு புகலவருவாய், ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 4

நொந்துவந்தேனென்று ஆயிரஞ்சொல்
லியும் செவியென்னமந்தமுண்டோ, நுட்ப
நெறி அறியாத பிள்ளையைப் பெற்றபின்
நோக்காத தந்தை யுண்டோ, சந்ததமுந்
தஞ்சமென் றடியைப் பிடித்தபின் றளராத
நெஞ்சமுண்டோ, தந்திமுகன் அறுமுகன்
இருபிள்ளை யில்லையோ தந்தைநீ மலடு
தானோ, விந்தையும் ஜாலமும் உன்னிட
மிருக்குதே வினையொன்று மறிகிலேனே,
வேதமும்சாஸ்திரமும் உன்னையேபுகழுதே
வேடிக்கையிதுவல்லவோ இந்தவுலகீரேழு
மேனளித்தாய்சொல்லு இனியுன்னைவிடுவ
தில்லை, ஈசனே சிவகாமி நேசனே எனை
யீன்ற தில்லைவாழ் நடராஜனே. 5

வழிகண்டு உனையடியைத் துதியாதபோ
திலும்வாஞ்சையில்லாதபோதும், வாலாய
மாய்க்கோயில் சுற்றாதபோதிலும் வஞ்சமே
செய்தபோதிலும், மொழியெதுகைமோனை
யில்லாமலே பாடினும் மூர்க்கனேன் முக
டாகினும், மோசமே செய்யினும் தேசமே
கவரினும், முழுகாமியேயாகினும், பழியெ
னக்கல்லவே தாய்தந்தைக்கல்லவோ பார்த்

தவர்கள் சொல்லார்களோ, பாரறிய மனை
விக்குப்பாதியுடலீந்தநீ பாலகனைக்காக்கொ
ணுதோ, எழில்பெரிய அண்டங்க ளடுக்கா
யமைத்தநீ என்குறைகள் தீர்த்தல் பெரி
தோ, ஈசனே சிவகாமி நேசனே எனை
யீன்ற தில்லைவாழ் நடராஜனே. 6

அன்னை தந்தைக ளென்னை ஈன்றதற்
கழுவனோ அறிவிலாததற்கழுவனோ, அல்
லாமல் நான்முகன் தன்னையே நோவனோ
ஆசை மூன்றுக்கழுவனோ, முன்பிறப்பென்
ன வினை செய்தனனென் றழுவனோ என்மூட
வறிவுக் கழுவனோ, மூன்னிலென் வினை
வந்து மூளுமென் றழுவனோ முத்திவரு
மென் றுணர்வனோ, தன்னைநொந் தழுவ
னோ உன்னைநொந் தழுவனோ தவமென்ன
வென் றழுவனோ, தையலர்க் கழுவனோ
மெய்வளர்க்கழுவனோ தரித்திர திசைக்கழு
வனோ, இன்னமென்ன பிறவி வருமோ
வென் றழுவனோ எல்லா மூரைக்க வரு
வாய், ஈசனே சிவகாமி நேசனே எனை
யீன்ற தில்லைவாழ் நடராஜனே. 7

தாயாமுன் மரமீது பூபிஞ்சறுத்தனே கன்னியர்கள் பழிகொண்டனே, கடனென்று பொருள்பறித் தேவயி றெரித்தனே இளைவழியில் முள்ளிட்டனே, தாயாருடன் பிறவிக் கென்னவினை செய்தனே தந்த பொருளில்லையென்றனே, தானென்றுகெர் வித்து கொலைகளவு செய்தனே தபசிகளை ஏசினேனே, வாயாரப் பொய்சொல்லி வீண்பொருள் பறித்தனே வானவரைப் பழித்திட்டனே, வடவுபோலே பிறரைச் சேர்க்கா தடித்தனே வந்தபின் என்செய் தனே, ஈயாத லோபியென்றே பெயரெடுத் தனே எல்லாம் பொறுத் தருளுவாய், ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 8

தாயா ரிருந்தென்ன தந்தையு மிருந்தென்ன தன்பிறவி யுறவுகோடி, தனமலைகுவித் தென்ன கனபெய ரெடுத்தென்ன தாரணி யையாண்டுமென்ன, சேயர்களிருந்தென்ன குருவா யிருந்தென்ன சீஷர்க ளிருந்து மென்ன, சித்துபல கற்றென்ன நித்தமும் விரதங்கள் செய்தென்ன நதிகளெல்லாம்,

ஓயாது மூழ்கினும் என்னபலன் எமனை
ஒன்றைக் கண்டு தடுக்க, உதவுமோ யிதுவெ
லாம் சந்தையுற வென்று நான் உன்னிரு
பாதம் பிடித்தேன், யார்மீது உன்மனமிருந்
தாலும் உன்கடைக் கண்பார்வையதுபோ
துமே, ஈசனே சிவகாமி நேசனே எனை
யீன்ற தில்லைவாழ் நடராஜனே. 9

இன்னமுஞ் சொல்லவோ உன்மனங்
கல்லோ இரும்போபெரும்பாறையோ, இரு
செவியுமந்தமோ கேளாது அந்தமோ இது
வுனக் கழகுதானே, என்னன்னை மோக
மோ இதுவென்னசோபமோ இதுவோவுன்
செய்கைதானே, இருபிள்ளைதாபமோ யார்
மீதுகோபமோ யானுலும் நான்விடுவனே,
உன்னைவிட் டெங்குசென் றாலும்விழலாவ
னே நானுனை யடுத்துங் கெடுவனே,
ஓகோவிது உன்குற்ற மென்குற்ற மொன்று
மில்லை உற்றுப்பார் பெற்றவையா, என்குற்ற
மாயினும் உன்குற்றமாயினும் இனியருளளி
க்கநினைவாய், ஈசனே சிவகாமி நேசனே
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 10

சனிராகுகேதுபுதன் சுக்கிரன்செவ்வாய்
குரு சந்திரன் சூரியனிவரை, சற்றெனக்
குள்ளாக்கி ராசிபனிரெண்டையும் சமமாய்
நிறுத்தியுடனே,பனியொத்த நட்சத்திரங்க
ளிருபத்தேழும் பக்குவப்படுத்திப் பின்னல்,
பகர்கின்ற கரணங்கள் பதினென்றையும்
வெட்டி பலரையும் அதட்டி யென்றூன்,
கனிபோல வேபேசி கெடுநினைவு நினைக்
கின்ற கசடர்களையுங் கசக்கி, கர்த்தனின்
தொண்டராம் தொண்டர்க்குத் தொண்ட
ரின் தொண்டர்கள் தொழும்ப ஞக்கி,
இனியவள மருவுசிறு மணவைமுனி சாமி
யெனை ஆள்வதினி யுன்கடன் காண்,
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 11

## 2 - வது

# பரமசிவன் தோத்திரம்

காயா மரத்தின் கனியாகி கனியிற் கொட்
டையுள்ளாகித், தாயாயீரே ழுலகுக்குந் தந்
தையுமான தயாபரனே, யாயா மறைநூல்
தனைவகுத்த வானே யுந்த னடைக்கலங்
காண், பேயா யெங்கள் பெருமானே பித்தா
யெனை யாளாயோ. 1

அரவம்பணியா யணிந்தோனே வானே
யடியார்க் கெளியோனே, பருவின் கொழுந்
தின்வாசனைபோல் மாயாமருளாமகதேவா,
குருவைச் சீஷன்தனைத்தேடிக் குடிகொண்
டுளத்தி லிருப்போனே, இரவும் பகலு
முனைப் புகழ்வேன் ஈசாயெனை யாளாயோ.

மட்டார்குழலிதனைக்கூடி மாயாவயிற்றுக்
கிரைதேடிப்,பட்டாங்கடித்துப்பரஞ்சோதி
பாதங்காண வேணுமென்றே, கட்டாச்
சுரபி கன்றதுபோல் காசினியெங்குந் திரிந்
தடியேன், எட்டாக் கொம்பையெட்டி நின்
றேன் ஈசாயெனை யாளாயோ. 3

வனக்குன் றெடுத்து வளர்த்த பெண்ணை வைத்தாயுந்தனிடப்பாகம், சினக்கும் புலித் தோல் தரித்தோனே சிவனே யெங்கள் பெருமானே. நினைக்கும் பொழுது அடி யேன்முன் னிமலா வந்து நில்லாயோ, எனக்கு முமக்கும் போகாது ஈசா யென்னை யாளாயோ. 4

கொல்லுங் களிறை யுரித்தோனே குடி கொண் டுளத்தி லிருப்போனே, செல்லுந் தலத்தி லிருந்தென்ன சிவனே யடியேன் படமாட்டேன், அல்லும் பகலும் உனைப் புகழ்வே னையாயுந்த னடைக்கலங் காண், இல்லும் பிறப்பு மினிவேண்டே னீசா யென்னை யாளாயோ. 5

வருவதும் போவது மினிவேண்டேன் வாழ்வும் வேண்டேன் புவிவேண்டேன், தருவதெனக்கு உன்பாதஞ் சர்வஜீவ தயா பரனே, குருவுபதேசம் நீதந்து குடிகொண் டுளத்தி லிருந்தடியே, னருவினை யறுத்தே யென்னையாண்ட வரனே யெளியன்முன் வாராயோ. 6

நில்லா வாழ்வைச் சதமென்று நெறியா னடக்க மாட்டாமல், நல்லார் பொல்லா ரென்றறியாமல் நமன்போல் நடுங்கித்திரிந் தாலும், அல்லார்குழலா ளுமைபாகா வர னேயடியார்க் கெளியோனே, எல்லாம்பொ றுக்கப்பரமுனக்கே யீசாயெனை யாளாயோ.

பொங்கு கடல்சூ ழுலகமெங்கும் புவியி லேழு புவனமெல்லா, மெங்குமுந்த னொளி யன்றோ யிறைவா யெங்கள் பெருமானே, அங்கந தளர்ந்து மிகமெலிந்து வடியேன் வயிற்றுக் கிரைதேடி, யெங்குந்திரிந்து வுழ லாம லீசாயெனை யாளாயோ. 8

பொய்யு மெய்யுந் தானுரைத்துப் புவி மேல்வாழ்வைச் சதமென்று, கையுஞ்சலித் துக்கால்சலித்துக்கர்த்தாவுன் றன்செயலன் றோ, செய்யுந்தொழிலையு மெய்யென்று சிவ னேயடியேன் படுவானேன், எய்யுஞ் சிலை யான் றனையெரித்த யீசாயெனை யாளாயோ.

நெருப்போவுந்தன் திருமேனி நீறேபூசித் திரிவதல்லால், பொருப்போ வுந்த னிருப் பிடந்தான்புவியீரேழுபுவனமன்றோ, தருப் போல் கிளைத்துத் தழைத்து நின்றாய் சகல

சீவ செந்துக்குள்ளே, இருப்பா யெந்த
னுளந்தனிலே யீசாயெனை யாளாயோ. 10

மங்குமனித ரெலும்பை யெல்லாம் மார்
மேல் நிறையப் பூண்டுகொண்டு, அங்கம்
வளர்க்கப் படும்பாடு யார்தா னறியப்போ
ரூர்கள், சங்குகரத்தில் மழுமா னுந்தரித்துச்
சூலம் பிடித்தெதிரே, எங்குந் திரிந்து
உழலாம லீசாயெனை யாளாயோ. 11

கல்லாதவனுயிருந்தாலுங் கனத்தபாவஞ்
செய்தாலும், பொல்லாதவனு யிருந்தாலும்
புலையுங் கொலையுஞ் செய்தாலுஞ், செல்லா
வாசல்தனைச்சென்று சிவனேயுன்னை மறந்
தாலும், எல்லாம்பொறுக்கக் கடனுனக்கே
யீசாயெனை யாளாயோ. 12

படுவேன் பாடுபடச்சொன்னால் பாரஞ்
சுமக்கப் பாரமுனக்கே, விடுவேனுசை விடச்
சொன்னால் விதியின்பயன் தன்பயனன்றோ,
சுடுவேன் பாவந் தனையின்று சுடரேயுந்த
னொளியாலே, யிடுவேன் வழக்கு நானு
ன்னை ஈசாயெனை யாளாயோ. 13

3 - வது

# அவஞ சிப்பத்து

வற்ருதபொய்கைவளநாடுகண்டு மலேமே விருந்தகுமரா, உற்ருரெனக்கு வொரு பேரு மில்லே வுமையாள் தனக்கு மகனே, மூத் தாடை தந்து வடியேனையாளு முருகேச ரெந்தன்மனத்தே, வித்தாரமாக மயில்மீதி லேறி வாவேணுமென்றனருகே. 1

ஆலாலமுண்டோன் மகளுகிவந்து வடி யார்தமக்கு முதவி, பாலூர லுண்டு கனி வாய்திறந்து பயனஞ்செழுத்தை மறவேன், மாலானவள்ளி தனைநாடிவந்து வடிவாகி நின்ற குமரா, மேலானவெற்றி மயில்மீதி லேறி வாவேணு மென்றனருகே. 2

திருவாசல்தோறு மருள்வேதமோத சிவ னஞ்செழுத்தைமறவேன், முருகேசரென்று மடியார்தமக்கு முகிலாகிநின்றமுருகா, குரு நாத சுவாமி குறமாது நாதர் குமரேச ரெனறபொருளே, மறவாமல்வெற்றி மயில் மீதிலேறி வரவேணு மென்றனருகே. 3

உதிரந்திரண்டு பனியூராலுண் டுருவாசல் தேடி வருமுன், ததிபோலெழுந்த திரு மேனிநாதர் கடைவீடுதந்து மருள்வாய், மூதிரஞ்சிறந்த வயல்வீறுசெங்கை வடிவே லெடுத்தகுமரா, யதிராய்நடந்து மயில்மீதி லேறி வரவேணுமென்றனருகே. 4

மண்ணாடு மீசன் மகனுரை யுந்தன் மலை வீடுதந்துமருள்வாய், வண்டூரல்பாயும் வய லூரில் செங்கை வடிவே லெடுத்த குமரா, நன்ருக வந்து யடியேனை யாண்டு நல்வீடு தந்த குகனே, கொண்டாடி வெற்றி மயில் மீதிலேறி வரவேணு மென்றனருகே. 5

நீலஞ்சிறந்த குறமாதுவள்ளி நின்பாகம் வைத்தகுமரா, காலனெழுந்து வெகுபூசை செய்து கயிறுமெடுத்து வருமுன், வேலும் பிடித்துவடியார்தமக்குவீராதிவீரருடனே, சாலப்பரிந்து மயில்மீதிலேறி வரவேணு மென்றனருகே. 6

தலைகட்ட நூலின் நிழல்போல நின்றுதடு மாறி நொந்து அடியேன், நிலைகெட்டு யாலும் புவிமீதில்நின்று நெடுமூச்செரிய விதியோ, யலைதொட்டசெங்கை வடிவேற்

கடம்பா வடியேனை யாளு முருகா, மலை யேறிமேவு மயில்மீதி லேறி வரவேணு மென்ற் னருகே. 7

வண்டுண்டு பூவில் மதுவூரல் பாயு வயலூரில் செங்கை வடிவேல், கண்டொன்று சொல்லித் திரிவார்கள்வாசல் கடனென்று கேட்கவிதியோ, வண்டுறுபூவி லிதழ்மேவு வள்ளி தெய்வானைக் குகந்த வேலா, நன்றென்று சொல்லி மயில்மீதி லேறி வரவேணு மென்ற னருகே. 8

விடதூத ரோடி வரும்போது வும்மை வெகுவாக நம்பினேனே, குறமாது வள்ளி விடமாகவைத்து மயிலேறிவந்த செல்வா, திடமாகச் சோலை மலைமீதில் வாழும் திருமால் தனக்கு மருகா, வடமான பழநி வடிவேல்நாதா வரவேணு மென்றனருகே. 9

ஓங்காரசத்தியுமைபால்குடித்து உபதேசமுரைத்தபரனே, பூங்கா்வனத்தி லிதழ்மேவும்வள்ளி புஜமீதிருந்த குகனே, ஆங்காரசூரர் படைவீடு சோர வடிவேல் விடுத்தபூபா, பாங்கான வெற்றி மயில்மீதிலேறி வரவேணு மென்ற னருகே. 10

ஆருறுமாறு வயதானபோது வடியேன் நினைத்தபடியால், வேறேது சிந்தனை நினையாமலுன்ற ஞசாரசங்கமருள்வாய், அசுரேசர்போல எமதூதரென்னைத் தொட்டோட கட்ட வருமுன், மாருது தோகை மயில் மீதிலேறி வரவேணு மென்ற னருகே. 11

கையார வுன்னைத் தொழுதேத்த மனது கபடேதுசற்றுமறியேன், ஐயாவுனக்காளாகும்போது வடியார் தமக்கு மெளியேன், பொய்யான காய மறிவே யொடுங்க உயிர் கொண்டுபோக வருமுன், வையாளி யாக மயில்மீதிலேறி வரவேணுமென்றனருகே.

ஏதேதுஜென்மமெடுத்தேனே முத்தியிந்தப்பிறப்பி லறியேன், மாதாவுந் தந்தை நீ மாதவன் தனக்கு மருகா குறத்தி கணவா, காதோடு கண்ணை யிருளாக மூடி யுயிர் கொண்டுபோக வருமுன், வாதாடி நின்று மயில்மீதிலேறி வரவேணுமென்றனருகே.



4 - வது

# அருணாசலேசுரர் பதிகம்

காப்பு - வெண்பா

கண்ணனும் வண்ணக் கமலனுங் காண்டற்கரிய
அண்ணாமலையா ரடிமீதில்—ஒண்ணார்
துதியுரைக்க நாளுந் துணையா யன்பர்க்குக்
கதியளிக்குந் தும்பிமுகன் காப்பு.

ஆசிரிய விருத்தம்

நீணைவாகிமூல நிலையாகிநேச நிஜரூப
மானவடிவே, மனமாய்கைமூடி யறிவே
கலங்கி மனமும் மயங்கி வெகுவாய், இன
மோடிருந்து வவதிக் குலைந்து எமதூத
ரோடி வருமுன், மனவேகமாக அருணாச
லீசர் வரவேணு மென்ற னருகே. 1

கயிலாய மேரு அதிலாறுவீடு கரைகண்
டதில்லையொருவர், வெயிலானசோதி விளை
யாடும்வீடு வெளிமாய்கையேது மறியேன்,
பயிலானகொம்பிற் பசுங்காயுமாகிப் பழமா
யுதிர்ந்துவிழுமுன், மனவேகமாக அருணா
சலீசர் வரவேணு மென்ற னருகே. 2

நதியோடுதும்பை முடிமீதணிந்து நல மானவெள்ளை விடைமேல், பதியாயிருந்து உமைபாதி கொண்ட பரனேயுன்நாம மற வேன், விதிநாதனேவ எமதூதர்வந்துவெ குவாதை செய்துவிடுமுன், மதியேபுனைந்த அருணாசலீசர்வரவேணுமென்றனருகே. 3

உற்றாருமில்லை யுறவில்லையாரு முறை சொல்லியிப்பவரவே, பெற்றாருமில்லைமறை தேடுகின்ற பிரானே யுன்நாம மறவேன், கற்றாரு மேற்ற வடியா ரிருந்து கனியா யமர்ந்த கனியே, மற்றாருமில்லை அருணாச லீசர் வரவேணு மென்ற னருகே. 4

கொங்கைக் குரும்பை முலைமாத ராசை கொடிதானமோகமதனாற் சங்கற்பமொன்று மறியாமல் வீணே தடுமாறியாவி விடுமுன், திங்கட்கொழுந்து முடிமீதணிந்த சிவனே யுன்நாம மறவேன், மங்கைக்கிரங்கும் அரு ணாசலீசர் வரவேணு மென்ற னருகே. 5

உருவான காய மதிலாறு வீடு உயிரங் கலந்ததேகம், கருவாகி நின்று புவிமீதில் வந்து கபடேது மொன்று மறியேன், குரு

வாகிநின்ற சிவஞானஜோதி குருவேநின்
நாம மறவேன், மருவீசு சோலை அருணாச
லீசர் வரவேணு மென்ற னருகே. 6

பணியாதகோயி லணியாதநீறு பசியாத
சோறுதருவாய், துணியானவாசி சிவஞான
மோன சுகமே யெனக் கருளுவாய், தணி
யாதகோப மூடலோடிருந்து சலியாதமாய்
கைவெளியே, மணியாடுநாத ரருணாசலீசர்
வரவேணு மென்ற னருகே. 7

சூதாகிநின்ற சிவசூத்திரங்கள் சுளுவா
யமர்ந்த சுழியே, பாதாதிகேச மூடலோ
டிருந்து படுகாணி லாடு நடனம், வேதாவு
மாட மதியாட மூவர் விளையாடி நின்ற
வெளியே, வாதாடி நின்ற அருணாசலீசர்
வரவேணு மென்ற னருகே. 8

அடிமூலவட்டமதிலாறுகிட்டம் அதின்
மேலிருந்தபரனே, துடியானசத்தி சிவரூப
வல்லி சுகமான வேத வடிவே, அடியார்க
ளுள்ளத் தெளிவாய் விளங்கு மரனே நின்
நாமமறவேன், வடிவானஜோதி அருணாச
லீசர் வரவேணு மென்ற னருகே. 9

கல்லாலநீழ லினிநால்வர்முன்பு காணாத
யோக நிலையைச், சொல்லாது சொன்ன
மெய்ஞ்ஞானமூர்த்தி சுடராயிலங்கு மரசே,
வல்லாளமன்ன னருமைந்தனாகி வருஞான
மானவடிவே, வல்லாளனுகந்த அருணாச
லீசர் வரவேணு மென்ற னருகே. 10

உரைதங்கி நின்ற வுயிரெங்கு மாதி யுல
கெங்கும் ஏகவடிவாய், கரைகண்ட தில்லை
வெகுகோடி காலங்கலிகாலமாய்கையதனாலே
இரைதேடியாசை பசியான்மெலிந் துயிர்
கண் டியங்கி விழுமுன், வரைதங்கி நின்ற
அருணாசலீசர் வரவேணுமென்ற னருகே.

கட்டளைக்கலித்துறை

கண்மணி யேயைங் கரக்களிற் றைத்தரு
காதலியாப, பெண்மணி யேபுறக் காடுறை
பெம்மணி யேபிறக்குந், திண்மணி யேயன்
பர் தீவினை போக்குந் திதிமணியே, விண்
மணி யேதிரு வண்ணா மலைதிகழ் வேதி
யனே. 12

முற்றிற்று.

5 - வது

திருவண்ணாமலை

# உண்ணாமுலையம்மன் பதிகம்

காப்பு - வெண்பா

ஓங்குபெரும் பாருதவு முண்ணாமுலை யனைமேற்
பாங்குபெறுஞ் செந்தமிழிற் பாவுரைக்க—நீங்கரிய
வெந்துயரெ லாம்போக்கும் வேழமுகன் செய்யதிருக்
கந்தமலர்ச் செஞ்சரணங் காப்பு.

ஆசிரிய விருத்தம்

சீர்கொண்டவாழி மிசைபள்ளிகொண்ட
திருமாலுண்டகமிடை,, யூர்கொண்டநான்
முகனும்பரந்து வுடைகொண்ட சிந்தை
யொடுதே, டேர்கொண்டவன்னி மலைநாதர்
வாம மிழைகொண்ட மின்ன லிடையாய்,
வார்கொண்ட வுண்ணா முலைநாமதேவி வர
வேண்டு மென்ற னருகே. 1

நறவாடரும்பு வனசம்பிறங்கு தனிவாவி
சூழமிளவெண், பிறைநீடுசெஞ்சாடவிகண்
டுறு பெருகுஞ்சிறந்த வெழிலார், நிறை
யோடு நின்ற கிரியும் விளங்க நிலவாவ
வாலை தெடுநான், மறைதேடுமுண்ணா முலை
நாமதேவி வரவேண்டு மென்ற னருகே. 2

கலையாய் மிலைந்த விரிநீருடுத்த கவினார்
புவிப்பெ ணவளொண், டலையாய் விளங்கி
பணவா திசேட சயனஞ்சிரங்க ளொளிருஞ்,
சிலையாய் நீவந்ததனிஞான தீபசிகைகொண்
டளாவுநெடிய, வலைமேவு முண்ணா முலை
நாமதேவி வரவேண்டு மென்றனருகே. 3

பொன்னிற் பரந்த புரவியிற் பொருந்து
புளகுற்ற மாதர் மயலிற், சென்னிக் கண்
வைத்து மருள்வேளை பொய்யில் திரிவே
னைச்சற்றுமிளகாக், கொன்னைச்சொலேனை
கொடுமைக்குளேனை குறைதீரவுண்க ணருளான், மன்னிக்கு முண்ணா முலைநாமதேவி
வரவேண்டு மென்றனருகே. 4

எந்தாய்வினின்க ணிமையோர்பரவு மிம
யந் தரும்பெ ணுமையென், சிந்தா குலங்க
ளடியோ டகழ்ந்து சிதறும்படிச் செய்திரு
வின், பந்தாணரும்பியடியே னுளத்தைப்பரு
கும்பசுங்கிளியென்முன், வந்தாள்கவுண்ணா
முலைநாமதேவி வரவேணுமென்றனருகே.

சற்றூகி னும்மு ளுடையா வுளத்தர் சமு
கத்திலேகி கவிபாடித், தாழ்வுரும லினை

யம்புயங்க ளெனு நின்சரணங்க ளெளியேன்,
வித்தாரமான தமிழ்பாடி ஞான விறன்மேவ
வைத் திடுதிபால், வற்றாத வுண்ணா முலை
நாமதேவி வரவேண்டு மென்ற னருகே. 6
அயனுவி னுங்க ணரிமார னுஞ்சே வர
னோர் மருங்குமிடலி, நயனாரவிந்த மொரு
வாயிரங்க ணகுமிந்திரன்ற னுழியும், உய
மண் பிலங்கொ ளுயிர்தோறு நின்ற னுரு
தேசனன்றியுளவோமயமா துவுண்ணாமுலை
நாமதேவி வரவேண்டு மென்ற னருகே. 7
கறுவீடுதேச மதிலாறுவீடு கடைவீடு
வுச்சிநடுவிற், பெறுவீடு காட்சி மணல்வீடு
கட்டு பிசியேனெடுக்க வசமோ, எரிவீடெ
னச்சொல் இடுகாடு போமு னெளியேன்
முனேகி வருவாய், மறுவீடு முண்ணா முலை
நாபதேவி வரவேண்டு மென்ற னருகே. 8
அரவுண்ட நஞ்ச மதுதீர வென்பு மறு
மங்கையாகி வரவும், பெருநீரி லோலை எதி
ரேற மாறன் பிணியான வெப்பகலவும்,
திருவார்ந்த ஞான வமுதங்கறந்து சீர்காழி
யற்குதவவே, வருசெல்வி யுண்ணாமுலைநாம
தேவி வரவேண்டு மென்ற னருகே. 9

சுழியூடெழுந்த வழல்சோதிநீடு சுவை கண்டு வுன்னுமறிவை, யிழைவாடுகின்ற வெனையா ரெனச்சொ லிடுவே னெவர்க்கு முறவாம், ஒழிவாடுமோன தனிஞானியான வுமையேதி ணீல மிடறேன், வழிபாடு முண்ணாமுலைநாமதேவிவரவேண்டுமென்ற னருகே. 10

அதிகத் துயர்க்குள் பதையேற்கு ஞம அசனத்தையன்றியிலையிப், பதிகத்தை நிற் சரணபங் கயத்தில் பரிவுற்றளிக்கு மெனை யாள், ததியெத் ததிச்சொல கதியைத்தரு முத்தமியே பரைப்பெ ணுமையே, மதி சத்தி யுண்ணாமுலை நாமதேவி வரவேண்டு மென்ற னருகே. 11

கட்டளைக்கலித்துறை

நாயகியே பொற்சுணங்குடற்பைத்தலைநச் செயிற்று, வாயகி,மேற்றுயில் வோனருஞ் சோதரி யேமலர்க்கண், டயமா நுதலாம் பிறையாய் நின்றன் சேவடியிச், சேயகத் தேவைத்திடுதி யுண்ணாமுலை சிற்பரியே. 12

முற்றிற்று.

உ

சிவமயம்

6 - வது

# வேமனானந்தசுவாமி பதிகம்

அறுசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்

ஓங்கார சூத்திர சதானந்த வாரியில்
 ஓரெழுத் தான பரனே
ஓரியாய் நீயெனக் கஞ்செழுத் தொரு செவியி
 லோதிவைத் தவனல்லவோ
ஆங்கார மற்றுசுக மற்றுதுக் கமுமற்று
 ஐம்புலன் பாசமற்று
ஆகாசங்கிடுகிடென் றிடியிடித் தமிர்தமழை
 யாருதா ரத்தில்பொழிய
ரீங்கார நாதமணி விந்துவுக் குள்ளாகி
 யிரவுவுச்சி புருவனடுவின்

இரதிமன் மதன்போல விளையாடு வதைக்க
ராகமிட் டுனதுமூன்னை [ண்டு
வீங்காம னின்றுனது திருவடியின் மகிமை
விகசிப்ப தெக்காலமோ [தனை
வேதாந்தபரமசிவ மெய்ஞ்ஞானமூர்த்தியே
வேமனானந்த குருவே. 1

அறியாத பாலனை யழைத்து புத்திகள்சொ
அன்புவைத் தாள்வதற்கு [ல்லி
ஐயையோ நானுனக் காகாத பாவியோ
அப்பனே யத்வீதனே
மரியாதையாகவெனை ரக்ஷிக்கத்தருணமிது
மாய்கை சம்மர்ரதேவா
மனமகிழ்ந் தின்றைக்கு வாராமல் போன
மடியில்லை போட்டிழுப்பேன் [யோ
பரியாச மென்றுஉன் சிந்தைதனி லிவ்வார்
பாராட்ட வேண்டுவதில்லை [த்தை
பக்தியா யுன்றனை மறவாம லனுதினம்
பாங்குட னிராமயத்தின்
வெரியாகி லும்தந் தகண்டபரி பூரண
விவேகமறி விக்கொணுதோ
வேதாந்தபரமசிவ மெய்ஞ்ஞானமூர்த்தியே
வேமனானந்த குருவே. 2

பஞ்சபூதங்களொடு யானுமொரு பூதமாய்ப்
பட்டகுறை மெத்தவுண்டு
பக்ஷமுடன் கேட்பியா னாகில்சொல் லக்கே
பரமனே பரமயோகி [ளும்
சஞ்சலப்படுகுழியில்கர்மமென்றெண்ணமல்
சந்தோஷ மாய்விழுந்து
சத்ய நிலையின்னதென் றறியாமல்மூடனாய்ச்
சகிக்காம லன்றுகெட்டுக்
கொஞ்சமாகிலுமுனக் கஞ்சலிகைசெய்யாம
குரங்காய் மூழிக்கலாச்சே [ல்
கோணமல்வந்தெனக்குயர்வானவழிகாட்டி
கோரிக்கை யின்படிக்கு
வெஞ்சின மறந்துமக ராஜகம் பீரன்போல்
விந்தைதனில் உட்காரவை
வேதாந்தபரமசிவ மெய்ஞ்ஞான மூர்த்தியே
வேமனானந்த குருவே. 3
எத்தனைபயந்தடிமை சரணமென்றழுதாலு
மென்மே லுனக்குக்கருணை
எள்ளளவிலாதது விதிவசமி தென்னமோ
எப்போது மொருதிட்டமாய்
இத்தனை கடூரகுண மேன்சித்வி லாசனே
யிந்தஜக மாய்கைதன் னுள்

இரவுபகலச்சமற மூச்சத்தில் பத்துவிதமா
இங்கிதக் குயில்கள்பாட [ய்
மூத்தியென் றேசரியை மோக்ஷ வைராக்கிய
மூத்தமிட் டணைவதற்கு
மூட்டாளை யாட்கொண்டு மெய்ஞ்ஞானமறி
மூக்குநுனி மீதில்சதமாய் [வித்து
வத்திலா மணிவிளக் கவியாம லெரியவே
வரமருள வேண்டுமென்று
வேதாந்தபரமசிவ மெய்ஞ்ஞானமூர்த்தியே
வேமனானந்த குருவே. 4

தத்துவக் குப்பையைக் கொளுத்தி தூளித
தண்ணீரில் கலக்கிவிட்டு [மாக்கித்
தனயனுன்னுளாவதற்குஎண்ணங்கொண்டு
தாமத குணத்தைவெட்டிச்
சத்துசித்தொன்ருகி யட்டாங்கயோகநெறி
சாதிக்கவே நாடொறும்
சரணமென் றுனைப்பணியு மடியார்க்கு மடி
சத்யமாய்க் கைமுழங்கி [மையாய்ச்
பத்தரை மாற்றுத் தங்கமாய்த் தங்கமொடு
பரமசிவ நாதசுடராய்ப் [கெம்பாகி
பவழமாய்ப் படிகமாய் நீலமாய்க் கண்கொ
பார்த்ததெல்லாம் பிரமமாய் [ண்டு

வித்துவாய் வித்துநடு மூளையாகி நிற்கவே
விதமருளச் செய்யவேண்டும்
வேதாந்தபரமசிவ் மெய்ஞ்ஞான மூர்த்தியே
வேமனனந்த குருவே. 5

எட்டாத வாசிகொடி மரவுச்சி தனிலேறி
எச்சரிக்கை யாக நின்று
எண் சாண் திருத்தி தனி லெரிகின்ற தீதணி
எங்குமே லாடுபொருளாய் [ய
மூட்டாத காரணம் பசுப்பால் தனை வேண்டி
மூக்கண் ணூருட்டி தலமாய்
மூலையுண்பதற்குமொன் றஞ்சாமலாசையாய்
மும்மலங்களை யொழித்துக்
கட்டாதகட்டுபடு மந்திரமஜெபிப்பர் தமைக்
காரணக் கயிற்றில் கட்டிக்
காடிலா மலைமீதில் வேரிலா மவுனபயிர்
காம்பிலா தரிவாளினல் [சோருக்கி
வெட்டாத வெட்டறுத் தொருநொடியில்
வெறிகொண்டு உண்பதென்றே
வேதாந்தபரமசிவ மெய்ஞ்ஞான மூர்த்தியே
வேமனனந்த குருவே. 6

ஆதியா யந்தமா யந்தநடு வா தியாய்
ஆறுமுக ருத்ராக்ஷமாய்

ஆட்டமாய்ப்பாட்டமாய்வோட்டமாய்நாட்
ஆனந்த குஞ்சிரிப்பாய்ச் [டமாய்
சோதியாய் மின்னலாய் மின்னல்நடு மாசி
சொக்கலிங்கக் கடவுளாய்ச் [யாய்ச்
சோகமாய் மோகமாய்த் தாகமா யென்மனை
சோதிக்க வந்தகனமாய் [தைச்
நீதியாய் நேமமாய் நேமனடு முந்தியாய்
நீரோட்ட வெளிகுமிழியாய்
நீட்டமாய்வாட்டமாய்த் தேட்டமாயெந்நா
நீங்காதா னந்தவடிவாய் [ளும்
வேதியாய்க்கோபியாய்க்கோபமாய வணுவாகி
விண்ணேற விட்டகனியே
வேதாந்தபரமசிவ மெய்ஞ்ஞானமூர்த்தியே
வேமனானந்த குருவே. 7

தன்னைத்தா னறியாமல் நாய்போலுமுளறி
தாரகம் வெளியாகுமோ [னால்
தானென்ற வாணவப் பேயனைக் கொல்லா
தப்பிதங்கள் போகுமோ [மே
பொன்னையும் மண்ணையும் பெண்ணையுமறக்
பொய்மெய்யு மொன்றுகுமோ [காமல்
போதமாய் நாதசங் கீதமணி கேளாமல்
பம்பரம் மேலாடுமோ

என்னையா னறியாமல் தலைவனைக்காணுமல்
எட்டுதிக் கொன்ருகுமோ
எச்சிலென் றமிர்தத்தை யுண்ணுக்கி லுண்
லெந்தனிட பசியாறுமோ [ணும
ஊனைச்சதாகாலமாய்க் கீழ்மேல் துதிக்காம
லுன்னுடைய மனமுருகுமோ
வேதாந்தபரமசிவ மெய்ஞ்ஞானமூர்த்தியே
வேமஞனந்த குருவே. 8

மண்ணுநடு வப்பாகி யப்புதனில் விஷ்ணு
மாய்கைநடு சங்கரனுமாய் [வாய்
மனதுநடு பிர்ம்மமாய் பிர்மநடு ஞானமாய்
மாணிக்கக் கொடிவிளக்காய்க்
கண்ணுநடு ரூபமாய்க் காதுநடு சத்தமாய்க்
கண்டநடு மந்திரமுமாய்க்
கானல்நடுவுந்தலாய் நாந்தல்நடு கானலாய்
காணுத வெண்சாரையாய்ப்
பெண்ணுநடு ஆணுமாய் ஆணுநடுபெண்
பெரிய நாமக்காரனுய்ப் [ணுமாய்ப்
பேயனுய்ப்பித்தனுய் வெறியனுய் ஊமையா
பேரின்ப மவுனநெறியாய் [ய்ப்
விண்ணுநடுவிந்துவாய் விந்துநடுநாதமாய்
விளையாடுகின்ற பரனே

வேதாந்தபரமசிவ மெய்ஞ்ஞானமூர்த்தியே
வேமனனந்த குருவே. 9
சித்தியூரைச்சேர்ந்த போடிமலை குகையிலு
சித்தன்பு மீதில்நாட்டிச் [ட்
சிறிதுநாளின்பதுன் பங்களுட னடிபட்டுச்
சிறியனுன் நாமதியானம்
பத்தியா யுருவேத் துணைக்காண்ப தற்காக
பதினுன்கு லோகமெட்டிப்
பஞ்சபூதங்களை நொடிக்குளுன்னைக் கண்கு
பார்க்கலுற் றருமையனே [ளிரப்
புத்தியுள்ள பிள்ளை என்றெனக் குபதேசம்
புண்டரீ காக்ஷன றியப்
பிரியமாய் நரசிங்க தாசனே கேளென்று
பட்சமென் மீதில்வைத்து
வெற்றிலையும்பாக்கு சுண்ணும்பு மூன்றென்
விவரமருளிட்ட துரையே [ருக
வேதாந்தபரமசிவமெய்ஞ்ஞான மூர்த்தியே
வேமனனந்த குருவே. 10

முற்றிற்று.

---





## 7 - வது

# ஸ்ரீராமர் தோத்திரம்

பூதலத்தை யோரடி யளந்தரூப மான பொற், பாததாம ரைச்சரண் பணிந்து பூஜை செய்குவேன், மாதவ கோவிந்தா ஹரி கேசவா நாராயணு, நாதகீத வேத மந்திர ராமராம ராமனே. 1

சூகரத்தின் வடிவெடுத்த சுந்தரா சவுந்தரா, ஏகலோக நாயகா நீ யெங்குமாய் நிறைந்தவா, மேகமர யளாவி நின்ற வேத ஞானதேசிகா, நாகமீதில் மேவுகின்ற ராம ராம ராமனே. 2

காரணா தாமோதரா கரியநீல வர்ண
னே, பூரணா பயோதரா புராதனா நிராதனா,
வாரணாதி மூலமென்ற போதுவந்த வா
மனா, நாரணா யசோதைபுத்ர ராமராம
ராமனே. 3

வீரசிம்ம உக்கிரமூர்த்த விஜயமீது தசர
தன், பாரில்மைந்தனாகவந்த பஞ்சவர் சகா
யனே, பூரணா கிருபாகரா புதியதூணில்
வந்துமுன், நாரசிம்ம ரூபமான ராமராம
ராமனே. 4

மாமனான கஞ்சனை வளைந்துகொண்டு
கொன்றவா, பூமியுண் டுமிழ்ந்தவா புகழ்
ந்து பொன்னரங்கனே, வாமனசொரூப
னான வாசுதேவ தேவனே, நாமமாயிரம்
படைத்த ராமராம ராமனே. 5

கோடிசூரி யப்பிரகாச கொண்டல்மேக
வண்ணனே, வாடிநொந் திடைந்திடாமல்
வந்தருள் புரிந்தருள், தேடியந்த கன்வெ
குண்டு சீறமேவி லுன்னிடம், நாடிவந்த
போதுகாரும் ராமராம ராமனே. 6

பாவியென்று பேர்கொடாதே பஞ்சபாத
கங்களை, மேவிநூறு குற்றமேசெய் தாலும்

வந்தென் மெய்யினில், காவலாக நீயிருந்து கருணைகொண்டு காரையா, நாவினுல் நிதந் துதிப்பேன் ராமராம ராமனே. 7

தந்திதான்முன் ஞாலமென்ற போது வந் ததிதமாய், வந்துகாத்த தன்றுபோல் வந்துகாப்ப தெந்தநாள், செந்திரு மணுள னை ஸ்ரீ நிவாச நாதனே, நந்திசேக ரன் றரித்த ராமராம ராமனே. 8

மச்சரூப ராகவா வராகரூப ராகவா, கொச்சை ஆய ருக்குகந்து குன்றெடுத்து நின்றவா, பச்சை ஆலினில்துயின்றபச்சை நீல வர்ணனே, ரட்சகா ஸ்ரீ ராகவ ஸ்ரீ ராமராம ராமனே. 9

தானஞ்செய்து மறிகிலேன் தவங்கள் செய்து மறிகிலேன், ஆனவன்ப ரானபேர் கட் கன்னமிட்டு மறிகிலேன், தேனமர் துழாய் கொண்டுன்னை சிந்தைசெய்து மறி கிலேன், நானறிந்த தொன்றுமில்லை ராம ராம ராமனே. 10

கந்தமார் துழாயணிந்த கருடகேச வா ஹனு, சொந்தடிமை யிவனுமென்று ரட்ச

பாத நல்கியே, யிந்தவேளை வந்துரட்சி யேகலோக நாயகா, நந்தகேச வாமுகுந்த ராமராம ராமனே. 11

இல்லறத்தின் மாய்கையாலே யேங்கி னேன் மயங்கியே, புல்லறிவு கொண்டுயா னும் போற்றியான் பணிந்திலேன், அல்ல லற்றகாயமென்றறிந்து வந்திளென்னுளே, நல்லறிவு தந்துரட்சி ராமராமராமனே. ()

சங்குசக்கரந்தரித்த சாருஸ்ரீ நிவாசகா, எங்குமாய் நிறைந்தவா இலங்குமுந்நூல் மார்பனே, மங்குல்மேனி யாயுயர்ந்த மகர குண்ட லாதிபா, ரங்கநாயகா முகுந்த ராம ராம ராமனே. 13

அம்புவேல் விழிமின்னார்கள் ஆசைதன் வலைக்குள்ளே, இன்பசாகரத்தழுந்தி எண் ணமற்ற வஞ்சகன், வம்புகோடி செய்திடி னும் மாயனே பொறுத்திடீர், நப்பினேனு னுன்னடிமை ராமராம ராமனே. 14

ஆழிமீதி னில்துயின்ற அச்சுதாமுன் னுதியில், ஏழு மராமரத்தை யெய்துராவ ணாதிகள், மாளவேசரந்தொடுத்தமாயனே

மகிழ்ந்துயெந், நாளும்நீ யுகந்து காரும் ராமராம ராமனே. 15

குற்றமென்ப தெதுசெய்தாலுங் கொலைகள்செய் திருக்கினும், பெற்றதாய் விகாதமுண்டோ பிள்ளையென்று கொஞ்சுவார், அற்றதன்மை யாவனோ யான்குறைசெய் தாலுமென், நற்றமிழ்க் குகந்துகாரும் ராமராம ராமனே. 16

களபவா சனைமிகுந்த கரியமேக வர்ணனே, துளபமாலி கைப்புனைந்த சுருதிவேத நாயகா, உளமகிழ்ந்து கருணைகொண் டுன்னடிமை யென்றுதான், நளினபாதந் தந்துகாரும் ராமராம ராமனே. 17

சிகரகோபு ரஞ்சிறந்த செய்யவீதி சூழவே, மகரதோர ணஞ்சிறந்த வரிசைமண்டபங்களும், பகரமுற்ற கொடிகளும் பணிந்துதா னயோத்தியின், நகரவாச மாயிருந்த ராமராம ராமனே. 18

வாசமாலி கைப்புனைந்து மண்ணையுண்ட வண்ணனே, கேசவா முராரிநந்த கிருஷ்ணனே மனோகரா, தாசனென்று பாததாம

ரைச்சரண் கொடுத்தருள், ராசவேங்கடேச
ஞன ராமராம ராமனே. 19

கோலினிற் றுயின்றவா குருந்திலேறி
நின்றவா, காலிகன் றுமேய்த்தவாமுன் கஞ்
சனே வதைத்தவா, சாலநான் முகனையுந்தி
தன்னிலே படைத்தவா, நாலுவேத மும்
புகழ்ந்த ராமராம ராமனே. 20

தஞ்சமான தேதுன்பாத தாமரைச் சர
ணமே, மிஞ்சவேறு தப்புமில்லை மேகநீல
வர்ணனே, அஞ்சலஞ்ச லென்றுகை யமர்
த்தியாத ரிப்பையே, ரஞ்சிதப் பிரகாசஞன
ராமராம ராமனே. 21

எண்ணுமன்ப ராணபே ரிடத்திருந்து
லாவியே, புண்ணியநாம தேசிகா புவன
ரக்ஷகர்த்தனே, வண்ணனே லீலாவினோத
வாசனே நின் மலரடி, நண்ணினேன் வை
குந்தமேவும் ராமராம ராமனே. 22

விருந்துசெய்ய வேணுமென்ற விதுரன்
மனையிலேகியே, இருந்துமாய்கை யாகவில்
லிரண்டுதுண்ட மாக்கினுய், பொருந்துமா
யமோமயக்க புண்டரீகமாயனே, நறுந்துள
வம் அணிந்தரங்க ராமராம ராமனே. 23

மாயவாமுன் பாரதப்போர் வந்துதோன் றும் நாளையில், நேயமாய் அருச்சுனர்க்கு நின்றுதேரையூர்ந்தவா, ஆயனே அனந்த மான ஆதிலட்சுமி யெனும், நாயகி மணு ளனுன ராமராம ராமனே. 24

சாடிசெய் துரியோதனன் சபையிலே திரௌபதை, ஆடையன் றுரிந்தபோது ஆதிமூல மென்றிட, வாடிடாமல் மானம் காத்து வனையுமாறுசீலைகள், நாடியொன்று லட்சமாக்கு ராமராம ராமனே. 25

கற்சிலை யெனச்சபித் தகலிகை சாபத்தை யும், உச்சிதம தாகவன் றுகந்தசாபம் நீக்கி னுய், அச்சானகி தன்னைமேவ ஆசை கொண்டு மிதிலையில், நற்சிலை வளைத்து நின்ற ராமராம ராமனே. 26

ஆவல்கொண்டு பாரிலே அலைந்துமே யலாது நின், சேவடிக்காளாய்வராத சென் மமென்ன சென்மமோ, பாவகாரிய மென் றெண்ணுமல் பாதுகாத் தருள்புரி, நாவ லர்க்கு பாய்சுமந்த ராமராம ராமனே. 27

ஏகவஸ்து வாகிநின்ற யெங்கள்ரெங்க நாயகா, சாகரத்தி னிற்றுயின்ற சகஸ்திர

நாம தேசிகா, மோகன சவுந்தரா முராரி மோட்சகாரணா, காகவர்ண ணகிவந்த ராம ராம ராமனே. 28

சானகி மணாளனே தரணியையோ ரடியு மாய், வானமோ டளாவிநின்ற வராகவ தாரனே, நமோ நமோ நாராயணா முகுந்த நந்த கேசவா, ஞானதேசி கப்பிரதாப ராம ராம ராமனே. 29

வேறு

செப்பியே உந்தி பூத்தோன்
 செங்கண்மால் பாதம் போற்றி
முப்பதும் படித்தோர் கேட்டோர்
 முற்றிலும் எழுதி னோர்க்குத்
தப்பிலா வரங்கள் தந்து
 சந்ததி யிளைபெற் றோங்க
இப்புவி தனிலே வாழ்ந்து
 எண்ணமற் றிருப்பர் தாமே. 30

முற்றிற்று.

8 - வது

# ஸ்ரீ ராமர் பதிகம்

பன்னிருசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்

சீர்மேவு மாழ்வார்கள் பன்னிருவ ருன் புகழ் செப்பவும் ராமஜெயமே, திருவடிக் கன்பராய்ச் செல்வமுமுத்தியுஞ்சித்திதரும் ராமஜெயமே, கார்மேகவண்ணனே என்ற திரௌபதையைமுன் காத்திட்ட ராமஜெய மே, கரியாதி மூலமென் றோலமிட முதலை யைக் கண்டித்த ராமஜெயமே, பார்மீதி லுன்பாத தூள்பட் டெழுந்தகலி பரிவான ராமஜெயமே, பாங்கான வேடன் மராமரா வெனப்பதவி பரிந்திட்ட ராமஜெயமே, ஆர்தா னுரைக்கவரு வாருநீதன் நாமத்தை யனுதினமும் ராமஜெயமே, ஐயனேயெனை யாளுமெய்யனே ஸ்ரீமதே ராமாநுஜாய நமவே. 1

விஞ்சுகா ரணியவன ரிஷிகளுக் காதரவு மேவிடும் ராமஜெயமே, மேலான தசரதன் மைந்தனுய்ப் புவிதனில் விரைந்திடும் ராம

ஜெயமே, செஞ்சொன்மொழி ஜனகராஜன் வில்லொடித்து ஜெயம்பெற்றராமஜெயமே, சீதைக்கிரண்டுவரங்கொடுத்துமே யயோத்தியில் சீர்பெற்ற ராமஜெயமே, தஞ்சமென் றனுமன் றனக்குச் சிரஞ்சீவி தந்திட்ட ராமஜெயமே, தந்தைக் குரைத்தசொல் வழுவாது தாரணியில் தரித்தருளும் ராம ஜெயமே, அஞ்சலென் றடியேனை யாதரித் தின்பாத மருள்செயும் ராமஜெயமே, ஐய னே யெனையாளு மெய்யனே ஸ்ரீமதே ராமானுஜாய நமவே. 2

விண்ணொளிய தாகவே நந்தகோபன் மனையில் விளையாடும் ராமஜெயமே, வில் விஜயனுக்கு பகவத்கீதை யோதியே வெற்றிதரும் ராமஜெயமே, கண்ணொளிய தாக வே யன்புடன் கோவுகளை காத்ததும் ராம ஜெயமே, கஞ்சனை வதைத்துடல் கிழித் தெறிந் தனைவர்க்குங் காட்சிதரும் ராமஜெ யமே, கன்றெனசுரனைப் பாய்ந்து குடலைக் கிழித்துமறை கொண்டுவரும் ராமஜெயமே கொற்றவன் தசரதன் பெற்றசீர்மைந்தனே

கோவிந்த ராமஜெயமே, அண்ணலே யுனது திருவடியார்கள் பங்கினிலமர்ந்தருளும் ராமஜெயமே, ஐயனே யெனையாளு மெய்யனே ஸ்ரீமதேராமாநுஜாய நமவே. 3

உற்றமிதிலைப்பதியில்வில்லிரண்டாகவே யொடித்ததும் ராமஜெயமே, உம்பர்தொழு மங்கையை யுணர்ந்துதிரு மந்திர மூவந்தருளும் ராமஜெயமே, கொற்றவர்கள் கண்டுதொழ பரசிராமன்கையில் கொண்டதும் ராமஜெயமே, கோதண்ட வாள்கதா சங்குசக்ராயுத கோபால ராமஜெயமே, மெத்தவரு மூலபல மத்தனையுமேகொன்று வெற்றிபெறும் ராமஜெயமே, மெலிவுற்ற சுக்ரீவனுக்காக வாலியை வீழ்வித்த ராமஜெயமே, அத்தனே யெனையாளுங் கர்த்தனே மெய்ஞ்ஞான மருள்புரியும் ராமஜெயமே, ஐயனே யெனையாளு மெய்யனே ஸ்ரீமதே ராமாநுஜாய நமவே. 4

சோதியே யென்றுமறை வேதியர்களோதவுஞ் சொல்லரியராமஜெயமே, சோம்புடனேவந்த விபீஷணன் குறை தீர்க்கத்

தோன்றிடும் ராமஜெயமே, ஊதியே குழலி
னலேகளத் தளவிலே யுகந்ததும் ராமஜெ
யமே, உயர்கருடன் மீதினி லிலட்சுமி
சமேதன யுலாவிவரும் ராம ஜெயமே,
நீதியே வழுவாமல் அஷ்டாட்சரப் பொரு
ளில் நின்றதும் ராமஜெயமெ, நித்தன
யத்தனய்ச் சுத்தனய் வைகுந்த நிலேகொ
ண்ட ராமஜெயமே, ஆதியே நின்னமம்
ஓதுவோர்க் கெந்நாளு மருள்புரியும் ராம
ஜெயமே, ஐயனே யென்னையாளு மெய்யனே
ஸ்ரீமதே ராமாநுஜாய நமவே. 5

மண்டலம் புகழவே வசுதேவன் மைந்த
னய் வந்தருளும் ராமஜெயமே, மாயாவ
தாரமாய் கோபஸ்திரீ மாரெலா மயல்
பூண்ட ராமஜெயமே, விண்டலம் புகழ்
திருப்பதிகனூற் றெட்டினும் விளங்கின
தும் ராமஜெயமே, வேதவே தாந்தபரி
பூரணதயாபரா மெய்ஞ்ஞான ராமஜெயமே,
கொண்டல்மணி வண்ணனய்ப் பாற்கடலி
லேபள்ளி கொண்டதும் ராமஜெயமே,
கோடானு கோடிபேர் பல்லாண்டுகூறியே

கொண்டாடும் ராமஜெயமே, அண்டர்தின மேதொழும் புண்டரீக பாதனே யரும் பொருளும் ராமஜெயமே, ஐயனே எனே யாளு மெய்யனே ஸ்ரீமதே ராமாநுஜாய நமவே. 6

முப்பத்து முக்கோடி தேவரு முனிவரும் மொழிகின்ற ராமஜெயமே, மூவரும் ராம ஜெயமேயென் றுரைக்கநன் முத்திதரும் ராமஜெயமே, செப்புமந்திரமெலாம் ராம ஜெயமே மார்பில் திருவளரும் ராமஜெ யமே, சீர்கொண்ட ராமஜெயம் ஆர்கண்டு பணிகுவார் சித்திரவொளி ராமஜெயமே, ஒப்பரிய ராமஜெய மெய்ப்பொருளும் ராம ஜெயம் ஓதரிய ராமஜெயமே, உட்சதரும் ராமஜெயம் பட்சதரும் ராமஜெயம் ஓங்கார ராமஜெயமே, அப்பனே ராமஜெயமென்று துதி செய்யவு மன்புதரும் ராமஜெயமே, ஐயனே யெனேயாளு மெய்யனே ஸ்ரீமதே ராமாநுஜாய நமவே. 7

சத்தியும் ராமஜெய முத்தியும் ராமஜெ யஞ் சர்வமும் ராமஜெயமே, சாத்திரமும்

ராமஜெயம் தோத்திரமு மிராமஜெயஞ் சதுர்வேத மிராமஜெயமே, பத்தியும் ராமஜெயம் சித்தியும் ராமஜெயம் பதவியும் ராமஜெயமே, பத்தர்தொழும் ராமஜெயம் சித்தர்தொழும் ராமஜெயம் பலவிதமும் ராமஜெயமே, வெற்றியும் ராமஜெயம் பத்தியும் ராமஜெயம் மெய்ப்பொருளும் ராமஜெயமே, வேள்வியும் ராமஜெயம் ஆவியும் ராமஜெயம் மேல்வீடும் ராமஜெயமே, அத்திமேல் பவனிவரும் நித்யகல்யாணனே ஆனந்த ராமஜெயமே, ஐயனே எனையாளு மெய்யனே ஸ்ரீமதே ராமாநுஜாய நமவே. 8

பாடவறியேன் ராமஜெயமென்று நின் புகழ் பகரவறியேன் ராமஜெயமே, பக்தியாய் ராமஜெய மென்றுனது பாதமலர் பணியறியேன் ராமஜெயமே, தேடவறியேனின்னை ராமஜெயமே யென்று செப்பவறியேன் ராமஜெயமே, தேவர்க்கு முனிவர்க்கும் யாவர்க்கு மரிதான தேனமிர்த ராமஜெயமே, நாடவறியே னின்னை ராமஜெய

மேயென்று தவிலவறிலேயன் ராமஜெயமே,
நாயே னுனக்கடிமை யானேனெனக்கருதி
நல்குவாய் ராமஜெயமே, ஆடரவ முண்ட
பலகோடிபே ருண்டபொருளானந்த ராம
ஜெயமே, ஐயனே யெனையாளு மெய்யனே
ஸ்ரீமதே ராமாநுஜாய நமவே. 9

விரிவாயகண்டபரி பூரணமுமா யெங்கும்
விளையாடு கின்றஜோதி, விண்ணவர்க் கமு
தளித்த வண்ணலே யுன்புகழ் விளம்புதற்
கரிதுகண்டாய், தெரியாமல் நாயே னிடர்க்
கடலி லேலமுழ்கி சிந்தைமிக நொந்துருகி
னேன், தேவாதி தேவனே வைகுந்த வாச
னே செந்தாமரைக் கண்ணனே, பரிவான
வுனதுதிரு வடியே யெனக்குகதி பரமபுரு
ஷாவுனக்குப், பாரமோ துயர்களைய நேர
மோவிவ்வேளை பக்ஷம்வைத்தடியன்மீதில்,
அரியே நமோவேத நாராயணா கிருபை
அருள்புரியும் ராமஜெயமே, ஐயனே எனை
யாளு மெய்யனே ஸ்ரீமதே ராமாநுஜாய
நமவே. 10

சீர்கொண்ட ராமஜெய மென்றுதிரு மந்திரஞ் ஜெபிக்கவறியாம லடியேன், செப்பினேன் ராமஜெய மப்பனே நூற்றெட்டு திருநாம மிராம ஜெயமே, நீர்கொண்ட பாதமிசைமலர்கொண்டுசாத்தியே நித்தமு மிராமஜெயமே, நெஞ்சினி லிராமஜெய மந்திர மூவந்தருளும் நீங்காமல் ராமஜெயமே, கார்கொண்ட திருமேனி ராமஜெய மேயென்னைக் காத்தருளும் ராமஜெயமே, காதலால் ராமஜெய மேயென்று நம்பினேன் கர்த்தனே ராமஜெயமே, ஆர்கண்டு மறியாத மூலமந்திரமான வாதியே ராம ஜெயமே, ஐயனே யென்னையாளு மெய்யனே ஸ்ரீமதே ராமாநுஜாய நமவே. 11

முற்றிற்று.

---

௬





9 - வது

# திருநாமப்பதிகம்

## தனியன்கள்

ஸ்ரீஸைலேஸ தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம், யதீத்ர ப்ரவணம் வந்தே ரம்யஜா மாதரம் முநிம்.

லக்ஷ்மீ நாத ஸமாரம்பாம் நாதயாமுந மத்யமாம், அஸ்மதா சார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்.

யோ நித்ய மச்யுத பதாம்புஜ யுக்மருக்ம [ நே
வ்யாமோஹ தஸ்ததி தராணித்ருணாயமே
அஸ்மத் குரோர்பகவ தோஸ்ய தயைக ஸிந்தோ
ராமாநுஜஸ்யசரணௌ ஶரணம்ப்ரபத்யே.

மாதாபிதா யுவதயஸ் தநயா விபூதிஸ்
ஸர்வம்ய தேவ நியமேந மதந்வயாநாம்

ஆத்யஸ்ய ந꞉ குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம் ப்ரணமாமிமூர்த்நா.

பூதம்ஸரஶ்ச மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலஶேகர யோகிவாஹாந்
பக்தாங்க்ரிரேணு பரகாலயதீந்த்ரமிஶ்ராந்
ஸ்ரீமத்பராங்குஸமுநி ப்ரணதோஸ்மிநித்யம்.

குருமுக மநதீத்ய ப்ராஹவேதா நஶேஷாந்
நரபதிபரிக்லுப்தம்ஶுல்கமாதாதுகாம꞉ [த்
ஶ்வஶுரமமரவந்த்யம் ரங்கநாதஸ்யசாக்ஷா
த்விஜகுலதிலகந்தம்விஷ்ணுசித்தம்நமாமி

## நேரிசை வெண்பா

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூ
ரென்றொருகால், சொன்னார் கழற்கமலம்
சூடினோம்-முன்னாள், கிழியறுத்தா னென்
றுரைத்தோம் கீழ்மையினிற் சேரும், வழி
யறுத்தோம் நெஞ்சமே வந்து.

பாண்டியன்கொண்டாடப் பட்டர்பிரான்
வந்தானென்று, ஈண்டியசங்க மெடுத்தூத-
வேண்டிய, வேதங்களோதி விரைந்துகிழி
யறுத்தான், பாதங்கள் யாமுடைய பற்று.

தனியன்கள் ஸம்பூர்ணம்.

ஸ்ரீ

# திருநாமப் பதிகம்

பன்னிருசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்

ஆதிபரஞ்சோதியா யண்டபகிரண்டமா
யநாதியாய் நின்றநாமம், அடிமுடியி னடு
வாகி எளியவன் களிகூற வன்புவைத் திரு
ந்தநாமம், நீதிநெறி யாகவே மணிபூரகந்
தனில் நிலையாக நின்றநாமம், நேசமுட
னேகருட வாகனமீ தேறியே நின்றுவிளை
யாடுநாமம், வீதிவெளி யாகவே உச்சிமலை
மீதினில் விளக்கொளியில் நின்றநாமம்,
மேலாம் பதத்தையும் நாலாம் பதத்தையும்
விளங்கக்கொடுக்குநாமம், நாதாந்த பேரொ
ளியதாகவேவிளங்கிடு நமோநமோவென்ற
நாமம், நாராயணாஹரி கோவிந்தாவென்று
தினம் நாடிவரு திருநாமமே. 1

ஹரிநமோ வென்றுரைப் போர்க்குமே
பாண்டவர்க்கருளாகி நின்றநாமம், அருச்சு
னர்க்காகவே கதிரோனை மறைத்து நல்லரசு
நிலை வைத்தநாமம், பரிவான கிருஷ்ணவ

தாரத்திற் பூதகிபருத்தமுலை யுண்டநாமம்,
பாரினில்கல்லிணைமிதித்தப்பெண்ணகவே
பண்பருள் புரிந்தநாமம், திருமேவுபிரகலா
தனன்றனக் காகநர சிங்கமுக மானநாமம்.
தேவாதி தேவரை யிடுக்கண்வைத் தோர்க
ளைத் திறைகொண் டிருந்தநாமம், கருவாகி
யுருவாகி திருவாகி மருவாகிக் காட்சிதந்
திட்டநாமம், கரியீச பிரகாச திருநேச
பரவாச கருணைதரு திருநாமமே. 2

முன்னாளிலேசிவன் றிருக்கையிற் பாண
மாய் முப்புர மெரித்த நாமம், முதலைவாய்
சிக்கிய மதகரிக் க்ந்நாளிலாதி மூலமாய்
நின்றநாமம், பொன்னனை ருக்மணி தேவி
கல்யாணத்திற் போராய்த் தலைத்தநாமம்,
பூதப்பிசாசு பில்லிசூனியமுதல் யாவுமே
பொய்யாக்கிவிட்ட நாமம், சின்னபின்னங்க
ளாயிராவணன் சிரசினைத்திட்டமுடனரிந்
தநாமம்,சிரஞ்சீவியாகவே விபீஷணன்றன
க்குமே ஜெயபட்ட மீந்தநாமம், கன்னிவயா
தாகவே கருணை சமுத்திரத்திற் காட்சிதந்
தருளுநாமம், கரியீச பிரகாச திருநேச
பரவாச கருணைதரு திருநாமமே. 3

எண்ணிரண் டாயிர மிடையர்தம் மாத ருக் கிறையாயிருந்த நாமம், இகலோக பர லோக சொர்க்க லோகமுமுத லேகமாய் நின்ற நாமம், மண் ணுக்கும் விண் ணுக்கு மொன்ருகி மாவலியை வன்சிறையில் வைத்தநாமம், மராமரமொருகணையி லுருவவே தொட்டன்று வாலியை வதைத்த நாமம், ஒன்றிற்கு மைநதிற்கும் உண்மைபது வாக வேவுந்தியி லுதிததநாமம், ஓமநமோ நாராயணு பரந்தாமாவென ஓதவே நின்றநாமம், கண் ணுக்கும் நாசிக்கும் நடுவாகவே நின்று காட்சியே தந்தநாமம், கரியீச பிரகாச திரு நேச பரவாச கருணை தரு திருநாமமே. 4

சிலைதனை வளைத்தபின் ஜனகன்மகளான சீதையைமணந்தநாமம், திருவரங்கேசராய் காவேரிவாசராய்த் திருச்சனனமான நாமம் கலையினை யுரிந்திட்ட பாண்டவர்கள் மனைவிக்குக் கருணைதந் திட்டநாமம், காலிக டிரண்டிடக் கானகந் தன்னிலே காவலாய் நின்றநாமம், மலைதனைச் சுமந்தன்று கோக்களினமாளாமல் வருணனை தடுத்தநாமம், மாரீசன் பின்னே திரிந்து மிருகமாக

மானையே யெய்தநாமம், நிலையாத சூரனை வராகவவ தாரமாய் நின்றன்று கொன்ற நாமம், நீலமேகத்தை நிகர்காயாம்பூ வண்ணனெனு நெடியவன் றிருநாமமே. 5

சாலோக சாமீப சாரூபமாகவே சாயுச்ய மான நாமம், சகலகலை வேத புராணங் களுக்கெல்லாம் தயாபரம தான நாமம், பூலோக புவலோக பாதாளமீதிலே புண்ணிய மளித்தநாமம், புவனமது தன்னிலே நாலாறதென்னவேபுராணகலையான நாமம், ஆலோலமாகவே யண்டங்களாயிரத் தெட்டா யளந்தநாமம். அங்குளோ ரிங்குளோ ராகவே யாவர்க்கு மறிவிக்க வந்தநாமம், பரலோகமாகவேபன்னகசயனத்தில்பள்ளி கொண் டிட்டநாமம், பரவாச குருவீச திரு நேச பிரகாச பகவனது திருநாமமே. 6

சுழியான முனையிலே சூக்ஷாதிசூக்ஷமாய்ச் சொல்லியே நின்றநாமம், சொல்காவி யங் களுக்குபகாரமாகவே சொல்லிவைக்க வந்த நாமம், வெளியான வெளியிலே மேலான வீட்டிலே மீதங்கிருந்தநாமம், வித்தாரமா கவேயுத்தாரமோதவே வித்தாரமான நாமம்

ஒழியாததேகமதெடுத்தாலுமுன்செயலுதவி
யாய்நின்றநாமம்,உள்ளூற்றசோதியாய்வெ
ள்ளூற்றகாதலாயுள்ளத்தினின்றநாமம்அழி
யாதபதவியையீந்தெனையெந்நாளுமடிமை
கொண்டிட்டநாமம், ஹரிநமோ நாராயணு
வென்றுரைப்பவர்க்கரியபெருதிருநாமமே.

நாளுந்தன் பாதமுஞ் சேத்துமம் வருங்
காலைத் தற்காத்தே யருள்செய்நாமம், சந்தி
ரன்செல்வாழ்வு தொலையாதபாக்கியஞ் சார்
ந்தூரட்சிக்குநாமம், தேனந்தமாகவே திரு
நாமபோதந் தரிசிக்க வந்தநாமம், திருவவ
தாரமாய்த்தாசானுதாசனுய்ச்செகதலம்பர
வுநாமம், ஆனந்தமாகவே ஓங்காரகம்பமா
யுள்ளுருகி நின்றநாமம், உல்லாசமாகவே
மூவகைத்தோத்ரமே உயிராகிநின்றநாமம்,
ஆனந்தமாகவேயணுவுக்குமணுவாகியசை
வாகிநின்றநாமம்,ஹரிநமோநாராயணுவெ
ன்றுரைப்பவர்க் கரியபெருதிருநாமமே. 8

செய்யாதபாவங்கள் செய்தாலும் நீக்கிடும்
ஸ்ரீராம வென்ற நாமம், தீராத வல்பிணி
கள் மாருத துன்பங்கள் தீர்த்துரட்சிக்குநா
மம், பொய்யான காமப் பெருங்கடல் வீழ்த்

தாதுபுன்பிறவிதீர்க்குநாமம், புண்டரீகாட்சனைக்கண்டுசேவிக்கவே புன்மூறுவல்செய்யுநாமம், மெய்யான கிருபைதரு வைகுந்த வாழ்வினைவீருயளிக்குநாமம், மெய்ஞ்ஞான வழிதந்தே யஞ்ஞானம் நீக்கியே மேன்மைதனை யீயுநாமம், நையாமலே தினமும் நம்பினே னென்றவரை நாடிரட்சிக்கு நாமம், நாராயணுஹரி கோவிந்தா வென்று நாடிவரு திருநாமமே. ௯

ஸ்ரீங்கார மாகவே நூற்றெட்டு திருப்பதி சிறந்தோங்கி நின்றநாமப, தினந்தினமிராமவென் றுரைப்பவர்கள் சிந்தையுட் சிறப்புற்றிருக்குநாமம், நீங்காமலெந்நாளு மதிகதிர் விளக்கமாய் நிரம்பியே நின்றநாமம், நிஜநித்ய மானதொரு பாசத்திய வாசமாய் நிறைவுற் றிருந்தநாமம், பாங்கான பேருடன் வாங்காம லேதினம் பண்பினைக்கொண்டநாமம், பச்சைமா லச்சுதா னந்தகோவிந்தனெனப்பரவுதற்கரியநாமம், ஆங்காரமாகவேதிருநாமமலையி லன்புவைத்திருந்தநாமம், ஹரிநமோநாராயணுவென் றுரைப்பவர்க்கரியபெரு திருநாமமே. (முற்றிற்று.)

10 - வது

# கெருடப்பத்து

ஓம் பூரணனே பதினாறு திங்கள் சேரும் பொருந்தியே யருக்கன்பதி னெட்டுஞ் சேரும், காரணனே கருமுகில் போன் மேனி சேருங் கருணைபெருமஷ்டாட்சரங் கலந்து வாழும், வாரணனே லட்சுமியோ டெட்டுஞ் சேரும் மதிமுகம்போல் நின்றிலங்கு மாயாநேயா, ஆரணனே ரகுராமா கெருடன் மீதில் அன்புடனே யேறிவந் தருள் செய்வாயே. 1

மந்திரமோ அஷ்டசித்து மெட்டுஞ் சேரும் வாழ்கிரக மொன்பதுமே வந்து சேரும், கந்திருவர் கணநாதர் ராசி வர்க்கம் கலைக்கியான நால்வேதங் கலந்து வாழும், நந்திமுதல் தேவர்களுங் கவன யோகம் நமஸ்கரித்துன்பாதம் நாளும்போற்ற. அந்தரமாய் நிறைந்திருக்குங் கெருடன் மீதில் அன்புடனேயேறிவந் தருள்செய்வாயே. 2

மூலமுதலோரெழுத்து நீர்தானுதும் மூன்றெழுத்துமைந்தெழுத்து மொழியலாமோ, சீலமுதல் ஓம்-அங்-உங்-மங்-றிங்கென்றே

சிவனுடைய திருநாமம் நீர்தானாகும், கால
மூதல் ஓம் - அங் - உங்-மங் - றிங்கென்றே
கருணைபெரு மிவ்வெழுத்து நீர்தானாகும்,
ஆலவிஷங் கையேந்துங் கெருடன்மீதில்
அன்புடனேயேறிவந் தருள்செய்வாயே. 3

நவ்வென்றும் கிலியென்றும் ஓம் சிவாய
மென்றும் நமநம சிவசிவ ராராவென்றும்,
சவ்வென்றும் ஓங்கார ரீங்காரமாகித் தவ
மூடைய விவ்வெழுத்தும் நீர்தானாகும், ஒவ்
வென்று ஓம் நமோ நாராயணா வென்று
உன்பாத முச்சரித் துகந்து போற்ற, அவ்
வென்று ரகுராமா கெருடன்மீதில் அன்பு
டனே யேறிவந் தருள்செய்வாயே. 4

உதிக்கின்ற சிவசொரூப முனக்கேயாகும்
ஓம் அவ்வும் உவ்வுங்கிலியுமென்றே, பதிக்
கிசைந்த ஐந்தெழுத்தை வெளியில்விட்டே
பச்சை மூகில் மேனியனே பணிந்தே
னுன்னை, விதிக்கிசைந்த மெய்ப்பொருளே
அரிகோவிந்தா விளக்கொளிபோல் மெய்த்
தவமே விருப்பித் தாதா, அதிற்கிசைந்த
நடப்புரியுங் கருடன்மீதில் அன்புடனே
யேறிவந் தருள்செய் வாயே. 5

வேதமுத லாயிருந்த சிங்கரூபம் விளங்கு
இன்ற விரணியனை வதையேசெய்தாய், பூத
மூதலாம்பிறவும் புண்ணியநேயா புகழ்ந்த
வர்க்குத்துணைவருவாயசோதைபுத்ரா,நாத
முதல் விந்துவா யுயிருக்கெல்லாம் நயம்
பெறவே நிறைந்திருக்கும்வரதபிர்ம, யாத
வன்போல் நிறைந்திருக்குங் கருடன்மீதில்
அன்புடனே யேறிவந்தருள்செய்வாயே. 6
மூக்கோணம் நாற்கோண மொழிந்தைங்
கோண மூச்சுடரே யறுகோண மெண்கோ
ணமாகும், சட்கோண நாற்பத்து மூன்று
கோணம் தந்திரமுஞ்சிதம்பரமுஞ்சகலசித்
தும், இக்கோண மிதுமுதலாய் வகாரமட்
டும் இறையவனுய்த் தானிருந்து ரட்சித்தா
ளும், அக்கோணமீதிருந்து கருடன்மீதில்
அன்புடனேயேறிவந் தருள்செய்வாயே. 7
பச்சைமுகில் மேனியனே யுனக்கேயிந்
தப் பார்தனிலே பத்தவ தாரமுண்டு, மச்ச
மென்றும் கூர்மமென்றும் வராகமென்றும்
வாமனனென்றும் ராமனென்றும்பவுத்தனெ
ன்றும், துஷ்டரையடக்கமோகினி வேடங்
கொண்டாய் தோன்றினுயுன்சொரூப மெல்

லாம் அறிவாருண்டோ, அச்சந்தீர்த்தெனை யாளக் கெருடன்மீதில் அன்புடனேயேறி வந் தருள்செய்வாயே. 8

வேதியனாய்த் தோன்றி வந்தாய் மாப லிக்குவிண்ணவர்க்காய் நரசிங்கரூபமானாய், ஜாதியிலே யாதவனாய்க் கிருஷ்ண னாகத் தானுதித்து வந்திருந்தாய் தரணி வாழ்க, சோதனைகள் பார்த்திடுவோர் துதிப்போர் தம்மைத் துஷ்டரையும் வதைசெய்து லோகமாள்வாய், ஆதிமுத லோரெழுத்தே நீ கெருடன்மீதில் அன்புடனே யேறிவந் தருள்செய் வாயே. 9

மாயவனே ரகுராமா அருகேவாவா வஞ் சனைகள்பறந்தோட நெஞ்சில்வாவா, காயா ம்பூ நிறமுடனே கனவில்வாவா கருமுகில் மேனியனே என் கருத்தில் வாவா, நாய கனே யென்னுவிலிருக்கவாவா நாள்தோறு முன்பாதந் துதிக்க வாவா, ஆயர்குலத் துதித்தவனே கெருடன்மீதில் அன்புட னே யேறிவந் தருள்செய் வாயே. 10

மூப்புரத்தை யெரித்தவனே யிப்போ வாவா முகில்நிறனே ஜகந்நாதா முன்னே

வாவா, எப்பொழுதுந் துதிப்பவர் பங்கில்
வாவா, ஏழைபங்கி லிருப்பவனே யிறங்கி
வாவா,ஒப்பிலாமணிவிளக்கேயொளிபோல்
வாவா ஓம்நமோநாராயணு வுகந்துவாவா,
அப்பனே ரகுராமா கெருடன்மீதில் அன்
புடனே யேறிவந் தருள்செய்வாயே. 11

துளபமணி மார்பழகா சுகத்தைத் தாதா
சுருதியே மெய்ப்பொருளே வரத்தைத் தா
தா, களபகஸ்தூரியனே கடாட்சந் தாதா,
கஞ்சனைமுன் வென்றவனே கருணைதாதா,
பழம்பொருளே சிவஜோதி பாக்கியந்தாதா,
பத்திமுத்தி சித்திசெய்ய வுன்பாதந் தாதா,
அளவிலா மெய்ப்பொருளே கருடன்மீதில்
அனபுடனேயேறிவந்தருள்செய்வாயே. 12

## 11 - வது

## கஜேந்திர மோக்ஷக் கீர்த்தனை

இராகம்-சுருட்டி-ஆதிதாளம், பல்லவி

மூலமென் றழைத்த யானையைக்காத்தருள்
மூகுந்தனைப் பணிநெஞ்சே.

அநுபல்லவி

சீலமேவும்பத் மாசனன்வணங்கும்
திருவரங்கத்தர வணைமிசையுறங்கும்

நீலமேனியனே நிறைபரஞ்சோதி
நித்திய நிர்மல நிராமய ஆதி-மூ

சரணங்கள்

மழையெனமூம்மதம் பொழியும்விகட தட
மத்தகஜங்கள் கோடி-இரு
மருங்குமணியணியாய் நெருங்கித்தொடர்ந்
துவர வனத்தில் நடந்தோடி
எழுகடலாமென யலைகள்பொன்மணிகொ
ழித் தெறியுமடுவைத் தேடி-வண்
டிரைக்கக்கமலம்விண்டு சுரக்குஞ்செந்தே
னிறைந்தினித்த தண்புனல்நாடி
அழகோடிறங்கியதில் முழுகியேபைய
அலைப்புத்தணியப்பல ஜலக்கிரீடைசெய்ய
மூழைநிகர்வாய்திறந் தனல்விழிபெய்ய
முதலைபிடித்தளவிற் கதறியேயுய்ய-மூ
காலனைப்போலுக்ர மானகராவினைக்
கண்டதறோ டேடி-வெகு
காலமணுவளவும் வெறுப்புசலிப்பிலாமல்
கடுமையோ டோடி
ஸ்தூலசரீரமக மேருநிகருடலுஞ்
சுப்பல்போல் வாடிக்-கால்
துவண்டுபராக்கிரமங் குறைந்து நடுங்கிவிழி

சொருகிக் கஜேமூடி
ஞாலமேலெதிர்த்த தீவினைப்பழுது
நமக்கென்றுதலைமிசை துதிக்கைவைத்தழு
து ஓலமிட்டண்ட சராசரமுழுதும்
உடையவனெவனவன் கதிஎன்றுதொழுது
அடுத்துச்செவியில்வந்து நுழைய-அபய
மென்னுமந்தக்குரலைக் கேட்டு-பால்
அலைதவழாழியிற் பெரியபிராட்டியோ
டாடியவிளே யாட்டு
விடுத்துயர்கருடன்மே லேறியாயிரம்படம்
விரித்தெழுமணிச் சூட்டிச்-சேஷ
மெத்தைதுறந்துதிரு மார்பிற்பளபளென
விளங்கியவெழில் காட்டி
வடத்தணி கவுஸ்துவ மசையப்பொன்னு
டை வயங்கப்பசுந்துளபப் பரிமளவாடை
எடுத்திடவுருவஞ்செந் தாமரையோடை
எனச்சிறந்திடக்ஷணத்தொழிந்திடப்பீடை
மிக்கதிர்சூரியனுந்தன் ஒளிமழுங்கிப்பிர
மித்துக்கண்கள் கூச-மூடி
மீதுகவிந்தநவ ரத்னநெடுமகுடம்
விண்ணிடை வெளியில்வீச
எரிமணிப்பிரபைதிகழ் வாகுவாலயமேகத்

திந்திரதனுமிசை யேகக்-கையில்
ஏந்தியபாஞ்ச சன்னியஞ்சக்ராயுத
மிலங்கிடக் கைலாச
வரையுறைசிவன்மூத லோரிதுவென்ன
மாயமோவென்றிறைஞ்சித் திரபன்னத்
திருமுகப்வேர்த்துளங் குறுநகைதுன்னச்
சித்தமிரங்கிக்கிருபை பெருகியேமின்ன-மூ
காதினிற்குண்டல ஜோதியினலிருள்
பாதலத்தகன் றோட-மிகக்
ககனமாமலர்மாரி சொரியத்தேவ
கானங்கின்னரர் பாடக்
கோதறவயிற்றில் ண்வத்திடுசகலாண்டமும்
குலுங்கநான்மறை தேடச்-செழுங்
கொந்துமலர்மாலை சரிந்திடஅந்தர
துந்துபியொலி வெகுவாய்நீட
மாதவர் களித்தாட வேகமொடுசென்று
மரகதமலைபோ லெதிர்நின்று
நீ-திகைத்தஞ்சாதே யஞ்சாதே◌ ◌ன்று
நெடியமுதலை யைக்கொனறு
இடர்தொலைத் தன்று-மூ

முற்றிற்று.





## 12 - வது

### பழநியங்கிரி அறுமுகவர்

# திருநீற்றுப் பதிகம்

### ஆசிரிய விருத்தம்

கொண்டகொண் டிட்டவெகு சொரூபங்
களுக்கழகு கொடுக்கச் சமைந்தநீறு, கொ
டியவெண் ணாயிரஞ் சமணரைக் கழுவினிற்
கொலைசெய்து கண்டநீறு, துண்டகண்டப்
படக் கொடூரவெஞ் சூரனுடல் துணிக்க
வேல் தொட்டநீறு, சொல்லரிய பூதப்
பிசாசுபில்லி சூனியஞ் சுடரிட் டெரித்த
நீறு, செண்டுபோற் கயிலைமலை யெடுத்த
வன் கூன்முதுகு செவ்வையாய் நிமிர்ந்த
நீறு, சிவபக்தி யில்லாத முழுமூடர் நெஞ்
சந் திடுக்கிடக் கொடுத்தநீறு, அண்டநவ

கண்டமுதல் வணங்கித் துதித்திட ஆண் மையாய் வந்தநீறு, அடியவர்க் கருள் கிருபை பொழிபழநி யங்கிரி அறுமுகவர் திருவெண் ணீறே. 1

சம்பந்த ராகவே தென்னவன் கூடலிற் சமணரை யழித்தநீறு, சகலகுரு பரனுக அரனுக்கு வுபதேசந் தானு யுரைத்தநீறு, நம்பின அடியவர்கள் ஈடேற வினையோட நாதனுய் வந்தநீறு, நாற்பத்தெண்ணுயிரம் ரிஷிகன்முனி சித்தர்கள் நம்பியேபூசு நீறு, கம்பமத யானைமா முகவனுக் கிளையவன் கருதியே தந்தநீறு, காலனிட துதனை நாடாம லெந்நாளும் காக்கவே வந்தநீறு, அம்பிகை திரிசூலி சுந்தரி சவுந்தரி அபி ராமி வல்லிதந்த, அடியவர்க் கருள்கிருபை பொழிபழநி யங்கிரி அறுமுகவர் திரு வெண் ணீறே. 2

அரவங்கள் பூதங்கள் மிருகங்கள் பேய் களை அடக்கவே யிட்டநீறு, அஷ்டபாக் கியலட்சுமி யிஷ்டமுட னெந்நாளு மக லாம லிட்டநீறு, இரவுபகல் மறவாமல் முருகர்திருநாமமே யிறைஞ்சித்தரித்தநீறு,

எதிராளி நெஞ்சங் கலங்கிப் பயந்தோட
ஏற்கவே யிட்ட நீறு, பரவுபல் பிணிகளும்
உறவுநெடு தோள்களும் பணிந்தோட
விட்ட நீறு, பஞ்சபாதகமுடன் மிஞ்சிடும்
வல்வினை பணிந்திட வணிந்த நீறு, அரச
னுடன் மந்திரி யாண்புலி வீரரு மதிவசிய
மான நீறு, அடியவர்க்கருள் கிருபை பொழி
பழநியங்கிரி அறுமுகவர் திருவெண் ணீறே.

இருப்பான தலமெலா மென்றுந் துதிப்
பதற் கீடேற்றஞ் செய்யுநீறு, எங்கெங்
கிருந்தாலு மேத்திப் பணிந்திட வெதிராக
நிற்குநீறு, திருப்பரங் குன்றமுஞ் செந்தில்
கதிர்காமமுந் திருச்சோலைக் குகந்தநீறு,
திருத்தணிகை சுவாமிமலை திருவேரகம்
புகழ் செவ்வேளர் தந்தநீறு, பொறுப்புகள்
முடிதொறும் பதகமல முத்திரை புகழ்
பெருக வந்தநீறு, பூசைசெய் யைவராற்
றிருவாவி னன்குடி பேரிக்க வந்தநீறு,
அருட்பாத நத்தியே நினைப்பவர்கள் நெஞ்
சினில் அகலா திருந்தநீறு, அடியவர்க்
கருள்கிருபை பொழிபழநி யங்கிரி அறு
முகவர் திருவெண் ணீறே. 4

நூலைப் பகுத்தவிடை மாதர்க்கு வேலாக நுதலிற்றரித்த நீறு, நூறு நூருயிரமீமிசை வந்தாலு மொருநொடியிற் றுலைக்குநீறு, வேலைக் கடிந்துவெகு சூரர்கள் மடியவே வெற்றிவேல்தொட்ட நீறு, வேதனைச்சிறை யிட்டு பிரணவத் துட்பொருள் விமலர்க்கு ரைத்தநீறு, வாலைப்பருவமாய் வயது நூரு கவேவசியகரமான நீறு, மாருதசெல்வமும் பேருன வாழ்வுடன் வரிசைதர வந்தநீறு, ஆலவாய்ச் சொக்கருடன் ஆனந்தத்தாண் டவம் ஆடிச் செழித்தநீறு, அடியவர்க் கருள்கிருபை பெர்ழிபழநி யங்கிரி அறு முகவர் திருவெண் ணீறே. 5

ஓராறு சென்னியு மீராறு புயமுமென் னுள்ளம் பதிந்தநீறு, ஓதுதமிழ் மதுரையி லூமைபெண்பேசவே உபதேச மான நீறு, காரானைமுகவனுக்கிளையவன் விராலிமலைக் காங்கேயன் தந்தநீறு, கயிலைமலை யொரு நொடியில் அரனை வலமாகவே காணவே வந்தநீறு. நேரான வசுரருங் குன்றமும் வேலாற் பொடிபடத் துணித்தநீறு, பொற் சந்தி மலையிலுறை வள்ளியிட நாயகன்

பொன்னடி வணங்குநீறு, ஆறுடுசெஞ்சடைக் கைலைநாயகனுமைக் கழகுபெறவந்த நீறு, அடியவர்க்கருள்கிருபை பொழிபழநியங்கிரி அறுமுகவர் திருவெண் ணீறே. 6

எத்தேசகாலமும் மூத்தையரென்னுமிவ் வேழைக்கிரங்குநீறு, எழிலானகிருத்திகை தவருமலனுஷ்டிக்கயின்பங்கள் தந்தநீறு, இற்றிடை வள்ளியுடன் இணைப்புணங் காத்திடச் சிவசித்தாய் நின்றநீறு, இற்றாரு வேடர்கள் சிவபக்த ராகவே திருவுருக் கொண்டநீறு, முத்தமிழ்க்காகவே அருணகிரிநாதர்க்கு மோட்சங்கொடுத்தநீறு, முப்பத்துமுக்கோடி தேவாதிதேவரும் முருகனென வந்தநீறு, அத்தனருங் கந்தனுர் நித்தம்விளை யாடவே யகலாமல் விட்டநீறு, அடியவர்க் கருள்கிருபை பொழிபழநியங்கிரி அறுமுகவர் திருவெண் ணீறே. 7

வேதாள பூதப்பிசாசு பில்லிசூனியமிரட்டித் துரத்துநீறு, வெண்டையந் தண்டையொடு கிண்கிணி சிலப்பசைய வீரவேல் தொட்டநீறு, சூதான களபமுலை வள்ளிவிட நாயகன் சுப்பிரமணியர் தந்தநீறு,

தும்புரு நாரதர் இப்புருடர் போற்றித் துலங்கவே வந்த நீறு, ஓதுமுருகாவென்று உள்ளமது குளிரவே உற்றதுணை யான நீறு, ஓம்நமசி வாயகுரு ஞானாதி தேசிகன் ஒளிவாகி வந்த நீறு, ஆதாரமாகவே நெஞ் சினி லெப்பொழுது மறிவாக நின்ற நீறு, அடியவர்க் கருள்கிருபை பொழிபழநி யங் கிரி அறுமுகவர் திருவெண் ணீறே. 8

துஷ்டப் பிசாசுபிணி கிட்டவொட் டாமலே சுடரிட்டெரித்த நீறு, சுற்றவே நிற் கின்ற அஷ்ட திசைபாலரும் சொல்லுமுன வணங்கு நீறு, வட்டமாய்ப்படர்வேகம் பதி னெட்டு குஷ்டமும் வாராமற் பூசு நீறு, வாளரவம் வண்டுகடி சிலந்திதேள் விஷ மெலாம் வாங்கவு மணிந்த நீறு, கொட்ட மிடுசூரரை வெட்டிபலி யிட்டுசெயங்கொள் ளவேவந்த நீறு, கூறுமொழிநற்கீரர் மேன் மைபெற வேல்வாங்கி குன்றைப் பிளந்த நீறு, அஷ்டதிசை பதினாறு முட்கோண சட்கோண மறுபத்து நாலுகலையும், அடி யவர்க் கருள்கிருபை பொழிபழநி யங்கிரி அறுமுகவர் திருவெண் ணீறே. 9

மருமலர்க் கமலத் துதித்தவன் இளைவழி வாழ்விக்க வந்தநீறு, மன்னுபிற மாமுனி அகஸ்தியர்போகருடன் வழிகொள்ளவந்த நீறு, சரணமல ரன்பனுங் குலாலகுலத் திருக்கை தண்டமிட் டுதவுநீறு, சண்முக நதிமூழ்கி கிரிவலம்வந்தோர்க்கு சகலபிணி தீர்த்தநீறு, வறுமைபடு மெளியார்க்குக் கொலைசெய்த பாவற்கும் வருவிரதமொத்த நீறு, வாழ்வுகிர்த் திகைசோம சுக்கிரவா ரஞ்சஷ்டி வந்திப்போர்க் கருளுநீறு, அரு மறைகள்பரவுகுரு சிவசமயந் தழைக்கவே யவதரித் தருளுநீறு, அடியவர்க் கருள் கிருபை பொழிபழநி யங்கிரி அறுமுகவர் திருவெண் ணீறே. 10

பத்தான கவிதையும் மனதிற் றுதிப் போர்க்குப் பாக்கியந் தந்தநீறு, பரிவாக எந்நாளுஞ் சரவண பவாவென்னப் பரிசு பெறவைக்கும்நீறு, கஸ்தூரிகுங்குமங் கமழ் வள்ளிநாயகன்காங்கேயன் தந்தநீறு, கார்த் திகை நாள்தோன்றி வெற்றிவே லாயுதன் கடம்பனூர் தந்தநீறு, மூத்துநவ ரத்தினந் தண்டையணி பாதநன் முடிமேற் றரித்த

நீறு, முழு நீலமயிலேறி வந்துமுன் நின்று மே மூன்கையிற்றந்த நீறு, அத்தனார் பங்கி னிற் சத்துரு சங்காரியாய் அபிராமிவல்லி தந்த, அடியவர்க்கருள்கிருபை பொழிபழநி யங்கிரி அறுமுகவர் திருவெண்ணீறே. 11

வட்டச்சடாட்சரச் சரவணபவாவென்று மதியிற்றுதிக்கும் நீறு, வாதாடிவந்தெதிர்த் திட்ட பூதங்களை மார்பைப் பிளந்தநீறு, இஷ்டமுடன் சரியையொடு கிரியையோக ஞான மேற்கவே தந்தநீறு, இன்பமாகவே கயிலை மலையேறி மோட்சத்தி லிருக்கத் தகுந்த நீறு, எட்டுதிசையதிரமயி லேறியுல கைவல மிமைக்குமுன்வந்த நீறு, இமையவர் முனிவர்கள் தேவேந்திர ளுதியோ ரிட ரழித் திட்ட நீறு, அஷ்ட திசை பெற்றதீ வேழுமீ ரேழுலகை யரசாள வந்த நீறு, அடியவர்க் கருள்கிருபை பொழிபழநி யங் கிரி அறுமுகவர் திருவெண்ணீறே. 12

முற்றிற்று.

13 - வது

# சுப்பிரமணியர் விருத்தம்

மாமேவு நவரத்ன கேயூர மணிமகுட மன்னிப் பொலிந்த மூடியும், வச்சிர நுதற் றிலக வெண்ணீறுமோராறு வதனவிப்பத் தினழகும், பாமேவு பத்தர்க்கு மடைதிறந் தன்பொழுகு பன்னிரு விழிக்கருணையும், பகாரிய பழமறை பழுத்தொழுகு சிறு நகைப் பவளஞ்சிறந்தவாயும், காமேவு சுரகமல பந்தியுஞ் சேவலுங் கனகமயிலுங் கிண்கிணிக், காலுமுந் நூலும்வடி வேலு மென் மேலுமெக்காலுந் துலங்கவருவாய், தாமோதரானந்த கோவிந்தவைகுந்த சரச கோபாலன் மருகா, சதுர்மறைகளேதந்த பரமகுரு வாய்வந்த சரவண பவானந் தனே. 1

கண்கொண்டபூச்சக்ர வாளகோளத்தை யொரு கதிகொண் டெழுந்துசுற்றிக், ககன கூடந்தடவியுக சண்டமாருதக் காலொடு சுழன்றுபின்னி, விண்கொண்ட மேகபட லத்தைச் சினந்துதன் மெய்யன்பனெனவு

கந்து, விடலரவின் மகுடமுடி சடசடென வுதறிநெடுமேருவொடு பாய்ந்துகொத்தித், திண்கொண்ட வல்லசுரர் நெஞ்சுபறைகொட்டத் திடுக்கிட வீடித்து மோதித், திறைகொண்டடித்தமரர் சிறைகொண்டவேணத்திலகுந் திறைகொண்ட மயில்வாகனு, தண்கொண்ட நீபமலர் மாலையணி மார்பனே சரசகோபாலன் மருகா, சதுர்மறைகளே தந்த பரமகுரு வாய்வந்த சரவண பவானந்தனே. 2

துன்னுகயி லாயகிரி மேருகிரி கந்தமலை தோகைமலை கயிலைமலைவான், சோலைமலை மேவிய விராலிமலை மன்னிய சுவாமிமலையுஞ்சிறந்த, சென்னிமலை வேளூர் கடம்பமலை மேலவயல் திருவருணையின் கோபுரம், திருவாவினன்குடி பரங்கிரி திருத்தணிகை சிவாசலந் திருவேரகம், இன்னிலமதிக்குந் திருச்செந்தின்முதலான வெண்ணப்படாத கோடி, எத்தலமு நின்கருணை வைத்து விளையாடல்வித மெத்தனையெனச்சொல்லுவேன்,தன்னை நிகரொவ்வாத பன்னிருகை வேலனே சரசகோபாலன் மருகா, சதுர்

மறைக ளேதந்த பரமகுரு வாய்வந்த சர
வண பவானந்தனே. 3

நதியெங்கு மூழ்கித் தலந்தோறுஞ் சுற்
றியு நல்ல நியமங்கள்செய்தும், நானென்ற
வாணவந் தள்ளினே மென்றுசிவ ஞானங்
கள் பலபேசியும், கதிகொண்ட மவுனியா
யட்டமா சித்தியொடு கற்பந்தனைப் புசித்
துப், கண்ணிறுகமூடிச் சிவானந்தமென்று
செயல் கண்டிருந்தோ மென்னவும், எதி
ரொருவருக்கொருவர் தர்க்கித்து மற்கட்டி
யிப்படி யனந்தகோடி, இதுவல்ல வது
வல்லவென்றுபோராடுவது மென்னவகை
யோவறிகிலேன், சதமென்று வுன்னை நான்
நம்பினேன் நம்பினேன் சரசகோபாலன்
மருகா, சதுர்மறைக ளேதந்த பரமகுரு
வாய்வந்த சரவண பவானந்தனே. 4

நாரதப் பிரமாதி யமரர்கின் னரருரகர்
நாரணன்முதற்பண்ணவர், நடுக்கம்பொருந்
திய இடுக்கண் களைந்திட நடக்குங்குழந்தை
வயதில், சூரபத்மாசுரன் கயமுகன்முருகன்
துன்முகன் பானுகோபன், துட்டகிரவுஞ்
சக்ர வுஞ்சாசுரன் சிங்கனெடு சுற்றிய வரக்

கரையெலாம், கோரசங் காரரண தூளிபட லங்கொண்டு கூருடி யுனது வெற்றிக், கொடியேற விந்திரன் மணிமுடி யேறவா ஞெடுகுடியேற வைத்ததுரையே, தாரணி யின் மேவுபரி பூரணவுல் லாசனே சரச கோபாலன் மருகா, சதுர்மறைக ளோதந்த பரமகுரு வாய்வந்த சரவண பவானந் தனே. 5

சீலமிகு தற்பரனை யுன்னித்த தேகத்தி யானத் தெழுந்து பொங்கிச், சில்லென்று மெய்மறந் தானந்த மவுனஞ் ஜெனிக்கக் குவிந்து கண்ணீர், ஆலிபொழி யக்கருணை யுள்ளங் கனிந்துருக வன்புருக வென்புரு கவே, அங்கங்குழைந்துபுளகிக்க நின்றுரு குவா ரப்படியு மொன்றறிவனோ, காலங் கழித்துண்டு வீணுக்கலைந்துபல காலப்பிர பஞ்சமாயக், கடற்குட் படிந்தே கிடக்கின்ற பாசங் கடக்கும்படிக்கருளுவாய், தாலமுழு துண்டுநிலை கண்டகோ தண்டமால் சரச கோ பாலன்மருகா, சதுர்மறைக ளோதந்த பரமகுரு வாய்வந்த சரவண பவானந் தனே. 6

கல்லா லெறிந்துமுன் னெச்சிலைத்தந்து பின் கண்ணைப் பறித்துவைத்தும், கருதி வசை சொல்லியுஞ் செய்யசிறு மைந்தனைக் கறிசமைத் தூணமைத்தும், வில்லாலடித் துமோர் பாயவிற் றன்னுடைய விரதஞ் செலுத்துவித்தும், வேலையிற் றாளொடு சுழன்றும் பிராணுக்கு மெய்யன்ப னென நடந்தும், நல்லா ரெனப்பேறு பெற்றார்க ளதுபண்டை நாள்செய்த பூசையீச, னன் கிருபை யாமெனக் குன்கிருபை யல்லாது நாடுவது வேறுமுளதோ, சல்லாபவுல்லாச வில்லேறு வல்லாள ச்ரசகோபாலன் மருகா, சதுர்மறைக ளேதந்த பரமகுரு வாய் வந்த சரவண பவானந்தனே. 7

அற்புத மிகப்புகழ் திருப்புகழ் விருப் பொடுசொ லருணகிரி தனையுகந்தாய், அம் புவியிலின்பமுறு கும்பமுனிமுன்புவர வன் புருகு பண்புரைத்தாய், உற்பன வரக்கனெடு சர்ப்பன மனப்பய முடற்றநற் கீரனொரு நாள், வன்சவிலைகை தஞ்சமென நெஞ்சுருக வஞ்சகிர வுஞ்சநேர் கிரிபிளந்தாய், எப்ப டியு முற்படு வினைப்பய னுவப்புமதை யிப்

புவியிலே மறுப்பா, யீதுகலி காலமென் றெண்ண வொண்ணுது நானேழையடியே ஞகையால், தற்பரதயாபர மனோரதமகிழ்ந் துதவு சரசகோபாலன்மருகா, சதுர்மறைக ளோதந்த பரமகுரு வாய்வந்த சரவணபவா னந்தனே. 8

தீராத மாயச் சுகந்தந்த விக்கடுஞ் சென னஞ் செழித்தபின்பு, ஜெகதல மயக்கமதி லேயென் குடித்தனத் தீயமருளோர் வங்க ணம், போராடு சமுசார பாசபந்த மிதிற் போகமடவாரிணக்கப், பொற்றிவாயலைக்கு மீதுள்ளபடி மூன்வினைப் போகந்தொடர் ந்தநெறியால், ஆராலு முடிவுரு தாஞெலித ற்குநல் லறிவென்ற தீபமொன்றுண், டவ் வழியிலேமனஞ் செல்லாம லலேகின்ற வடி யேனை யாட்கொள்ளுவாய், தாரேறு பன் னிரு புயாசலக்கடவுளே சரசகோபாலன் மருகா, சதுர்மறைக்ளோதந்தபரமகுருவாய் வந்த சரவண பவானந்தனே. 9

தருகாம மோகமுறு திமிதிமிங் கலமிக்க தனலோபவனமுதலையாந், தற்கோபமனல் வடவை மூடத்துவப்பரவி சஞ்சலமெனுந்

தரங்கம், அரியவெளி லொருகுமிழி யஞ் ஞான வாரிதியி லலேகின்றஜீவராசி, யத்த னையு மீனின மேமனெரு வீசுவலே யவ்வுயி ரில் யானு மொருவன், கருதரிய பாரப் பெருங்கடல் கடந்தே கடைத்தேற வேணு மென்ருல், கைத்தவலே யில்லேயினி யென் செய்கு வேனுனது காற்றவளே கைப்பற்றி னேன், சரியமர்செய் நெடியபடை சூரகெஜ சிங்கமே சரசகோ பாலன் மருகா, சதுர் மறைக ளேதந்த பரமகுரு வாய்வந்த சர வண பவானந்தனே. 10

தூயபொறி யைந்தைய்யு மடக்கிப் புலாதி கள் சுழல்கின்ற வழிமறித்துச், சுழிமுனே திறந்து மூலாதாரமேலாந் துவாதசாந்தத் தைமூட்டி, வாயுவை யிறுக்கிப் பெலத்து வருகுண்டலியை வவ்விமேற் கொண்டெடுத் து,வாசியை நடத்தியவ் வோசையைத்தா வென்று வழிகொண்டு நாதவெளியில்,தோ யும் பரப்பிரம பூரணவிலாசமது சோதிப்ப தென்னவெளிதோ, தொலேயாது நிலேயாத தாகையா லுன்பதந் துணேயே துணேப்பற் றினேன், தாயக மனேகர மயூரவாகன

முருகா சரசகோபாலன்மருகா, சதுர்மறைக
ளோதந்த பரமகுரு வாய்வந்த சரவணபவா
னந்தனே. 11

கண்ணேறு வாராது பிணியொன்றும்
சேராது கவலைப்படாதுநெஞ்சங், கலியாது
சலியாது நலியாது மெலியாது கலியென்ற
பேயடாது, விண்ணேறு மணுகாது கன்ம
வினை தொடராது விஷமச் சுரம்வராது,
வெய்ய பூதம்பில்லி வஞ்சனைக டொடரா
விஷம்பரவு செந்து மடரா, எண்ணேறு
சனனங்கள் இடையாது காலபயமெள்ளள
வுமே யிராதிவ், வேழைக் கிரங்கி-ருள்
தெய்வமுனையல்லாம லின்னமொரு தெய்வ
முளதோ, தண்ணேறு கங்கைமலை மங்கை
யருடங்கமே சரசகோபாலன்மருகா, சதுர்
மறைகளோதந்த பரமகுரு வாய்வந்த சர
வணபவானந்தனே. 12

முற்றிற்று.



14-வது

# ஆறுமுகசுவாமி விருத்தம்

சந்திரமுருகா நல்ல தந்திரமுருகா ஞான சற்குருநாத முருகா, சாரிமுருகா வறுமை தீருமுருகா சுவாமி சச்சிதானந்த முருகா, சுந்தர முருகா மயிலுகந்தமுருகா எங்கள் சூரசங்கார முருகா, சோதி முருகா ரத்ன வேதி முருகா நிதந்தேவர்க டுதிக்குமுருகா, மந்திரமுருகா என்முன் வந்தமுருகா வரந் தந்து காத்தருளு முருகா, வாருமுருகா கிருபை பாருமுருகா உந்தன் மைந்தனேக் காரு முருகா, அந்த முருகா சத்தி மைந்த முருகா யெங்கு மழகான் நீதிமுருகா, ஆறு முருகா குறை தீருமுருகா பழநி ஆனந்த மான முருகா. 1

செய்யு முருகா ஈராறு கையுமுருகா தேவர் செல்வனுய் வந்தமுருகா, செட்டி முருகா தங்கக்கட்டி முருகாசூல தேவாதி தேவ முருகா, மெய்ம்மைமுருகாமயிலேறுமுருகா செய்தவினை தீர்க்கு நல்லமுருகா, வேலு முருகா யென்னை யாளு முருகா சீஷர் வேண்டுவர மீயுமுருகா, தையன் முருகா அம்பு எய்யுமுருகா கல்வி சகலகலை ஓது

முருகா, ஐயமுருகா சோதி வைய முருகா, வீர அசுரரை நீ வென்ற முருகா, திய்ய முருகா சுயஞ்சோதி முருகா தவத்தோர் தொழுமாதி முருகா, ஆறுமுருகா குறை தீருமுருகா பழநி ஆனந்தமான முருகா. 2

பொன்னு முருகா பாதுகாக்கு முருகா திருப்புகழோதியுன்னை முருகா, போற்று முருகா வனங்காத்த முருகா வள்ளி பொற்புய மணைந்த முருகா, கன்னி முருகா மெய் சொன்ன முருகா யென்கலியெலாம் தீர்த்த முருகா, காந்தி முருகா தணிகை வாழ்ந்த முருகா சிவகைலாச நின்றமுருகா, மன்னர் முருகா பணிமின்ன முருகா வேங்கை மரமாக நின்றமுருகா, மயிலுமுருகா மொழிகுயிலுமுருகா தேவர்மகிழுஞ் சங்கீதமுருகா, அன்ன முருகா பஞ்சவர்ன முருகா வுன்ற னடியவர்க்குதவுமுருகா, ஆறுமுருகா குறை தீருமுருகா பழநி ஆனந்தமானமுருகா. 3

செம்மை முருகா நம்மைக் காக்குமுருகா விருது சேவலங் கொடியு முருகா, செல்வ முருகா வினிய நல்லமுருகா வெங்குஞ்சோதியாய் நின்றமுருகா, நன்மைமுருகாலோக

மேன்மைமுகா திருநாரணன் மருகமுரு
கா, ஞானமுருகா அரிதான முருகா திவ்ய
நாகமணி யானமுருகா, வண்மை முருகா
எனக்குண்மைமுருகாவாமகிழ்ந்தருள் தாரு
முருகா, வாலமுருகா நீபாலமுருகா யானை
முகனுக் கிளையமுருகா, அம்மை முருகா
வள்ளியம்மைமுருகா எந்தன் வேதனை யடி
யோடுகருவறுக்குமுருகா ஆறுமுருகாகுறை
தீருமுருகாபழநி ஆனந்தமானமுருகா. 4

சாரிமுருகா வித்தையுரை செய்யுமுருகா
இதுசமயம் வரமருளுமுருகா, சத்திமுருகா
உமையாள் பெற்றமுருகா இந்த தாரணிபுக
ழோதுமுருகா, கௌரிமுருகா நல்லசரவண
முருகா, என்றன் கிலேசமுந் தீருமுருகா,
கீர்த்திமுருகா சிறை மாற்றுமுருகா மன
துக்கேற்றவரமீயுமுருகா தவனமுருகாவுன்
றன் தயவுமுருகா என்னைக் கடைத்தேறப்
பாருமுருகா, காசிமுருகா முன்னில் பேசு
முருகாவீர கபாலகாலசூலமுருகா, அவனி
முருகா லோகபழநி முருகாதேவர்க் கருள்
மயமான முருகா, ஆறுமுருகா குறை தீரு
முருகாபழநி ஆனந்தமான முருகா. 5

தெள்ளு முருகா குறை சொல்லு முருகா செவியில் கேட்கவில்லையோ முருகா, தேனு முருகாவரம் வேணுமுருகாமயிலில் தெரிசனந்தாருமுருகா, வள்ளல் முருகா பொன்னு வள்ளி முருகா சரணம் வந்துகாத் தருளு முருகா, வாய்த்த முருகா நிதம் போற்ற முருகாஒரு மரமாயிராதேமுருகா, சொல்லு முருகா சுற்றி நில்லுமுருகா ஒளி துலக்க நவரத்னமுருகா, சோலைமுருகாவடி வேலு முருகாவேண்டித் தொழுதவர்க் கருளுமுருகா, அல்லுமுருகா பகல் நல்லமுருகா சாமி யாம்கவிக் குதவுமுருகா, ஆறுமுருகா குறை தீருமுருகா பழநி ஆனந்தமானமுருகா. 6

---

15-வது

# ஆறுமுகசுவாமி

## ஆசிரிய விருத்தம்

ஆறுமுகமும் பன்னிரண்டு கையும் வேலும் அலங்கார வாபரண மணிந்தமார்பும், திருமுகமும் வெண்ணீறும் புனைந்தமெய்யும் செகமெலாம் புகழ்படைத்த சுப்பிரமணியா, முருகா சரவணபவனே கார்த்தி

கேயா முக்கணனார் புத்திரனே உக்ரவேலா, இருவருமே யுனைப் பணிந்தோம் பழநி வேலா இதுசமய மடியாரை ரட்சிப்பாயே.

மயிலேறி விளையாடுஞ் சுப்ரமணியா வடிவேலா வுன்பாதம் நம்பினேனே, உயிரிழந்து அபகீர்த்தி யாகும்வேளை உன்செயலாலிதுசபய முயிரைக்காப்பாய், தயவாக இனிமேலும் உயிரைக் காத்துச் சண்முகமே அடியார்தந் துயரந் தீர்ப்பாய், வைபோகமானமலை பழநிவேலா வரமளித்து உயிர் காத்து ரட்சிப்பாயே. 2

வருந்துமடி யாருயிரைக் காக்குந் தெய்வம் வையகத்தில் வேறொருவ ரில்லையென்று, அறிந்துநான் உனைப்பணிந்தேன் சுப்ரமணியா ஆதரித்துப்பிராணபயம் தீருமையா, திரிந்தலைந்து அறுமூன்று திங்களாகச் சிறையிருந்து தனைப்பூண்டு சின்னமானேன், பறந்துவரு மயிலேறும் பழநிவேலா பண்பாக வுயிர்காத்து ரட்சிப்பாயே.

பெருவேங்கைப் புலிபிடித்த பசுவைப் போலப் பிதுர்கலங்கிமனம்தளர்ந்து புலம்பினேமே, இருவருமே உனைக்கூவச் செவி

கேளாதோ இதுசமயந் தாமதமா யிருக்க
லாமோ,குருவாகித்தந்தையாய் நீயேயாகில்
குமரேசா பிராணபயந் தீருமையா, முரு
கேசா விதுசமயம் பழநிவேலா முன்வந்து
உயிர்காத்து ரட்சிப்பாயே. 4

பாம்பின்வாய் சிக்கியதோர் தேரைபோ
லப் பதைபதைத்துவாடுகிறோம் பாலர்நாங்
கள், தேம்பியேபுலம்புகிறோம் துயரமாகித்
தென்னவனே யுன்செவிக்குக் கேளாதோ
தான், நான்புவியி லுனைநம்பி மகிழ்ந்திருந்
தேன் தாயேனுக் கபாயம்வா நியாயமோ
தான், சாம்பசிவன்புத்திரனே பழநிவேலா
சமயமிது உயிர்காத்து ரட்சிப்பாயே. 5

வலையிலகப் பட்டவுயி ரதுபோல் மயங்கு
கிறோமே வடிவேலா விதுசமயந் துயரந்
தீர்ப்பாய், கொலைகளவு பாதகங்கள் பொய்
யிருந்ததெல்லாம்,கொடும்பழிகள் வஞ்சனை
பில்லி சூனியமெல்லாம், தொலையாத சிறு
பிணிநோய் வல்வினைகளெல்லாம் துரத்து
மையா மயிலேறும் சுப்ரமணியா, மலையி
லுறை வாசனே பழநிவேலா வரமளித்து
உயிர்காத்து ரட்சிப்பாயே. 6

நாகமது கருடனைக்கண் டலைந்தாற்போலே நான்பயந்து அலைதுரும்பாய் அலைகிறேனே, தாகமது தீருமையா தவிக்கும் வேளை சண்முகமே யிதுசமயம் அடியேனுக்கு, மேகமது பயிர்க்குதவி செய்தாற்போலே வேலவனே பிராணபயந் தீருமையா, வேகமுடன் வரவேணும் பழநிவேலா வினை தீர்த்து உயிர்காத்து ரட்சிப்பாயே. 7

பூனைகையில் சிக்கியதோர் கிளியைப்போலப் புலம்புகிறேம் பிராணபய மிகவுமாகி, நானடிமை யும்மைநம்பி யிருக்கும் வேளை நாயகனே பராமுகமாய்ப் பார்க்கலாமோ, மானீன்ற வள்ளியம்மை தெய்வயானை மணவாளாசரவணனே கருணைசெய்வாய், கானமயில் சரவணனே பழநிவேலா கடவுளே உயிர்காத்து ரட்சிப்பாயே. 8

தூண்டிலகப்பட்ட உயிரதுபோல் துடிக்கிறேனே சுப்பிரமணியர் விதுசமய மடியேனுக்கு, வேண்டுவரங் கொடுப்பதற்குப் பார்த்து நீயே வேறொருவ ரில்லையென்று நம்பினேனே, மீண்டுவரும் வினைதீர்த்துத் துயரந் தீர்ப்பாய் வேலவனே சூரசம்மார சங்

காரவேலா, ஆண்டவனே யுனைப்பணிந்
தேன்பழநிவேலா அடியார்களுயிர்காத்து
ரட்சிப்பாயே. 9

நஞ்சுபட்டு விஷமேறி மயங்குமாபோல்
நடுநடுங்கி கிடுகிடென்று பயந்து நாங்கள்,
தஞ்சமென்றே யுனைப்பணிந்தோம் திருத்
தணிகைவாசா சற்குருவே பிராணபயந்தீரு
மையா, பஞ்சகனைச் சிறைவிடுத்துத் தலை
யை வாங்கிப் பரிகரித்துப் பதமேதந்து,
வஞ்சனைகள் செய்யாமல் பழநிவேலா வர
மளித்து உயிர்காத்து ரட்சிப்பாயே. 10

அத்திமுகனே முக்கண்ணனுக் கிளைய
வேலா அறுமுகனே தணிகையிலே அமர்
ந்தவாசா, வித்திறத்திற்பேசாதமூடனானும்
வேலவனே நின்னருளால் கவிதைப்போ
லே, பத்துமே பதிகமாய்ப் பாடிச்சொன்
னேன் என்மீதில்பிழைகள்மனம் பொறுத்
தே யாள்வாய், சத்தியமா யுனைப்பணிந்
தோம் எங்களையா சண்முகனே அடியாரை
ரட்சிப்பாயே. 11

முற்றிற்று.

16 - வது

# தணிகாசலர் பஞ்சரத்தினம்

சீர்புகழும் சென்னைபுரி திருவல்லிக்கேணிநகர் செங்குந்தர் வீதிவாழும், சிவனருள்பாலனே சிவசுப்பிரமணியனே சிவகாமி தவப்புதல்வனே, கார்புகழும் போரூரில் அசுரர்குலம்வேரறக்கண்டித்தகதிர்வேலனே, கனகமயிலேறிவரும் தெய்வயானைப்பாகனே கன்னிவள்ளி நாயகனே, பார்புகழு முனதன்ப ருளங்களித்திட வந்துநீ பன்மைவரந் தந்தபரனே, பங்கயன் சிறைமீட்டி வைத்ததொரு பாகனே பழநிமலை வடிவேலனே, தார்புகழும் மாயனிட தங்கையுட மைந்தனே ஜனகன்மகட்பதி மருகனே, தகதகெண மயிலேறி திருநடனமாடி வருந் தணிகாசலக் கடவுளே. 1

சித்திர விநோதமுடன் திகழான சென்னியும் சிறப்பான பன்னிருகையும், திருமுடியில் மகுடமும் சுட்டியும் பட்டமும் திருநீற்றுக்காப்புமழகும், இரத்தினக் கடுக்கனும் புஜகீர்த்தி பளபளென்ன ரவிதை

கண்டிகை மார்பினில், ரஜிததிருமேனியும் உச்சிதப் பூணூலும் இலட்சணமுகத்தி னழகும், நெற்றியிற்றிலதமும் நிகக்கனவடி வேலு நிறைந்த வொட்டியாண மழகும், நிகரான தண்டையும் நீலமயில் சேர்வை யும் நின்பெருமை சொல்லவெளிதோ, தத் திவருஞ்சூரனைத் தானைத்து நீ யமர்செய்த தயாபரமா ○ திரையே, தகதகென மயிலேறி திருநடனமாடிவருந்தணிகாசல கடவுளே.

ஓராறு முகமாட ஈராறு புயமாட வோ ங்குவடி வேலுமாட, உச்சிதக்குண்டலமும் கச்சித முடியாட ஒளிவான சுட்டியாட, பாராட தண்டையும் பாதச் சிலம்பாடப் பணிந்திடும் பக்தராடப், பன்னிருகரமாடப் பணிந்த பூஷணமாட பவளவெண்குடைக ளாடத், தேர்ராத மயிலாடக் கோழித் துவசமாடத் துலங்குநீர்க் காவியாட, தொண்டர்கள் முதலான சண்டிகேஸ்வர ராட தொந்தநவவீர்ராட, தாராதநவமுனி வர் தானுட நீயாடித் தமியனேன் முன்பு வருவாய், தகதகென மயிலேறி திருநடன மாடிவருந் தணிகாசலக் கடவுளே. 3

தந்தைதாய் தெய்வமும் நீயேகதி யல்லாமல் தற்காக்க வொருவரில்லை, தைரியஞ் சொல்லவும் தாபமது தீர்க்கவும் தரணியி லெவருமில்லை, சந்ததமும் நால்வேத முன்னையே புகழ்ந்து சரணாகதி யென்றவர்க்கு, சாலோக சாமீப சாரூப மேலான சாயுச்சி யந் தந்தகுருவே, வந்தனம் செய்யுமுனை தன்பர்க்கிரங்கிநீ வண்மையுடன் வரமளிப்பாய், வள்ளிதெய் வானையுடன் வாழுமயி லேறியே வரவேண்டு மென்றனருகே, தந்திர முகுந்ததிரு மாயனிட மருகனே தற்பரானந்தபரனே, தகதகெனமயிலேறி திருநடனமாடிவரு‌ந் தணிகாசலக்கடவுளே. 4

நஞ்சுண்ட பரமகுரு வானதொரு தெய்வமே நாதனேகுமாரகுருவே, நாயகாவுனைவிட வேறுதுணை யில்லையெனை யாதரிப்பவருமில்லை, பஞ்சையும்நானென்ன பாவங்கள் செய்தனோ பரதவித்திடவு நீதான், பாரா திருப்பதுந் தர்மமோ வுந்தனைப் பார்த்தவர்க ளேசார்களோ, கொஞ்சமென் றென்னை நீ விட்டுவிட் டாலுங் குழந்தைநான் விடுவதில்லை, கோபமோ யென்மீதிற்

ரூபமோ யென்செய்குவேன் கொத்தடிமை
கொண்ட முருகா, தஞ்சமென் றேயுனைக்
கெஞ்சியே வருந்திடத் தற்காத்தருள் புரிகு
வாய், தகதகென மயிலேறி திருநடனமாடி
வருந் தணிகாசலக் கடவுளே. 5

---

17 - வது

## ஆறுமுகசுவாமி பஞ்சரத்தினம்

திருவருளும் சென்னைபுரி தெய்வப்பிர
காசனே சிவகாமிதவப்புதல்வனே, சிங்கார
வேலனே கதிர்காமத் தையனே தெய்வ
யானை குணநேயனே, மருவுமல ரணிகின்ற
வள்ளிக்குகந்தனே வையாபுரித்தலைவனே,
மயிலேறும் வீரனே சூரசம்மாரனே மாய
வன் தன்மருகனே, தருவிற் பழுத்தகனிக்
காகவொரு நொடியிற்பூ வலம்வந்த சம்மா
ரனே, சங்கரி கொடியிட தவத்தி லுதித்
திடும் சரவணகுருகந்தனே, அருமையுடன்
வருகுவாய் மயிலேறு மையனே கதிர்காம
மூத்தையனே, ஆறுமுக மானதிரு நீறு
வொளியானவரு ளாறுமுகமான் குருவே. 1

சங்கரன் தனக்குமிக வுபதேசஞ் சொல்லியே சகலருக் கமிர்த மீந்தாய், சாட்சாதி வேடர்மகள் வள்ளியின் கொல்லையில் தனி வேங்கை மரமுமாஞய், எங்கும்புகழாகவே யசுரரைச் சம்மரித் திந்திரனுக் குதவிசெய்தாய், ஏகாந்தமாகவே தென்பழநி புரியினி லிடர்தீர்க்க வந்தமுருகா, மங்கள கரமான தணிகைதிருப் போரூரில் வாழ்மயிலந்தனி லமர்ந்தாய், மறுநீதி தவறாத கோடான கோடிபேர் வணங்கிஞேர்க்குதவிசெய்தாய், அங்கமுங் கலங்கியே நொந்துயான் தவிக்கும்வேளை யப்பனே முன்புவருவாய், ஆறுமுகமான திரு நீறுவொளி யானவரு ளாறுமுக மான குருவே. 2

ஏதுமறி யேஞென்று மிணக்கமறியேன் சற்று மிணையடிகள் போற்ற வறியேன், எத்தேசகாலமும் பக்தர்களைப்பூசித் திணக்கத்துடன் தொழுது மறியேன, நீதியறியேன்சுத்த நிட்டையறியேன்சற்றும் நிலைகண்டுபுகழவறியேன், நெடுநாளா யுன்கோயில் வலமாக வந்துநானின்று பூசித்துமறியேன் வேதமறியேன் நூல்விளக்கமறியேன்

பூரண வேதாந்த முடிவுமறியேன், வினை செய்தபாவிக்குத் துணையாக நீவந்து வேண்டின வரந்தருகுவாய், ஆதிவடி வேராச யோகவடி வே நித்திய வருளமுத மானவடி வே, ஐயனே யுனதன்பருக் கருள்தருவாய் ஆனந்த வடிவேலனே, ஆறுமுகமான திரு நீறுவொளி யானவரு ளாறுமுகமான குருவே. 3

ஏனோதான் நான்செய்த பாவவிதி கர்மமோ எளியனிட நோன்புபலனோ, எண்ணுமல் முன்னோரைப் பேசின கர்மமோ எளியோரைப் பழித்தவிதமோ, தானகப் பூமியில் வழக்கோரஞ் செய்தேனோ சத்ராதி கோப முறையோ, தாரணியில் கவிபாடும் புலவரைத் தடுத்தேனோ தாய்க்கு என்பழி செய்தேனோ, மானுசனமிடும் மறையர்குலை செய்தேனோ மங்கையர்கள் சாபமிதுவோ, பாராமல் முன்செய்த பாவத்தை நீக்கியே மைந்தர்க்கு வரந்தருகுவாய், ஆனாலுமெங்கள்முன் வருகுவாய் மயிலேறு மையனே கதிர்வேலவா, ஆறுமுகமான திருநீறுவொளியானவரு ளாறுமுகமான குருவே. 4

வேலு மசைந்தாட வீரகிண் கிணியாட வெண்டையங் குலுங்கி யாட, விதமான காலினிற் றண்டை சிலம்பாட வேதாந்தகு டைகளாட, நாலுமறைகள்பாடக் கோழித் துவசமாட நாதாந்தப்பொருள்களாதி, நாக ரிகமான வீரகெண் டாமணி நடனமிடு மயிலுமாட, பாலர்கள்காவடிகள் கொண்டு புகழ்ந்தாடப் பக்தர்கள் நடனமாட, பாங் கான காவினீ ருடையாட சித்தர்கள் பணி ந்து நிர்த்தனங்களாட, ஆலத்தை யுண்ட வன் புத்திரனே சமரபுரி ஐயனுர் வருக வருக, ஆறுமுகமான திருநீறுவொளியான வரு ளாறுமுகமான குருவே. 5

## 18 - வது

# சண்முகக்கடவுள் பஞ்சரத்தினம்

ஆறுமுகன்காண் பன்னிருகண்ணன்காண் அழகு வேலுடையவன்காண், ஏறுமயில்வாகனன்காண் எளி யவர் துயர் தீர்ப்பவன்காண் என்னிருகண் மணியன் காண், சாறுமடியவர்வினை தீர்ப்பவன்காண் சண்முக வேலவன்காண் சாமிகுருநாதன்காண், பேறுபெரும் போரூர்ப் புண்ணியன்காண் பெம்மான்காண் எந் நாளுமென் மனமுள்ளானே. 1

விண்ணவர் துயர் தீர்த்தவன்காண் வேதியனைச் சிறையில் வைத்தவன்காண், பண்ணினுற் பாடுபவர் பவ மொழிப்பவன்காண் பக்தருளந் தித்திக்கும் செங்கனிகாண், பெண்ணொருத்தி யபயமென வந்த வன்காண் பேயோடாடுபவர் புதல்வன்காண், மண் ணுடர் தொழுதேத்தும் போரூர் மன்னவன்கா ணெந் நாளுமென் மனமுள்ளானே. 2

கன்னிகளிருவரை மணந்தவன்காண் கானகத்தில் வேங்கைமர மானவன்காண், தன்னிகரிலாத தயா பரன்காண் தந்தைக்கொருமொழி யுரைத்தவன்காண், சென்னிமலை வேலவன்காண் செங்கதிர் வேல்பிடித்த செல்வன்காண், இன்னுடர் தொழுதேத்தும் போரூர் ஈசனிவன்கா ணெந்நாளு மென்மனமுள்ளானே. 3

செந்திற்பதிவாழுஞ் செங்கல்வராயன்காண் செங் கண்மால்மருகன், வந்துபணிவோர்க்கருள் தருபவன் காண் வானவர் கோமான்காண், பந்தப்பிறவியறுப்ப வன்காண்பாவலர்க்குகந்தபரமன்காண் கந்தமணக்கும் போரூர்கற்பகங்காண் எந்நாளுமென் மனமுள்ளானே.

வஞ்சகநெஞ்சரை வதைப்பவன்காண் வாதாடுஞ் சூரரை வென்றவன்காண், தஞ்சமென்பாரிடர் தீர்ப் பவன்காண் தானவர்சிறைவிட்டவன்காண், நஞ்சுண்ட கண்டர்க்கு நாயகன்காண் நற்கீரர் பாடலுக்கு நயந்த வன்காண், சஞ்சலந்தீர்க்கும் போரூர் சரவணன்காண் எந்நாளு மென்மன முள்ளானே. 5

---





19 - வது

# காமாட்சியம்மன் விருத்தம்

## காப்பு

### பின்முடுகு வெண்பா

மங்களஞ்சேர் கச்சிநகர் மன்னுங்கா மாட்சிமிசைத்
துங்களமுள நற்பதிகஞ் சொல்லவே—திங்கட்
பயமருவும் பணியணியும் பரமனுளந் தனின்மகிழுங்
கயமுகவைங் கரனிருதாள் காப்பு.

### ஆசிரிய விருத்தம்

சுந்தரிசவுந்தரி நிரந்தரி துரந்தரி சோதி
யாய் நின்ற வுமையே, சுக்கிரவார த்திலுனை
கண்டுதரிசித்தவர்கள் துன்பத்தை நீக்கிவிடு
வாய், சிந்தைதனி லுன்பாதந் தன்னையே
தொழுமவர்கள் துயரத்தைமாற்றிவிடுவாய்

ஜெகமெலா முன்மாய்கை புகழுவென்னலா மோ சிறியனுல்முடிந்திடாது, சொந்தவுன் மைந்தனு யெந்தனை யிரட்சிக்கச் சிறியகட னுன்னதம்மா, சிவசிவ மகேஸ்வரி பரம னிடாசுஸ்வரி சிரோன்மணிமனோன்மணியு நீ, அந்தரிதுரந்தரிநிரந்தரிபரம்பரி யனுத ரட்சகியும் நீயே, அழகான காஞ்சியிற் புக ழாகவாழ்ந்திடு மம்மைகாமாட்சி யுமையே.

பத்துவிரல் மோதிரம் எத்தனை பிரகாச மது பாடகந் தண்டை கொலுசும், பச்சை வைடூரிய மிச்சையா யிழைத்திட்ட பாதச் சிலம்பினொளியும், மூத்துமூக்குத்தியும் ரத் தினப் பதக்கமும் மோகன மாலை யழகும், முழுதுப்வைடூரியப் புஷ்பராகத்தினுல்முடி ந்திட்ட தாலியழகும், சுத்தமா யிருக்கின்ற காதினிற்கம்மலுஞ் செங்கையிற் பொன்கங் கணம், செகமெலாம்விலைபெற்ற முகமெலா மொளியுற்ற சிறுகாது கொப்பி னழகும், அத்திவரதன் தங்கை சத்திசிவ ரூபத்தை யடியனுற் சொல்லதிறமோ, அழகானகாஞ் சியிற் புகழாகவாழ்ந்திடு மம்மைகா மாட்சி யுமையே. 2

கெதியாகவுந்தனைக் கொண்டாடி நினது
முன் குறைதனைச் சொல்லி நின்றும், கொடு
மையா யென்மீதில் வறுமையைவைத்து நீ
குழப்பமா யிருப்பதேனோ, சதிகாரியென்று
நான் அறியாம லுந்தனைச் சதமாக நம்பி
னேனே, சற்றுகிலும்மன துவைத்தென்னை
ரட்சிக்கசாதகமுனக்கில்லையோ, மதிபோல
வொளியுற்ற புகழ்நெடுங் காமுடைய மத
கஜனை ஈன்றதாயே, மாயனிட தங்கையே
பரமனது மங்கையே மயானத்தில நின்ற
வுமையே, அதிகாரியென்று நா னுசையாய்
நம்பினே னன்புவைத் தென்னையாள்வாய்,
அழகான காஞ்சியிற் புகழாக வாழ்ந்திடு
மம்மை காமாட்சி யுமையே. 3

பூமியிற்பிள்ளையாய்ப் பிறந்தும்வளர்ந்து
நான் பேரான ஸ்தலமு மறியேன், பெரி
யோர்கள் தரிசன மொருநாளும் கண்டு
நான் போற்றிக் கொண்டாடி யறியேன்,
வாமியென் றுன்னைச் சிவகாமி யென்றே
சொல்லி வாயினுற் பாடியறியேன், மாதா
பிதாவினது பாதத்தை நாளுமே வணங்கி
யொரு நாளுமறியேன், சாமியென் றேயெ

ண்ணி சதுருடன் கைகூப்பி சரணங்கள் செய்து மறியேன், சற்குருவின் பாதாரவிந் தங்களைக்கண்டு சாஷ்டாங்க தெண்டனறி யேன், ஆமிந்த பூமியி லடியனைப் போல் மூடன் ஆச்சி நீகண்டதுண்டோ,' அழகான காஞ்சியிற் புகழாக வாழ்ந்திடு மம்மை காமாட்சி யுமையே. 4

பெற்றதாயென்றுன்னை மெத்தவும் நம்பி நான் பிரியமா யிருந்தனம்மா, பித்தலாட் டக்காரி யென்று நா னறியாது உன்புருஷ னைமறந்தனம்மா, பத்தனுயிருந்துமுன் சித் தமுமிரங்காமல் பராமுகம்பார்த்திருந்தால், பாலன்யானெப்படிவிசனமில்லாமலேபாங் குட னிருப்ப தம்மா, இத்தனை மோசங்க ளாகாது ஆகாது இதுதர்ம மல்லவம்மா, எந்தனை ரட்சிக்க சிந்தனைக ளில்லையோ யிது நீதி யல்லவம்மா, அத்திமுகனுசையா விப்புத்திரனை மறந்தையோ அதையெனக் கருள்புரிகுவாய், 'அழகான காஞ்சியிற் புக ழாகவாழ்ந்திடு மம்மைகாமாட்சி யுமையே.

மாயவன் தங்கைநீ மரகதவல்லி நீ மணி மந்த்ர காரி நீயே, மாயாசொரூபி நீ மகேஸ்

77336



வரியு மானநீ மலையரையன் மகளானநீ, தாயேமீனாட்சிநீ சற்குணவல்லிநீ தயாநிதி விசாலாட்சிநீ, தாரணியில் பெயர்பெற்ற பெரியநாயகியும் நீ சரவணனையீன்றவளும் நீ, பேய்களுடனாடிநீ அத்தனிடபாகமதில் பேர்பெற வளர்ந்தவளும் நீ, பிரணவசொரூபிநீ பிரசன்ன வல்லிநீ பிரியவுண்ணாமுலையு நீ, ஆதிமகமாயிநீ ஆனந்தவல்லிநீ அகிலாண்ட வல்லிநீயே, அழகானகாஞ்சியிற் புகழாக வாழ்ந்திடு மம்மை காமாட்சியுமையே. 6

பொல்லாத பிள்ளையா யிருந்தாலும் பெற்றதாய் புத்திகளைச் சொல்லவிலையோ, பேய்பிள்ளை யானாலும் தான்பெற்ற பிள்ளையைப் பிரியமாய்வளர்க்கவிலையோ, கல்லாகிலும்மூச்சு நில்லாமல் வாய்விடுங் கதறிநானழுத குரலில், கடுகதனி லெட்டிலொரு கூருவதி லாகிலுன் காதினில் நுழைந்த திலையோ, இல்லாத வன்மங்களென் மீதில் ஏனம்மா இனிவிடுவ தில்லைசும்மா, இருவரும்மடிபிடித்துத்தெருதனில் வீழ்வதுமினி தருமமல்லவம்மா, எல்லாரு முன்னையே

சொல்லியே யேசுவா ரது நீதியல்லவம்மா, அழகான காஞ்சியிற் புகழாக வாழ்ந்திடு மம்மை காமாட்சி யுமையே. 7

முன்னையோர் சென்மாந்திர மென்னென்ன பாவங்கள் மூடனான் செய்தனம்மா, மெய்யென்று பொய்சொல்லி கைதனிற் பொருள்தட்டி மோசங்கள் பண்ணினேனோ, என்னவோ தெரியாது இச்சணந்தன்னிலே யிக்கட்டு வந்ததம்மா, ஏழைநான் செய்தபிழை தாம்பொறுத்தருள்தந்து என் கவலை தீருமம்மா, சின்னங்களாகுது ஜெயமில்லையோ தாயே சிறுநாணமாகுதம்மா, சிந்தைகளென்மீதில் வைத்துநற் பாக்கியமருள் சிவசத்தி காமாட்சிநீ, அன்ன வாகனமேறி யானந்தமாகவுன் னடியன் முன் வந்து நிற்பாய், அழகான காஞ்சியிற் புகழாக வாழ்ந்திடு மம்மை காமாட்சி யுமையே. 8

எந்தனைப் போலவே சென்னம தெடுத்தோர்க ளின்பமாய் வாழ்ந்திருக்க யான் செய்த பாவமோ இத்தனை வறுமையிலுன் னடியேன் தவிப்பதம்மா, உன்னையே துணை

யென் றுறுதியாய் நம்பினே னுன்பாதஞ் சாட்சியாக, உனையன்றி வேறுதுணை யினி யாரையுங் காணேன் உலகதனிலெந்தனுக் குப் பின்னையென் றெண்ணி நீ சொல்லாம லென்வறுமை போக்கடித் தென்னைரட்சி, பூலோக மெச்சவே பாலன் மார்க்கண்டன் போல் பிரியமாய்க் காத்திடம்மா, அன்னை யேயின்னமுன் னடியேனைரட்சிக்க அட்டி செய்யாதேயம்மா, அழகானகாஞ்சியிற் புக ழாகவாழ்ந்திடுமம்மைகாமாட்சியுமையே. 9

பாரதனி லுள்ளளவும் பாக்கியத் தோ டென்னைப் பாங்குட னிரட்சிக்கவும், பத்தி யா யுன்பாதம் நித்தந் தரிசித்த பாலருக் கருள்புரியவும், சீர்பெற்ற தேகத்தில் சிறு பிணிகள் வாராமல் செங்கலிய னணுகாம லும், சேயனிட பாக்கியஞ் செல்வங்களைத் தந்து ஜெயம்பெற்று வாழ்ந்து வரவும், பேர்பெற்ற காலனைப் பின்றொடர வொட் டாமற் பிரியமாய்க் காத்திடம்மா, பிரியமா யுன்மீதில் சிறியனுன் சொன்னகவி பிழை களைப்பொறுத்துரட்சி, ஆறதனில் மணல் குவித் தரியபூசை செய்தவென் னம்மை

யேகாம்பரி நீயே, அழகான காஞ்சியிற் புக ழாகவாழ்ந்திடு மம்மைகாமாட்சி யுமையே.

எத்தனை செனனம தெடுத்தேனே தெரி யாது இப்பூமி தன்னிலம்மா, இனியாகி லுங் கிருபை வைத்தென்னை ரட்சியு மினி ஜனன மெடுத்திடாமல், முத்திதர வேணு மென் றுன்னையே தொழுது நான் முக்கா லும்நம்பினேனே, முன்பின் னுந்தோணுத மனிதரைப் போலநீ முழித்திருக் காதே யம்மா, வெற்றிபெற வுன்மீதில் பத்தியாய் நான்சொன்ன விருத்தங்கள் பதினென் றையும், விருப்பமாய்க் கேட்டுநீ யளித்தி டுஞ் செல்வத்தை விமலனு ரேசப்போரூர். அத்தனிட பாகமதை விட்டுவந்தே யென் னருங் குறையைத் தீருமம்மா, அழகான காஞ்சியிற் புகழாக வாழ்ந்திடு மம்மை காமாட்சி யுமையே. 11

உ

# 20 - வது

# வடிவுடையம்மன்

## ஆசிரிய விருத்தம்

சுந்தரி சவுந்தரி நிரந்தரி துரந்தரி சோதியாய் நின்ற வுமையே, சுக்கிரவாரப் பெருமையுங் கண்டுனது சேர்வையுஞ் சொல்லவும் எளிதாகுமோ, சந்தநிதி யாகி யே செந்தமிழ்ப்புராணியென் சலிப்பெலா மாற்றி யருள்வாய், சற்குணி மெற்குணி நிற்குணி சதுர்வேத சமயமும் மாரிநீயே, சிந்தைமிக நொந்துயான் வந்தகுறை யுந் தன்முன் செப்பவுங் கேட்கவில்லையோ, சேய் பெற்ற தில்லையோ நீதியுணர் வில்லையோ ஜெகமெலாம் பெற்றதாயே, தந்திர முகுந்த னிட தங்கைசிவ மங்கையே தரணிபுக ழொற்றியூர்வாழ், தங்கமலர் நாதர்சடை கங்கையுரு வானகொடி திங்களொளி வான வடிவே. 1

மண்டலந் தன்னிலே கண்கண்ட தெய்வம் நீ மற்றுமொரு தெய்வமுண்டோ, மந்திரப்பேய்களுந் தந்திரச்சூனியமு மற்றுஞ் சத்ராதி பகையும், கண்டுனது பாதமலர் நின்றுதுதி செய்திடக் கலங்கிப் பறந்தோடுமே, கன்மமும் பிணிகளும் வன்மமில்லாமலே கண்டவுடன் தெண்டனிடுமே, இன்று முதலாய்வந்த பண்டுபழி பாவமும் இனிமேல்வரும்வினைகளும், எந்தன்மேல்கணக்காகசிந்தையில் நினைக்காமலியமனணுகாமலருள்வாய், தண்டுளப மாலையணி மார்பனிட தங்கையே தரணிபுகழொற்றியூர் வாழ், தங்கமலர் நாதர்சடை கங்கையுருவானகொடி திங்களொளிவான வடிவே. 2

பாரெலாந் துதிபெற்ற பாதவிரல் மோதிரம் பாடகந் தண்டை கொலுசும், பதிந்தவிடைமீதினி லணிந்தபட்டாடையும்பசும்பொன்னி னொட்டியாணமும், வாரணியுமார்பினில் சரப்பளிபதக்கமும் வச்சிரமணிதாலி யழகும், வையகந் துதிபெற்ற கையினிற் கடகமும் வர்ண நிற மானகிளியும், ஓரொழுகு காதினிற் கம்மலுந் தொடுகொப்

பும் ஜெகமெலாம் நிறைந்த வுருவும், சித்திரவொளி பார்வையும் ரத்தின மூக்குத்தியுஞ் செண்பக மூடித்தகுழையும், தாரணியிலுன்பெருமை சாற்றவெளி தாகுமோ தரணிபுகழொற்றியூர்வாழ், தங்கமலர் நாதர் சடை கங்கையுருவானகொடி திங்களொளிவான வடிவே. 3

தாயது வயிற்றிலே மாயமாய்த் தரித்து நான் தங்கினேனங்குசிலநாள், தாரணியில் வீழ்ந்தபின் புழுதியில் புரண்டுநற் றவிழ்ந்தடி நடந்துசிலநாள், காயமும் வளர்ந்திந்தப்பாரினில் உழன்றுமிகக் காளையாய்த் திரிந்துசிலநாள், காமனால் வதங்கியேயூமைபோல் மயங்கிக் கருத்தது அழிந்து சிலநாள், மாய்கையாலேலோக வாழ்க்கைதனை மெய்யென்று மயங்குதென் மனதிலம்மா, மாறாத பிறவியது யாரா லெடுக்கதரமைந்தன் சுமக்கவசமோ, தாயென்று உன்னை நானம்பினே னருள்புரிவை தரணிபுகழொற்றியூர்வாழ், தங்கமலர் நாதர்சடை கங்கையுரு வானகொடி திங்களொளிவான வடிவே. 4

நற்செய லிலாதவுடை லிச்சைபா டான சுகம் நற்குண மிலாத குறைகள், நான்முக னெனும் பாதகன்செய்த கபடமோ நன்னலப் பெரியோர்செய்த தவமோ, சற்சனர்க ளில்லாத சபையினைப் போலவே தயங்கி மிகவே யிளைத்தேன், தாயேயுன் னாதரவு ஏழைநான் செய்தபிழை தாயலா தார்பொறுப்பார், அர்ச்சனைகள் செய்துதொழு மிச்சையடி யாரினு மாதரத் தொடு புரப்பாய், அன்னையுனை யல்லாது பின்னைவே றில்லையே யநாதரட்சகியுல்லவோ, தற்சொரூபமாயிலகு மச்சுதன் றங்கையே தரணிபுகழொற்றியூர்வாழ், தங்கமலர் நாதர்சடை கங்கையுரு வானகொடி இங்களே! ளிவான வடிவே. 5

நில்லாத சமுசார மாய்கையெனை வந்துதா னித்தமும் வாதிக்குதே, நெஞ்சமது பஞ்சுபோல் அஞ்சுதேசஞ்சலம் நினைவிலே பெரிதாகுமோ, நல்லோரை யெண்ணுமல் பொல்லாச் சினத்தினல் நடுங்கிடப் பேசவருதே, நாவினலுன் புகழையே இயானிக்கவொட்டாமல் நன்னினைவை மாற்றி

விடுதே, கல்லாதபுல்லரிடம் வல்லாண்மை பேசியே காலனுக்குள்ளாகுதே, கள்ளமன தானவிதை நல்லமன தாகிடக் கருணைகடா க்ஷம்வைத்து, கள்ளியென் வறுமைபிணி நல்ல செல்வங்களருள் தரணிபுகழொற்றி யூர்வாழ், தங்கமலர் நாதர்சடை கங்கையுரு வானகொடி திங்களொளிவான வடிவே. 6

பெற்றதாய் தந்தையும் பிறவியு மிருந் தென்ன பிள்ளைபெண்சாதியென்றும், பிரிய மாய்மனிதர்க்கு ளுறவாயிருந்தென்ன பிரா ணனுக் குதவியுண்டோ, நித்தனு ரிடபாக மூத்திதர வேயொளிரு நீலியம்பிகை திரி சூலி, நீங்கவொட்டாமலே தேங்குமூளமல நீக்கி நிலையான பதவியருள்வாய், மெத்த வே நொந்துனது சிற்றடியை நம்பினேன் மிகமவுன மாயிராதே, மேதினியி லுன்னை விட வேறுமொரு தெய்வங்கள் மெய்யான தெய்வமுண்டோ, தத்திமித் தாளமொடு வரும்மலர் தியாகர்மகிழ் தரணிபுகழொற்றி யூர்வாழ் தங்கமலர் நாதர்சடை கங்கை யுரு வானகொடி திங்களொளி வான வடிவே. 7

ஓயாதகவலையுந் தீராதவறுமையும் ஒழி யாத வன்பிணிகளும், உலகெலாம் பகைக ளும் அளவிலா கன்மமும் ஒருவராற் சொல்லவசமோ, பேயாக நானிந்தப் பீடையிற் சிக்கியே பிதற்றவும் பூமிதனிலே, பெண்க ளெனு மாய்கையா லங்கமது வாடியே பிர மையால் மெய்தளர்ந்தேன், தாயென்றும் அலறியழ யேனென்று கேட்கிலாய் தருமமோ வுந்தனுக்குத், தஞ்சமென் றுன்பாதம் நெஞ்சினில் நினைத்தோர்கள் தளர்வரோ தரணி தனிலே, தாயேயிது தர்மமோ மாயனது தங்கையே தரணிபுக ழொற்றி யூர்வாழ், தங்கமலர் நாதர்சடை கங்கையுரு வானகொடி திங்களொளிவான வடிவே. 8

எத்தனை துயரமென் றியம்புவே னம் மம்மா எளியேன்செய் கொடுமை யேதோ, இக்காயமிச்செல்வம் நிலையென்று நம்பியே யிப்படி யெலாந் தளர்ந்தேன், பெற்றதாய் நீயென்று முறையிட்டுவலறிடப் பேசாதிரு ப்பதேனோ, பேச்சியென்றேற்குதவில் தாட் சியேவம்மணி பிள்ளைமேற் கோபமேதோ, அத்திமுக னைப்பெற்ற நித்யகல் யாணியே

அமரர்தொழும் சர்வாணியே, அறியாத
சிறுவன்மே லினியாகி லுளமகிழ்ந் தன்பு
வைத்தருள்புரிகுவாய், தத்துமயில் வாகன
ணைப் பெற்றகௌமாரியே தரணிபுக ழொற்
றியூர்வாழ், தங்கமலர் நாதர்சடை கங்கை
யுரு வானகொடி திங்களொளி வான
வடிவே. 9

படிக்கவறி யேனுனைத் துதிக்க வறியே
னென்னபாதகத்தின்கொடுமையோ, பாட்டு
மறியேன் கவிதை கேட்டுமறியேன் மிக்க
பாவலர்கள் நேசமறியேன், நடுங்கிடக் குரு
வடிவணங்கியறியேன்ச்டில நாதனடிபூசை
யறியேன், நான்மனித னுருவாகி பூமியிற்
சன்மித்து நலமான செல்வ மறியேன்,
கடல்சூழு மிவ்வுலகில் என்போலமூடனைக்
கண்டதுண்டோ வருளுவாய், காமாட்சி
யுந்தனிட பாதமே நம்பினேன் கன்மவினை
யணுகாமலே, தடுத்தடிமை கொண்டெனை
கடைத்தேற வேயருளி தரணிபுக ழொற்றி
யூர்வாழ், தங்கமலர் நாதர்சடை கங்கை
யுரு வானகொடி திங்களொளி வான
வடிவே. 10

மண்ணினி லிருக்களவு மின்றமுத லாக
வும்மனுவொன் றுகேட்பதறியேன், மாருத
செல்வமுந் தேருதகல்வியு மனுநீதி ஞான
வழியுங், கண்ணிலிருநாடாமல் காயமிகவா
டாமல் கைகால்க ளோகாமலே, காலனுக்
கஞ்சாமல் கலியேனுமிஞ்சாமல்கா துசினம்
வாராமலே, பண்ணவே கருமமும் இனிய
வுபகாரமும் பசித்தபேர்க் கமுதுதரவும்,
பாருலகிலுந்தனிட பாதத்தை நம்பினேன்
பட்சம்வைத் திரட்சியம்மா, தண்ணிதழி
மாலையணி தற்பரற் கமுதமே தாணிபுக
ழொற்றி யூர்வாழ், தங்கமலர் நாதர்சடை
கங்கையுரு வானகொடி திங்களொளி வான
வடிவே. 11



21 - வது

# துரோபதையம்மன் விருத்தம்

சீர்பெற்ற வுலகினில் துவாபர யுகத்தினில்
   ஜென்மித்து ஐவராக
செங்கோலுக் கதிபதி தர்மபுத் திரர்பீமர்
   தனஞ்செய னகுலசகாதேவர்
பேர்பெற்ற திரிதராட் டிரன்மைந்தன் துரி
   சூதாடி புவிதோர்த்துதான் [யனுடன்
தேவிபாஞ் சாலியும் ஐவரும் வனவாசம்
   சென்றுதான் பன்னிரண்டு
நேர்பெற்ற அக்யாதம் ஓராண்டுசெல்லவே
   நின்றுதான் விராடபுரத்தில்

நெடியமால் தயவினால் பாரத முடிக்கவே
நிகரிலாப் போர்பொருந்தி [தல்
மார்த்த துரியன்மேல் நின்றுதான் விரிகூந்
வாரியே முடித்தவுமையே
வனர்க்கிளிகதம்பமணி குங்குமவசந்தநெறி
மதிரூப பாஞ்சாலியே. 1

நீடாளும் பாஞ்சாலன் எக்கியந் தன்னிலே
நீயொரு பெண் பிறந்தாய்
நெடியதொருவில் தனைவளைத்தவர் தமக்குநீ
நிச்சயந் தருவனென்றாய்
சோடாக சுயம்வரஞ் சாட்டிய துருபதன்
துரோபதை தனக்குமணமே
சொல்லரிய துரியோதிரராஜனுந்தம்பிமார்
தொல்புவி மன்னவர்களும்
ஆடாத வில்தனை நாணேறிடாமலே
அவமதிப் பிட்டுநிற்க
அப்போது வனவாசம் காட்டினில் திரிந்த
ளைவருந் தானிருக்க [வர்க
வாடாத வில்தனை வளைத்துதானர்ச்சுனன்
மாலைதானிட்டுக்கொண்டார்
வனர்க்கிளிகதம்பமணி குங்குமவசந்தநெறி
மதிரூப பாஞ்சாலியே. 2

தர்மமே நித்தியம் தர்மமே முத்தியும்
தர்மருங் கொலுவிருக்க
தாஷ்டீக வீமனும் அர்ச்சுனனும் நகுல
சகாதேவ னருகிருக்க
வரமுள்ள தேவியுனை ஐவர்க்குப் பாரியாய்
மாதுநீ அருகிருக்க
ஆயிநீ யொருவர்க்கும் பாரியு மல்லகாண்
மற்பொருது பார்க்கவந்தாய்
சாருத்தபோரினில் ஐவரையுங்கொடுவந்து
சபதமே முடித்தவுமையே
சங்கரி சார்வல வுந்தனிட மகிமையான்
சாற்றவே முடியுமோதாண்
வர்மகுண வஞ்சியே மாயோன் சகோதரி
வந்தென்னை ரக்ஷித்திடும்
வனர்க்கிளிகதம்பமணி குங்குமவசந்தநெறி
மதிரூப பாஞ்சாலியே. 3
பஞ்சவரை துரியனும் விருந்துக்கு வாவென்று
பரிவாக வேயழைத்து
பாதகன் சகுனியும் வசனுபி யைக்கலந்து
பரிந்துட னமுதளித்தான்
வஞ்சனை யறிந்துதான் மாயவர் கிருஷ்ணரும்
வண்டாய்ப் பறந்துவந்து

மணிரத்நதீபத்தையணைக்கவேபஞ்சவர்கள்
மனம்வாடி திகைத்து நின்றார்
நெஞ்சினில் கபடமது இல்லாத பீமனும்
நிறைந்த அமுதேயுருட்டி
நெடியமால் தயவினால் பசியாறி பீமனும்
படுகரையால் மூர்ச்சையானார்
வஞ்சியே துளபமணி மாலையர் வயித்யராய்
வந்துபீமருக் குயிரளித்தார்
வளர்க்கிளிகதம்பமணி குங்குமவசந்தநெறி
மதிரூப பாஞ்சாலியே. 4

ஐவரையுங் கொண்டுபோ யரக்குமா ளிகை
லடைத்தான் துரியோதிரன் [யினி
அருகண்டவிலங்கிட்டு அக்கினியைமூட்டி
அப்போது தர்மர்தாமும் [னுண்
செய்யும்வகைஏதென்று தேவரீர்மாயவனை
சிந்தையில் நினைந்தபோது
செந்துளப மாலையர் வந்துதா னைவரையும்
தற்காத்து ரக்ஷித்தனர்
தையலாள் துரோப்தையைச் சபையிலே
தம்பி துற்சாதனன் தான் [கொண்டுவரத்
சற்றுந்தயவில்லாமல் பத்தினி துகில்தனைக்
கத்தரித்தே யுரித்தார்

வையக மளந்தவரை மனத்தினில் நினைந்
   மாளாது துகிலளித்தார் [திட
வனர்க்கிளிகதம்பமணி குங்குமவசந்தநெறி
   மதிரூப பாஞ்சாலியே. 5

பன்னிரண் டாண்டுதான் சென்றுமே வண
   பருகி ய அக்யாதந்தான் [வாசம்
பாராளும் விராடனூர் பக்கலில் ஐவரும்
   பத்தனி மாறுவேடமாய்
தனியாகமயல்கொள கீசகன் தனைக்கொல்ல
   தாஷ்டீக பீமன்றனும்
தாக்கிய அர்ச்சுனன் சண்டைக்கு மாடுபிடி
   சாரதி மாயன்றனும்
பனிசூழும் பாராளும் துரியனூர் பக்கலில்
   பாலகனைத் தூதனுப்ப
பாதிநாடாளவே ஐந்தூருங் கேளுமெனப்
   பகரவே மாயனூர்க்கு
வாணிசூழத்தினு புரந்தனி லேகியே
   மாயவர் தூதுசென்றூர்
வனர்க்கிளிகதம்பமணி குங்குமவசந்தநெறி
   மதிரூப பாஞ்சாலியே. 6

பாரதம் பதினெட்டு நாளுமே சென்றபின்
   பரிவான தருமருக்குப்

பட்டாபி ஷேகமே கட்டியே மகுடமுடி
   பண்பாகவே சூட்டியே
சாரதி யானதொரு மாயவர் வந்துதான்
   சதுர்மறைகள் தானோதியே
சாத்தியேயரசாளும் செங்கோல் செலுத்தி
   தர்மராஜ னென்றுபோற்ற [யே
வீரவா ளுருவியே தம்பிமார் நால்வரும்
   வீரிய மாகநிற்க
வீரதப் பட்டமும் முரசுவல் லாரையும்
   விருதுட னார்ப்பரிக்க
வன்னியேதுரோபதா தான்பட்டபூதேவியு
   வந்துதா னருகிருக்க [ம்
வனர்க்கிளிகதப்பமணி குங்குமவசந்தநெறி
   மதிரூப பாஞ்சாலியே. 7
உலகமது ஆண்டபின் கலிபிறந்தது என்
   ஒன்ருகத் தம்பிமாரும் [று
உமையவள் துரோபதை மகாதேவருஞ்சொ
   உடல்விட்டு வைகுந்தம்போய் [ல்லவே
நிலைமையுடன் தர்மரும் ஒண்டியாய்வைகுந்
   நெடியமால் பாதம்பெற [தம்
நிகரிலா மாயவன் கருடனை யழைத்திமே
   நீஎதி ராகுமென்ருர்

கலமதிற் குலந்தனை விமானத்தில் வைத்து
காட்டினர் வைகுந்தமே [டன்
கலியுகந்தன்னிலே அறியவேயனைவர்க்கும்
கண்கண்ட தெய்வமானீர்
வரம்பெறுமடியார்கள்பங்கிலுறைவஞ்சியே
மாது நீ துரோபதம்மாள்
வனர்க்கிளிகதம்பமணி குங்குமவசந்தநெறி
மதிரூப பாஞ்சாலியே. 8

கொந்தளமுங் கொடிகளும் குமரவர்க் கங்க
கொக்கரித் தண்டமதிர [ளும்
கூட்டமிட் டேயொரு பேய்களும் பூதமும்
குறுமுனிவன் பிசாசுபில்லி
விந்தையாஞ் சாகினி டாகினி மோகினி
திரிசூலி காட்டேரியும்
வீரவீ ரர்களும் ராட்சத கணங்களும்
விடுபட்ட ராவிரிஷியும்
உந்தன்வீரபண்டாரமும் சாட்டியும்மணிக
காணவே திடுக்கிட்டுநான் [ளும்
ஓயம்மேஓயம்மே நோய்ப்போயினேனென்று
ஓடுமே கொக்கரித்து
வந்துநீ அடியேனைக் காத்து ரக்ஷித்திடும்
மகாவீர பாஞ்சாலியே

வனர்க்கிளிகதம்பமணி குங்குமவசந்தநெறி
மதிரூப பாஞ்சாலியே. 9

பத்துமே பக்தியுடன் பாடினே னுன்மீதில்
பராசத்தி துரோபதம்மா
பாஞ்சாலன் கன்னியே வீரமல் லாரியே
பத்தினி பரமேஸ்வரி
நித்தமுமுன் பாதமலர் நினைவிலே நினைந்
நிற்குமோ பாவங்களம்மா [திட
நீலிபாஞ் சாலி நீ கால கபாலியே
நெடியமால் தங்கையம்மா
உத்தமி துரோபதா நித்தியகல் யாணியே
ஓங்கார வீரசத்தி
உல்லாச காமி நீ சல்லாப வாணி நீ
உமையே பாஞ்சாலிகன்னி
வைத்திடும் சித்தமென் வல்வினையை நீக்கி
மகாவீர பாஞ்சாலியே [விடும்
வனர்க்கிளிகதம்பமணி குங்குமவசந்தநெறி
மதிரூப பாஞ்சாலியே. 10

முற்றிற்று.



22 - வது

# மலையனூர் அங்காளம்மன் பதிகம்

சீர்வளரும் மலையனூர் வந்துஜம் பத்தாறு
 தேசமெங்கும் நிறைந்தாய்
திரளானசெல்வமும் மைந்தரும் விஜயமும்
 சேர்ந்தவடி யார்க்களிப்பாய்
தருமதுரை யதிவீரி ரணவீர பத்ரனும்
 சதிரான இருளப்பனும்
சகலவிஜய மூ பெற்ற பாவாடை ராயனும்
 தனதுபரி வாரமுட்னே
அருமைவளர்பூதகண நாதர்புடை சூழவே
 அன்பாய்க் கொலுவிருப்பாய்
ஆயிசுந் தரிவிமலி அம்பிகை யலங்காரி
 அங்கையணி யுங்கபாலி

பொருதுமடி யார்கள்தன் பிணிபறந்தோடி
விபூதியரு ளுங்காளியே [ட
பூங்காவி னீழலுறை ஓங்கார சத்தியே
பூங்காவனத் தாயியே. 1

பாதச் சிலம்பு சதங்கையொடு வண்டயம்
பாடகத் தொனியினழகும்
பட்டாடையணியிடையில்ஒட்டியாணமரை
பளபளப் பின்னலழகும் [யினிற்
சித்தாங்குகளபகஸ்தூரி சவ்வாதுசந்தனம்
சேர்முலைக் கச்சினழகும்
செங்கையிற் கடகமும நவரத்னமணி வயிர
சூட்டுமதி னெற்றியினழகும் [மும்
மேதினியை விலைகொண்ட கண்டசர மங்கி
மேவுமுத் தணியினழகும் [லியம்
மிருதுவச னமும்கொந்த ளக்காதி னெடு
மிகபங்க யத்தினழகும் [கொப்பு
போதுகொண்டுபணியுமடியார்கள்முன்வந்
புரிந்தருளும் அங்காளியே [தருள்
பூங்காவி னீழலுறை ஓங்கார சத்தியே
பூங்காவனத் தாயியே. 2

வாமிநீ காமிநீ மால்சிவனு மயனுநீ
மகிமைபெறு காமாட்சிநீ

மங்கைசிவ காமிநீ மாயவன் றங்கைநீ
மன்னுமரு வங்கிவெளி நீ
கோமள ஸ்வரூபிநீ இரவுநீ பகலுநீ
குருதமசி வாயமும் நீ
கூத்தாடு மீசனொடு கூத்தாடுங் காளிநீ
குலவுபர சிவமும் நீயே
ஓமந்த்ர ரூபிசங் காரிரீங் காரியே
ஒருகையிற் கபாலமும்
ஒருகையிற் சூலமும் ஒருகையிற் பம்பையுங்
கொண்டுவந் தெந்நாளுமே [தரு
பூமிதனி லடியார்கள் வினைதீர்த்து வாழ்வு
புண்ணியப் பெருஞ்செல்வியே
பூங்காவி னீழலுறை ஓங்கார சத்தியே
பூங்காவனத் தாயியே. 3
மாலயனு மீசனும் முப்பத்து முக்கோடி
தானவரும மாமுனிவரும்
வருதிக்குப்பாலரும் வசுக்களும் வயிரவரும்
வாழ்பஞ்ச பாண்டவர்களும்
மேலான சாதனும் கௌரிமுக் கண்ணியும்
வேழமுகவர்க் கிளையனும் [ம்
மெல்லியர்கள் சத்தமே கங்களும் மாதர்களு
வேண்டுபுகழ் மாரிமுத்தும்

கோலா கலத்துடன் உந்தனிட கொலுவுத
கொண்டாடி வந்து நிற்பாய் [னில்
குலவிய அவர்க்கெலாம் பெருமையாய் உன்
கூறுதற் கெளிதாகுமோ [மகிமை
பூலோகம் கலியுகம் தன்னிலே யில்லாத
புதுமையினி வேறுமுண்டோ
பூங்காவி னீழலுறை ஓங்கார சத்தியே
பூங்காவனத் தாயியே. 4

அத்தரும்புகழ்கின்ற தேவியுன் சந்நிதியில்
ஆரார் வந்துபணிவார்
அயிராணி அரம்பையர்கள் ஆதித்தனம்பு
டங்கியெம னிருதிவருணன் [லியோ
மூத்துக் கருப்பண்ணன் குபேர னிவர்கள்
முப்பத்துமுக் கோடிதேவரும்
முன்றந்த வான்மனம் நினைத்தவர மருள்
முதல்வியுன் செயல்வராதாம் [கின்ற
உற்றதுணை நீயெனக் கல்லாமல்வேறில்லை
நாமெனாருபிள்ளை தானல்லவோ
உன்சித்த மென்பாக்யம் நம்பினேன நம்பினே
னுன்மன மிதங்கியேதான்
புத்தியில் லாததா லடியேனை யாளுவது
புண்ணிய முனக்கேவரும்

பூங்காவி னீழலுறை ஓங்கார சத்தியே
பூங்காவனத் தாயியே. 5

முகமாயி ரங்கை யிரண்டா யிரத்தொடு
மூனேகொண்ட படைதாங்கியே
மூவுலகு கொண்டாடும் ரணவீர பத்திரனு
மொருபடை யிருளப்பனும் [னும்
செகமெலாங் கொண்டாடும் பாவாடைராய
செல்விகாட் டேரியுமையும் [னும்
சீரான வுந்தனிட சேனைபரி வாரமும்
சிறப்பாக வேசூழ நீ [நீ
அகமகிழும் எந்தன் மனைதன்னில் வந்தே
யமைந்தே யிருக்கவினைக [லே
னகலா திருக்குமோ முன்ஜென்மந் தன்னி
யான்செய்த குறையேதம்மா
புகழ்பாவு முகசவுந்த்ர பூரண வலங்காரி
பூங்காவி யணிபூஷணி
பூங்காவி னீழலுறை ஓங்கார சத்தியே
பூங்காவனத் தாயியே. 6

வாதிறெடுமொடுபில்லி சூனியம்ஏவலொடு
வைப்புதலை யெரிவுகுட்டம்
வருகுன்மப்பீனிசம் குடைச்சல் வெப்பிருமலொடு
வஞ்சனைசெய் பித்தகாசம் [லொடு

திருபுரி கிரகாதி தோஷங்கள் முன்செய்த
தீவினைக ளிதுகளெல்லாம்
தேவியுன் பேர்சொல்ல சூரியன்கண்டபனி
செய்கைபோ லாகுமம்மா
மாதவன் சகோதரி வல்லாளனைக்கொன்ற
வல்லவி சூலாதரி
மாதேவி சுடலைதனில் நடமாடு முத்தண்டி
வராகி மந்த்ரரூபி
பூதநா யகிசகல வேதநா யகிபரவு
போற்றுமங் காளரூபி
பூங்காவி னீழலுறை ஓங்கார சத்தியே
பூங்காவனத் தாயியே. 7
எல்லைப் பிசாசுகள் கொல்லைப் பிசாசுகள்
யிளகமூ வடியில்வீரன்
எதிருஞ்சடா முனிகள் பிரம்மராக்ஷதிகளும்
இடும்புசெய் குட்டிசாத்தி
புல்லறிவு மோகினி ரத்தசா முண்டியொடு
பூதவேதாள மெல்லாம்
விபூதிகொண்டெறியவே அலறியேவோடி[டும்
உன்புதுமை எவரும்புகழ்வார்
கல்லாதநாயினேன் செய்தபிழைபொறுத்து
கடாக்ஷண்ய மருள்காரணி

சகலபரி பூரணி நாரணி யாரணி
காமியபி ராமிவாமி
பொல்லாத லோபர்தம் பக்கஞ்சென் றவர்க
போற்றாமல் வாழ்வுதருவாய் [ளைப்
பூங்காவி னீழலுறை ஓங்கார சத்தியே
பூங்காவனத் தாயியே. 8

தந்திரமறியே னுரைசெய் மந்திரமறியேன்
தவங்களொடு தேகமறியேன் [மிகு
தண்மலரெடுத்தடியில் அர்ச்சிக்கவறிகிலே
சம்ப்ரதா யங்களறியேன் [ன்
சிந்தையுறுபத்தியாய் போற்றவறியே னுன
செந்தமிழை யோதவறியேன் [து
சித்தம்வைத்தாளுவது உந்தனுக்கேகடன்
செப்பியான் என்செய்குவேன்
சந்திரசேகரிகௌரி ஜடாதரி மூக்கண்ணி
சாம்பவி வராகிநீலி
தாயி மகம்மாயி சதுர்வேதி கிருபாகரி
சாமுண்டி காகபாலி
புத்திமகிடன்வாழ முத்திதாண் டவஞ்செய்
பூம்பாத கமலநிமலி [த
பூங்காவி னீழலுறை ஓங்கார சத்தியே
பூங்காவனத் தாயியே. 9

உலகில்புகழாசமம் முனிவோர்களறிகின்ற
வறுபத்து நாலுகலையு [ண்
மானதொண் ணூற்ருறு தத்துவம்பதினெ
புராணமு மாரணங்களும்
நலமுள்ள நான்மறைப் பொருள்ஞானமாய்
நாயகி யுன்செவிக்கு [நின்ற
நான்சொலும் புன்சொலின் பிழைபொறுத்
நயமா யுகந்தருளுவாய் [துன துமனம்
கமலசுர நீலி கிருபாலி கரப்பணி பசுந்தொ
தனிமதுர மிருதுபாணி [ளிர்
காசினியோர் கொண்டாடு மம்மைசிவகாமி
கருணையுள வோங்காளியே [யே
புலவர்பணி பாதார விந்தத்தி நாதத்தி
போதத்த யங்காளியே
பூங்காவி னீழலுறை ஓங்கார சத்தியே 10
பூங்காவனத் தாயியே.

முற்றிற்று.



## 23 - வது

# சூரிய நமஸ்காரப் பதிகம்

### விநாயகர் துதி வெண்பா

மின்னுஞ் சூரியன்மீது மேவச் சிறுபதிகம்
பன்னும் படியெனக்குப் பாலிப்பாய்—துன்னக்
கடவா ரணனே காண்பரிய காரணனே
இடமாகு முன்மறைத் தாள்.

### ஆசிரிய விருத்தம்

வீதிவெளி யாகாச மீதிற் பிரகாசமாய்
மெய்ஞ்ஞான தீபச் சுடராய்
வெளியாகி ஒளியாகி விந்துசுழி முனைமீதில்
விளையாடு மோங்கார மாய்

ஓதுமுதலைந்தெழுத் துபதேச மந்திர
　　மூரைக்கின்ற சற்குருவு மாய்
உருவாகி யுயிராகி யுயிருக்கு ளறிவாகி
　　யூடாடி நின்ற வுணர்வாய்
ஆதிமுத லாகவள ரண்டபகி ரண்டங்க
　　ளாயிரத் தெட்டு மாகி
அறுநூற் றிருபத்து நாலுபுவ னங்களு
　　மகண்டமய மான நிறமாய்ச்
சோதிமய மானபரி பூரண விலாசமிகு
　　சூட்ச ரத மீதேறியே
துலங்குகதிர் மதியென விளங்குசிவ சங்கர
　　சூரிய நாராயண சுவாமியே. 1

இன்பசுக மாகவும் பூமியா காசமு
　　மேகாந்த வைபோகமு
மீரேழு பதினான்கு லோகங்க ளத்தனையு
　　மிரட்சிக்கு மீஸ்வர னுமாய்
அம்பர திகம்பர பரம்பர வநாகத
　　அநாதியொளி யான வெளியாய்
ஆனந்த நடனமிடு மூத்தண்ட மாகவே
　　ஆடிய சபா பதியுமாய்
வம்பரொடு காலனெம தூத ரணுகாமலே
　　வந்தருள் புரிந்து நிதமும்

வளர்கின்ற கைலாச பரமபத கொடிமுடியி
வரையினை வணங்கு முடியார் [ன்
துன்பமெனு நரகவழி வீழாமல் ரட்சியுஞ்
சோதி ரத மீதேறியே
துலங்குகதிர் மதியென விளங்குசிவ சங்கர
சூரிய நாராயண சுவாமியே. 2

உக்ரமிகு மக்கினி சொரூப வடிவாகியே
ஓங்கார ரூப மாகி
ஒளியாகி வெளியாகி யுதயகிரி மீதினி
லுதிக்கின்ற தெய்வமாகிச்
சகலபுவ னங்களுந் தானாகி நின்றவொரு
சச்சிதா னநத மயமாய்ச்
சாலோக சாமீய சாரூப சாயுச்ய
சகலசூட் சும தாரியாய்
வீரசிவ லிங்கவடி வாகவு மிருந்தசதுர்
வேதாந்த மூர்த்தி முதலாய்
வெகுகோடி காலங்க ளுன்னையே நம்பினே
வேதனே பர நாதனே [ன்
சுக்ரகெம் பீரபரி பூரண விலாசனே
சுயம்பு ரத மீதேறியே
துலங்குகதிர் மதியென விளங்குசிவ சங்கர
சூரிய நாராயண சுவாமியே. 3

சாஸ்திர புராணமுதல் வேதவேதாந்தமிகு
சர்வத் தபோ தனர்களுஞ்
சகலமான தேவருஞ் சகலமா முனிவர்களு
சகல சீவன்களுடனே [ம்
நேத்திரம தாகவே குறியாகி நெறியாகி
நிருமல சொரூப மாகி
நிகழும் சிருஷ்டி திதி சம்மார வதிகார
நின்றதிரி மூர்த்தி யாகி
காத்திரம தாயைந்து பஞ்சபூ தங்களுங்
கருணு கடாட்ச முடனே
கண்டுகளி கூர்ந்திடும் விண்டபரி பூரண
கலைக்கியான வேத முதலே
சூத்திரந் தாவிவிளை யாடுமா னந்தச்
சுயம்பு ரத மீதேறியே
துலங்குகதிர் மதியென விளங்குசிவ சங்கர
சூரிய நாராயண சுவாமியே. 4
நிறையான சுக்கிலஞ் சுரோணிதங் கருவூரி
நின்றுமொன் ருக வேதான்
நிலையான மூக்கோண சக்கரந் தன்னிலே
நிதாகார கமல மீதில்
அறையான நிலைவீடு மறுகோண மாகியு
மாங்கார வோங்காரமாய்

ஆடிவிளை யாடிநட மாடிய பராபரா
வச்சுதா னந்த மெனவே
குறையான வன்னையின் கர்ப்பமதில் வாச
குடியாக மூந்நூறு நாட் [மூங்
கொண்டஓர் தாவதனை விண்டுபின் பூமியிற்
குழந்தையாய் வந் துவளரும்
துறையான பாவவழி வீழாம லேசெய்ய
சொர்ன ரத மீதேறியே
அலங்குகதிர் மதியென விளங்குசிவ சங்கர
சூரிய நாராயண சுவாமியே. 5

ரத்தமொடு மாமிசமு மத்தியொடு ரோமமு
நரம்புதோ லெலும்பு மயிரும் [ம்
நாடியொடு சிலேத்துமம் வாதபித் தங்களு
நாறும்ஸ்ரீ தசவாய் வுடன் [ம்
சத்தபரி சத்தினொடு ரூபரச கந்தமுஞ்
சகல ரகிதப் பொருளுமாய்ச்
சரணார விந்தமிரு கண்களிரு வகையுமாய்ச்
சார்வயிறு நாபி யுடனே
உற்றகம லந்தனி லுதித்தவுயி ராகவே
ஊடாடி நின்ற வுணர்வாய்
ஓங்கார ரீங்கார வாங்கார ரூபமா
யோமெழுத் தாக வேதான்

சுத்தகம் பீரபரி பூரண விலாசமிகு
சூட்சும ரத மீதேறியே
துலங்குகதிர் மதியென விளங்குசிவ சங்கர
சூரிய நாராயண சுவாமியே. 6

நிலையிலாச் சமுசார வாழ்வை நிஜமென்றெ
நினைவு தடுமாருமலும் [ண்ணி
நிஜரூப மாகவே காட்சிதந் தெனையாண்டு
நியமிக்க விது சமயமே
அலையாம லீரேழு பதினுன்கு லோகமு
மணுவுக்கு ளணு வாகியே
அரிஹரப் பிரம்மாதி யவதார சிங்கார
வகோர வக்கினி ரூபமாய்
மலையான கைலாச கிரிகளொடு பரமபதம்
மகமேரு வைகுந்த மும்
வாசமிகு வானதொரு வீதியா காயமதில்
வளரும் பிரகாச வொளியே
தொலையாத சனனமதில் முன்செய்த தீவி
துயர்தீர ரதமேறியே [னைத்
துலங்குகதிர் மதியென விளங்குசிவ சங்கர
சூரிய நாராயண சுவாமியே. 7

வழியென்ற துறைகளணிலைகளறி யாமலே
மனது மிகவே கலங்கி

மாதர்தம் சுகமான வாசைதனை நிசமென்று
பண்ணுலகி லேயலைந்து
பழியென்ற தீவினை யகற்றிவிட் டுன்பதம்
பணியவே யருளு மில்லான்
பாழுமென் மனங்குவிய ஒன்றுதரி தம்பனம்
பண்ணுவ தினக் கருமையோ
விழியென்ற கண்ணினொளி யாகவே நின்று
விளையாடு மணி ரூபமாகி
மேலான செல்வமது தந்தருள் புரிந்திடும்
வேதவே தாந்த முதலே
சுழியென்ற பூனைமீதி லோங்கார மானவதி
சூட்சும ரத மீதேறியே
துலங்குகதிர் மதியென விளங்குசிவ சங்கர
சூரிய நாராயண சுவாமியே. 8
அட்டதிசை யெட்டுடன் பதினாறு கோண
மகண்ட தொரு கமலமீதில்
ஆகாச மீதில்வெகு சோதிப் பிரகாசமா
யலங்கார தீப சுடரே
கட்டமது வானதொரு கவலையினி தீரவுன்
கருணை கடாட்ச முடனே
கனயோக ஞானமது சேவடி கடந்துநீர்
காத்து ரட்சித் தருளவே
இட்டகுல தெய்வம்நீ ரெந்தனது வுள்ளத்

திருந்துவிளை யாடு மவனீ
இன்பசுக போகமுஞ் சம்போக பாக்கியமு
மேகாந்த வைபோ கமுந்
அட்டகலி காலமது வென்னைவந் தணுகா
துணையாக ரத மேறியே [இ
துலங்குகதிர் மதியென விளங்குசிவ சங்கர
சூரிய நாராயண சுவாமியே. 9
தங்கமுங் கனக கோபுர விமானமுஞ்
சதுர்வேத மேற் கலசமுந்
தளதளௌனமின்னலொளியான நவரத்னந்
தரித்தமதி வரி கம்பமும்
அங்கமூறு தாக்கலூறு மனவேகமுங் குதி
யாங்கார வோங் காரமா [ரை
யைந்தெழுத்தாய் நின்ற மந்த்ரசொரூபமதி
லருணனே சாரதியு மாய்ச் [யை
சிங்கமுகமென்னுளே வண்டில் கட்டாணி
தியான மதிலு லிருக்குந்
தினந்தினமு மென்றனிட சிந்தையி லிருந்
திகம்பரமூ மான பொருளே [தருள
துங்கபரி பூரண விலாசவொளி யாகவே
சுயம்பு ரத மீதேறியே
துலங்குகதிர் மதியென விளங்குசிவ சங்கர
சூரியநாராயண சுவாமியே. (முற்றிற்று.)

24 - வது

# சனிபகவான்

# தோத்திரம்

## காப்பு - வெண்பா

தேவரெண் டிசைக்கதிபர் சித்தரொடு கிம்புருடர்
மூவர் முனிவர் முதலோரை—மேவியுறுந்
தாரணிந்த மார்பன் சனிபகவான் சீர்புகலக்
காரணிந்த யானைமுகன் காப்பு.

## விருத்தம்

ஆதிவே தாந்தமுத லறியஞான [லோடும்
வைந்தெழுத்தி னுட்பொருளை யயன்மா
சோதிசிற் றம்பலத்தி லாடி நின்ற
சுடரொளியை நீபிடித்த் தோஷத் தாலே
பாதிமதி சடைக்கணிய வரவம் பூணப்
பதியிழக்கச் சுடலைதனிற் பாடி யாடச் [ய்
சாதியில்லாவேட னெச்சிற்றின்னவைத்தா
சனியனே காகமேறுந் தம்பி ரானே. 1

வேலவனை வேங்கைமர மாக்கிவைத்தாய்[ய்
விறகுகட்டிச் சொக்கர்தமை விற்கவைத்தா
மாலினியை யுரலோடு கட்டுவித்தாய் [ய்
வள்ளிதனைக்குறவரது வனத்தில் வைத்தா
காலனை மார்க்கண்டனுக்கா வரனுதைத்த
காரணமும் நீபிடித்த கருமத் தாலே [தே
சாலவுனை யான்றொழுதேனெனைத் தொடா
சனியனே காகமேறுந் தம்பி ரானே. 2

மஞ்சுதவ ழயோத்தியில் வாழ்தச ரதன்றன்
மக்களையும் வனவாச மாக்கிவைத்தாய்
பஞ்சவர்கள் சூதினால் பதியி ழந்து
பஞ்சுபடும் பாடைவர் படச்செய் வித்தாய்
எஞ்சலிலாவரிச்சந்திரன்பெண்டைவிற்றே
இழிகுலத்தி லடிமையுற விசைய வைத்தாய்
தஞ்சமென வுனைப்பணிந்தேனெனைத்தொ
சனியனே காகமேறுந் தம்பிரானே.[டாதே

அண்டமா யிரத்தெட்டு மரசு செய்த
வடல்சூர பத்பனையு மடக்கி வைத்தாய்
பண்டலத்தை யாண்டநளச் சக்ர வர்த்தி
பனைவியோடு வனைதனி லலையச் செய்தாய்

விண்ட லத்தைப் பானுகோபன் றன்னலே
வெந்தனலாய்ச் சூரரை வெருவச் செய்தாய்
தெண்டனிட்டே னெந்நாளு மெனைத்தொ
சனியனே காகமேறுந் தம்பிரானே. [டாதே

அண்டர்கோன் மேனியிற் கண்ணுக்கி
வித்தாய், அயன்சிரத்தைவயிரவனு லறுக்க
வைத்தாய், திண்டிறல்கொள் கௌதமனு
லகலிகையைத்தான், சிலையாக சாபமுறவே
செய்வித்தாய், தண்டரளநகையிரதி மாரன்
றன்னைச், சங்கரனுர் நுதல்விழியிற்றனல்
செய்வித்தாய், சண்டமிலா துனைத்தொழு
தே னெனைத்தொடாதே, சனியனே காக
மேறுந தம்பிரானே. 5

பாருலவு பரிதியைப்பல் லுதிரவைத்தாய்
பஞ்சவர்க்குத் துரு பீதாம்பரனைவைத்தாய்
தாருலவு வாலிசுக் ரீபன் றம்மைத்
தாரையினுற் றீராத சமர்செய் வித்தாய்
சூரனெனுமிலங்கையிராவணன் றன் தங்கை
சூர்ப்பனகி மூக்குமுலை துணிசெய்வித்தாய்
தாரணியு மணிமார்பா வெனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பி ரானே. 6

சுக்ரன் றன் கண்ணிழந்தான் லங்கையாண்டு
துலங்கும்ராவணன் சிரங்கண்டிக்கவீழ்ந்தா
மிக்கபுக ழிரணியன்முன் வீறழிந்தான் [ன்
விளங்குதிரிபுராதிகளும்வெந்துமாண்டார்
சக்கரத்தா லுடலறுந்தான் சலந்திரன்முன்
தாருகா சுர னுமே சமரின் மாண்டான்
தக்கன்மிகச்சிரமிழந்தா னின்ஸ்ரேஷத்தாற்
சனியனே காகமேறுந் தமபி ரானே. 7

அந்தமுள ஐங்கரன்கொம் பறவேசெய்தாய்
அருமுனிவர்மனைவிகள்கற்பழியச்செய்தாய்
சந்திரன் றன் கலையழிந்து தழைக்கச்செய்தா
சங்கரனைப்பிச்சைதானெடுக்கச்செய்தாய்[ய்
தந்திமுகச் சூர னுயிர் தளரச் செய்தாய்
சாரங்கதரன் கரத்தைத் தறிக்கச் செய்தாய்
சந்ததமு முனைப்பணிவே னெனைத்தொடா
சனியனே காகமேறுந் தம்பி ரானே. [தே

சீதைதனையிராவணனாற்சிறைசெய்வித்தாய்
தேவர்களைச் சூரனாற் சிறைசெய் வித்தாய்
மாதுதுரோ பதைதுயிலை வாங்கு வித்தாய்
மகேச்சுரனையுமைபிரிய வகைசெய்வித்தாய்

போதிலயன் ருளிற்றனை பூட்டி வித்தாய்
பொதியையினிலகத்தியனைப்பொருந்தசெய்
தாய், தாதுசேர்மலர்மார்பா எனைத்தொட ா
சனியனே காகமேறுந் தம்பி ரானே. [தே

அப்பர்தமைமகருங்கல்லோடலையிற்சேர்த்தா
யரணடியின் முயலகனை யடங்கச் செய்தாய்
செப்புமா ணிக்கர்தமைச் சிறையி லிட்டாய்
ஸ்ரீராமனை மச்சவுரு வெடுக்கச் செய்தாய்
ஒப்பிலனு மான்வாலி லொளிதீ யிட்டாய்
ஒலிகடலி னஞ்சையர னுண்ண வைத்தாய்
தப்பிலாதுனைத்தொழுதேனெனைத்தொடா
சனியனே காகமேறுந் தம்பி ரானே. [தே

நீரினையுண் டெழுமேக வண்ணா போற்றி
நெடுந்தபத்தி லறுகமலக் கண்ணா போற்றி
சூரியன்றன் றவத்தில்வந்த பாலா போற்றி
துலங்குநவக் கிரகத்துண் மேலா போற்றி
காரியென் பெயர்களுப காரா போற்றி
காசினியிற் கீர்த்திபெற்ற தீரா போற்றி
மூரிகொளுநோய்முகவா மூடவா போற்றி[ றி
மூதுமகளின்முண்டகத்தாள்போற்றிபோற்

முற்றிற்று.

# நவக்கிரக தோத்திரம்

காப்பு - வெண்பா

மண்ணுளுயிர் கட்கனைத்து மாரு தளித்துநல
நண்ணு நவக்கிரக நண்புசொல—தண்ணுலவு
திங்களணி தங்குமுயர் செஞ்சடைய ருண்மகிழ்செய்
கங்கையரு ளங்கரனூர் காப்பு.

(சூரியன்) காசினி யிருளை நீக்குங் கதி
ரொளி யாகி யெங்கும், பூசனை யுலகோர்
போற்றப் புசிப்பொடு சுகத்தை நல்கும்,
வாசியே ழுடைய தேர்மேன் மகாகிரி வல
மாய் வந்த, தேசிகா வெனைரட் சிப்பாய்
செங்கதி ரவனே போற்றி. 1

(சந்திரன்) அலைகட லதனினின்று மன்
றுவந்து தித்தபோது,கலைவளர் திங்களாகிக்
கடவுளென்றெவருமேத்து, சிலை நுதலுமை
யாள்பங்கன் செஞ்சடைப் பிறையாய்மேரு,
மலைவலமாகவந்தமதியமேபோற்றிபோற்றி

(செவ்வாய்) வசனநற் றைரியத் தோடு
மன்னவர் சபையில்வார்த்தை, புசபலபராக்
கிரமங்கள் போர்தனில் வெற்றி யாண்மை,
நிசமுட னவரவர்க்கு நீணிலந் தனிலளிக்
குங், குசனில மவனுஞ் செவ்வாய் குறை
கழல் போற்றி போற்றி. 3

(புதன்) மதனநூல்முதலா நான்குமறை புகழ்கல்விஞானம், விதமுடனவரவர்க்கு விஞ்சைகளருள்வோன் றிங்கள்,சுதன்பலசுபா சுபம்சுகம்பலகொடுக்கவல்லன், புதன்கவிபு லவன்சீர்மால்பொன்னடிபோற்றிபோற்றி.

(குரு)மறைமிகுகலை நூல்வல்லோன்வான வர்க்கரசன்மந்திரி, நறைசொரிகற்பகப்பொ ன்னாட்டி னுக் கதிபனாகி, நிறைதனஞ் சிவி கைமண்ணி னீடுபோகத்தைநல்கு, மிறைய வன் குருவியாழ னிருமலர்ப்பாதம்போற்றி.

(சுக்கிரன்) மூர்க்கவான் சூரன் வாணன் முதலினோர் குருவாய் வையங், கார்க்கவான் மழைபெய்விக்குங்கவிமகன்கனகமீவோன், தீர்க்கவா னவர்கள் போற்றச் செத்தவர் தமையெழுப்பும், பார்க்கவான் சுக்ராசாரி பாதபங்கயமே போற்றி. 6

(சனி) முனிவர்க டேவரேழு மூர்த்திகள் முதலினோர்கள், மனிதங்கள்சகலவாழ்வுண், மகிமைய தல்லாதுண்டோ, கனிவுள தெய் வம்நீயே கதிர்சேயே க்ாகமேறுஞ், சனி யனே யுனைத்துதிப்பேன் தமியனேற்கருள் செய்வாயே. 7

(இராகு) வாகுசேர் நெடுமால் முன்னம் வானவர்க் கமுதமீயப், போகுமக் காலையுன்றன் புணர்ப்பினாற் சிரமே யற்றுப், பாகு சேர் மொழியாள் பங்கன் பரன்கையில் மீண்டும் பெற்ற, ராகுவே யுனைத் துதிப்பேன் ரட்சிப்பாய் ரட்சிப்பாயே. 8

(கேது) பொன்னையி னுரத்திற் கொண்டேன் புலவர்தம் பொருட்டாலாழி, தன்னையே கடந்துமுன்னந் தண்ணமு தளிக்கலுற்ற, பின்னை நின் கரவா லுண்ட பெட்பினிற் சிரம்பெற் றுய்ந்தா, யென்னையாள் கேதுவேயிவ்விருநிலம் போற்றத்தானே. 9

## பொது

சூரியன் சோமன் செவ்வாய் சொற்புதன் வியாழன் வெள்ளி, காரிய மிராகு கேது கடவுள ரொன்பா னுமத், தாரியல் சக்கரத்தைத் தரித்திரர் பூசித்தாலும், பாரினிற் புத்திர ருண்டாம் பாக்கியம் நல்குந் தானே. 10

முற்றிற்று.



## 26 - வது

# அழுகணிசித்தர் பாடல்

மூலப்பதியடியோ மூவிரண்டுவீடதிலே, கோலப்பதியடியோ குதர்க்கந்தெருநடுவே, சாலப் பதிதனிலே தணலாய் வளர்ந்த கம்பம், உந்தன் மேலப்பதிதனிலே என் கண்ணம்மா, விளையாட்டைப் பாரேனே. 1

எண்சா ணுடம்படியோ ஏழிரண்டு வாயிலடி, பஞ்சாயக் காரரைவர் பட்டணமூந்தாணிரண்டு, அஞ்சாமற்பேசுகின்ருய் ஆக்கினைக்குத் தான்பயந்து, நெஞ்சார னில்லாமல் என கண்ணம்மா, நிலைகடந்துவாடுறண்டி,

மூத்துமுகப்படியோ முச்சந்திவீதியிலே. பத்து விதழ்பாப்பி பஞ்சணையின் மேலிருந்து, அத்தை யடக்கிநிலை யாருமில்லா வேளையிலே, குத்துவிளக்கேற்றி என் கண்ணம்மா, கோலமிட்டுப் பாரேனே. 3

சம்பா அரிசியடி சாதஞ் சமைத்திருக்க, உண்பாய்நீ யென்றுசொல்லி உழக்குழக்கு நெய்வார்த்து, மூத்துபோலன்னமிட்டு முப்பழமுஞ் சர்க்கரையும், தித்திக்குந்தேனமிர்தம்என் கண்ணம்மா தின்றுகளைப்பாரேனே

பைம்பொற் சிலம்பணிந்து பாடகக்கால் மேல்தூக்கி, செம்பொற் கலையுடுத்தி சேல் விழிக்கு மையெழுதி, அம்பொற் பணிபூண்டறுகோண வீதியிலே, கம்பத்தின் மேலிருந்து என்கண்ணம்மா, கண்குளிரப் பாரேனோ. 5

எட்டாப் புரவியடி ஈராறு காலடியோ, விட்டாலும் பாரமடி வீதியிலே தான்மறித்துக், கட்டக் கயிறெடுத்துக் கலைநாலுஞ் சேர்த்திறுக்கி, அட்டாள தேசமெல்லாம் என்கண்ணம்மா, ஆண்டிருந்தாலாகாதோ.

கொல்லனுலைபோற் கொதிக்குதடி என் வயிறு, நில்லென்று சொன்னால் நிலைநிறுத்தக் கூடுதில்லை, நில்லென்று சொல்லி நிலைநிறுத்த வல்லார்க்குக், கொல்லென்று வந்தநமன் என்கண்ணம்மா, குடியோடிப் போகானோ. 7

ஊத்தைச் சடலமடி உப்பிருந்த பாண்டமடி, மாற்றிப்பிறக்க மருந்தெனக்குக் கிட்டுதில்லை, மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுமென்றால், ஊத்தைச் சடலம்விட்டு என்கண்ணம்மா, உன்பாதஞ் சேரேனோ. 8

வாழைப்பழந்தின்றால் வாய்நோகுமென் றுசொல்லித், தாழைப் பழந்தின்று சாவெணக்கு வந்ததடி, தாழைப் பழத்தைவிட்டுச் சாகாமற் சாகவல்லோ, வாழைப் பழந் தின்றால் என்கண்ணம்மா, வாழ்வெனக்கு வாராதோ. 9

பையூரி லேயிருந்து பாழூரி லேபிறந்து, மெய்யூரிற் போவதற்கு வேதாந்த வீடறி யேன், மெய்யூரிற் போவதற்கு வேதாந்த வீடறிந்தால், பையூரும் மெய்யூரும் என் கண்ணம்மா, பாழாய் முடியாதோ. 10

மாமன்மகளடியோ மச்சினியோ தானறி யேன், காமன் கணையெனக்குக் கனலாக வேகுதடி, மாமன் மகளாகி மச்சினியும் நீயானல், காமன் கணைகளெல்லாம் என் கண்ணம்மா, கண்விழிக்க வேகாதோ. 11

அந்தரத்தை வில்லாக்கி ஐந்தெழுத்தை யம்பாக்கி, மந்திரத்தே [illegible]றியல்லோ மான் வேட்டை யாடுதற்குச், சந்திரருஞ் சூரிய ருந் தான்போந்த காவணத்தே, வந்துவிளை யாடியல்லோ என்கண்ணம்மா, மனமகிழ் ந்து பார்ப்பதென்றே. 12

காட்டானை மேலேறிக் கடைத்தெருவே போகையிலே, நாட்டார் நமைமறித்து நகை புரியப் பார்ப்பதென்றே, நாட்டார் நமை மறித்து நகைபுரியப் பார்த்தாலுங், காட் டானை மேலேறி என்கண்ணம்மா, கண் குளிரக் காண்பேனே. 13

உச்சிக்குக் கீழடியோ வூசிமுனைவாசலுக் குள், மச்சிக்குள் மேலேறி வானுதிரந் தானெடுத்து, கச்சைவடம்புரியக் காயலூர் பாதையிலே, வச்சி மறந்தல்லோ என்கண் ணம்மா, வகைமோச மானேனடி. 14

மூக்கா லரும்பெடுத்து மூவிரண்டாய்த் தான் தூக்கி, நாக்கால் வளைபரப்பி நாற் சதுர வீடுகட்டி, நாக்கால் வளைபரப்பி நாற் சதுர வீட்டினுள்ளே, மூக்காலைக்காணமல் என்கண்ணம்மா, முழுதுந் தவிக்கிறண்டி.

காமமலர் தூவக் கருத்தெனக்குவந்ததடி, பாச வலிதொலைக்கப் பாசவலி கிட்டுதில்லை, பாச வலிதொலைக்கப் பாசவலி நிற்குமென் ருல், காம மலர்மூன்றும் என்கண்ணம்மா, கண்ணெதிரே நில்லாதோ. 16

தங்காயந்தோன்றுமற் சாணகலக்கொல்லை கட்டி, வெங்காயநாத்துவிட்டுவெகுநாளாய் காத்திருந்தேன், வெங்காயந் தின்னுமல் மேற்றேலைதின்றலவோ, தங்காயந்தோணு மல்என்கண்ணம்மா, சாகிறண்டிசாகாமல்.

பற்றற்று நீரதிலே பாசி படர்ந்தது போல், உற்றுற்றுப் பார்த்தாலும் உன்மயக் கந்தீரவில்லை, உற்றுற்றுப்பார்த்தாலும் உன் மயக்கந் தீர்ந்தாக்கால், பற்றற்று நீராகும் என்கண்ணம்மா, பாசியது வேராமோ. 18

கற்றாரு முற்றாருந் தொண்ணூற்றி யாற திலே, உற்றாரும் பெற்றாரும் ஒன்றென்றே யானிருந்தேன், உற்றாரும் பெற்றாரும் ஊரைவிட்டுப் போகையிலே, உற்றாரு மில் லாமல் என்கண்ணம்மா, துணையிழந்து நின்றதென்ன. 19

கண்ணுக்கு மூக்கடியோ காதோர மத்தி யத்தில், உண்ணுக்குமேலேறி உன்புதுமை மெத்தவுண்டு, உண்ணுக்கு மேலேறி உன் புதுமை கண்டவர்க்கு, கண்ணுக்கு மூக் கடியோ என்கண்ணம்மா, காரணங்கள் மெத்தவுண்டு. 20

சாயச்சரக்கெடுத்தேசாதிலிங்கந்தான்சேர்த்து,மாயப்பொடிகலந்து வாலுழுவைநெய்யூற்றி, பொட்டென்று பொட்டுமிட்டாள் புருவத் திடைநடுவே, இட்டமருந்தாலே என்கண்ணம்மா, இவ்வேஷமானேனடி.

பாதாள மூலியடி பாஷாணந் தான்சேர்த்து, வேதாளங் கூட்டியல்லோ வெண்சாரைநெய்யூற்றி, செந்தூரமையடியோ ஜெகமெலாந் தான்மிரட்டி, தந்த மருந்தாலே என்கண்ணம்மா,தணலாகவேகுறண்டி. 22

கள்ளர்பயமெனக்குக் கால்தூக்க வொட்டாமல், பிள்ளையழுது நின்றால் பெற்றவட்குப்பாரமடி,பிள்ளையழுகாமல் பெற்றமனம் நோகாமல், கள்ளர் பயமெனக்கு என்கண்ணம்மா, கடுகளவு காணுதோ. 23

பட்டணத்தை யாளுகின்ற பஞ்சவர்கள் ராஜாக்கள், விட்டுப் பிரியாமல் வீரியங்கள் தான்பேசி, விட்டுப்பிரிந்தவரே வேறுபடுங் காலம்பட்டணமுந்தான்பறிபோய்என்கண்ணம்மா, படைமன்னர்மாண்டதென்ன. 24

ஆகாப்புலையனடி யஞ்ஞானந் தான்பேசி, சாகாத் தலையறியேன் தன்னறிவு தானறி

யேன், வேகாத காலறியேன் விதிமோச
மானேனடி, நோகாமல் நொந்தல்லோ
என் கண்ணம்மா, நொடியில்மெழு கான
னடி. 25

தாயைச்சதமென்றே தந்தையரை யொப்
பென்றே, மாயக் கலவிவந்து மதிமயக்க
மானனடி, மாயக் கலவிவிட்டு மதிமயக்கந்
தீர்ந்தாக்கால், தாயுஞ் சதமாமோ என்கண்
ணம்மா, தந்தையரும் ஒப்பாமோ. 26

அஞ்சாத கள்ளனடி ஆருமற்றபாவியடி,
நெஞ்சாரப் பொய்சொலலும் நேயமில்லா
நிஷ்டூரன், கஞ்சாவெறியன் கைசேதமாகு
முன்னே, அஞ்சாதே யென்றுசொல்லி என்
கண்ணம்மா, ஆண்டிருந்தாலாகாதோ. 27

உன்னை மறந்தல்லோ உளுத்த மரமா
னேன், தன்னை மறந்தார்க்கு தாய்தந்தை
யில்லையடி, தன்னைமறக்காமற் றுயாருமுண்
டானால், உன்னை மறக்காமல் என்கண்
ணம்மா, ஒத்திருந்து வாழேனோ. 28

காயப் பதிதனிலே கந்தமூலம் வாங்கி,
மாயப் பணிபூண்டு வாழுஞ் சாக்கெடுத்து,
ஆயத் துறைதனிலே ஆராய்ந்து பார்க்கு

முன்னே, மாயச் சுருளோலை என்கண்ணம்
மா, மடிமேல் வீழ்ந்ததென்று. 29

சித்திரத்தை குத்தியல்லோ சிலையை யெழுதிவைத்து, உத்திரத்தைக் காட்டாமல் ஊரம்பலமானேன், உத்திரத்தைக் காட்டியல்லோ ஊரம்பலமானால், சித்திரமும்வேறுமோ என்கண்ணம்மா, சிலையுங்குலையாதோ.

புல்லரிடத்திற்போய்ப் பொருள்தனக்குக் கையேந்திப், பல்லை மிகக்காட்டிப் பறக்க விழிக்கிறண்டி, பல்லைமிகக் காட்டாமல் பறக்க விழிக்காமல், புல்லரிடம் போகாமல் என்கண்ணம்மா, பொருளெனக்குத் தாராயோ. 31

வெட்டுண்டசக்கரத்தால் வேணதனமளித்துக், குட்டுண்டு நின்றேண்டி கோடிமனு முன்னுகக், குட்டுண்டு நில்லாமற் கோடி மனுமுன்னுக, வெட்டுண்டபிணி நீக்கி என் கண்ணம்மா, விழித்துவெளி காட்டாயோ.

முற்றிற்று.

# குதம்பைசித்தர் பாடல்

வெட்ட வெளிதன்னை
மெய்யென் றிருப்பார்க்கு
பட்டய மேதுக்கடி
பட்டய மேதுக்கடி குதம்பாய் 1

மெய்ப்பொருள் கண்டு
விளங்குமெய்ஞ் ஞானிக்குக்
கற்பங்க ளேதுக்கடி
கற்பங்க ளேதுக்கடி குதம்பாய் 2

காணமற் கண்டு
கருத்தோ டிருப்பார்க்கு
வீணாசை யேதுக்கடி
வீணாசை யேதுக்கடி குதம்பாய் 3

வஞ்சக மற்று
வழிதன்னைக் கண்டோர்க்கு
சஞ்சல மேதுக்கடி
சஞ்சல மேதுக்கடி குதம்பாய் 4

ஆதார மான
அடிமுடி கண்டோர்க்கு
வாதாட்ட மேதுக்கடி குதம்பாய்
வாதாட்ட மேதுக்கடி 5

நித்திரை கெட்டு
நினைவோ டிருப்பார்க்கு
முத்திரை யேதுக்கடி குதம்பாய்
முத்திரை யேதுக்கடி 6

தந்திர மான
தளந்தனில் நிற்போர்க்கு
மந்திர மேதுக்கடி குதம்பாய்
மந்திர மேதுக்கடி 7

சத்திய மான
தவத்தி லிருப்போர்க்கு
உத்திய மேதுக்கடி குதம்பாய்
உத்திய மேதுக்கடி 8

நாட்டத்தைப் பற்றி
நடுவணை சேர்வோர்க்கு
வாட்டங்க ளேதுக்கடி குதம்பாய்
வாட்டங்க ளேதுக்கடி 9

முத்தமிழ் கற்று
முழங்குமெய்ஞ் ஞானிக்குச்
சத்தங்க ளேதுக்கடி குதம்பாய்
சத்தங்க ளேதுக்கடி 10

உச்சிக்கு மேற்சென்று
உயர்வெளி காண்போர்க்கு
இச்சிப்பிங் கேதுக்கடி குதம்பாய்
இச்சிப்பிங் கேதுக்கடி 11

வேகாமல் வெந்து
வெளியொளி கண்டோர்க்கு
மோகாந்த மேதுக்கடி குதம்பாய்
மோகாந்த மேதுக்கடி 12

சாகாமற் றாண்டி
தனிவழி போவோர்க்கு
ஏகாந்த மேதுக்கடி குதம்பாய்
ஏகாந்த மேதுக்கடி 13

அந்தரந் தன்னில்
அசைந்தாடு மூத்தர்க்கு
தந்திர மேதுக்கடி குதம்பாய்
தந்திர மேதுக்கடி 14

ஆனந்தம் பொங்கி
அறிவோ டிருப்போர்க்கு
ஞானந்தா னேதுக்கடி குதம்பாய்
ஞானந்தா னேதுக்கடி 15

சித்திரக் கூடத்தைத்
தினந்தினங் கண்டோர்க்குப்
பத்திர மேதுக்கடி குதம்பாய்
பத்திர மேதுக்கடி 16

முக்கோணந் தன்னில்
முளைத்தமெய்ஞ் ஞானிக்குச்
சட்கோண மேதுக்கடி குதம்பாய்
சட்கோண மேதுக்கடி 17

அட்டதிக் கெல்லாம்
அசைந்தாடு நாதர்க்கு
நட்டணை யேதுக்கடி குதம்பாய்
நட்டணை யேதுக்கடி 18

முத்திபெற் றுள்ளம்
மூயங்குமெய்ஞ் ஞானிக்குப்
பத்திய மேதுக்கடி குதம்பாய்
பத்திய மேதுக்கடி 19

அல்லலை நீக்கி
யறிவோ டிருப்பார்க்குப்
பல்லாக் கேதுக்கடி குதம்பாய்
பல்லாக் கேதுக்கடி 20

அட்டாங்க யோக
மறிந்தமெய்ஞ் ஞானிக்கு
முட்டாங்க மேதுக்கடி குதம்பாய்
மூட்டாங்க மேதுக்கடி 21

வேக மடக்கி
விளங்குமெய்ஞ் ஞானிக்கு
யோகந்தா னேதுக்கடி குதம்பாய்
யோகந்தா னேதுக்கடி 22

மாற்றானை வென்று
மலைமே லிருப்பார்க்குப்
பூத்தான மேதுக்கடி குதம்பாய்
பூத்தான மேதுக்கடி 23

செத்தாரைப் போலத்
திரியுமெய்ஞ் ஞானிக்குக்
கைத்தாள மேதுக்கடி குதம்பாய்
கைத்தாள மேதுக்கடி 24

கண்டாரை நோக்கிக்
கருத்தோ டிருப்பார்க்குக்
கொண்டாட்ட மேதுக்கடி குதம்பாய்
கொண்டாட்ட மேதுக்கடி 25

காலனை வென்ற
கருத்தறி வாளர்க்குக்
கோலங்க ளேதுக்கடி குதம்பாய்
கோலங்க ளேதுக்கடி 26

வண்காய மூண்டு
மிளகுண்டு சுக்குண்டு
உண்காய மேதுக்கடி குதம்பாய்
உண்காய மேதுக்கடி 27

மாங்காய்ப் பாலுண்டு
மலைமே லிருப்போர்க்குத்
தேங்காய்ப்பா லேதுக்கடி குதம்பாய்
தேங்காய்ப்பா லேதுக்கடி 28

பட்டணஞ் சுற்றிப்
பகலே திரிவோர்க்கு
முட்டாக் கேதுக்கடி குதம்பாய்
முட்டாக் கேதுக்கடி 29

தாவார மில்லை
தனக்கொரு வீடில்லை
தேவார மேதுக்கடி குதம்பாய்
தேவார மேதுக்கடி 30

தன்னை யறிந்து
தலைவனைச் சேர்ந்தோர்க்கு
பின்னாசை யேதுக்கடி குதம்பாய்
பின்னாசை யேதுக்கடி 31

பத்தாவுந் தானும்
பதியோ டிருப்பார்க்கு
உத்தார மேதுக்கடி குதம்பாய்
உத்தார மேதுக்கடி 32

முற்றிற்று

---

## 28 - வது

# கதிர்காமவேலவர் செந்திமாலை

கடலென்ற சமுத்திரம் நான் கப்பலேறி, கண்டியென்ற நகர்தனிலே நானும் சென்றேன், கதிர்காமம் போகும்வழி யானும் கண்டேன், காத்திருந்த பெரியோர்கள் தன்னைக் கண்டேன், கரடிபுலி யானைகளும் யானும் கண்டேன், கந்தனுட தன் பாதம் யானும் கண்டேன், கானமயில் எத்தனையோ யானும்கண்டேன், கதிர்வேலன் தன்பாதம் யான் கண்டேனே. 1

கதிர்காமம் சுற்றிவந்து வலமாய் நின்றேன், கலகலென்று சத்தம்ஒன்று யானும் கண்டேன், கதவருகில் சகடைவந்து நிற்கக் கண்டேன், கற்பூர தீபங்கள் விளங்கக் கண்டேன்,குமரனுடதெரிசனமும் யானும் கண்டேன், ஆதியெனும் கதிர்காமம் சுற்றி வந்து, ஆறுருவி தெரிசனங் கண்டருள் பெற்றேனே. 2

முற்றிற்று.

## 29 - வது

# திருச்செந்தூர்ப் பதிகம்

### கணபதி வணக்கம்

காட்டுவழி போனலும் கள்ளர்பய மானலும்
கேட்டுவழிக் காரனல் கிட்டினும்—நாட்டமுடன்
நம்பிக்கை யாக நமக்கு விநாயகரே
தும்பிக்கை யுண்டு துணை.

செந்தில்வளர் விநாயகரே சிவனே யுந்தன்
சீர்பாதம் போற்றிசெய்து சிறப்பாய் பாட
வந்துதமிழ் வாக்கருளும் வாலைத் தாயே
மலரடியை நானடியேன் வருந்தி நித்தம்
தந்திரமாய் சடாக்ஷரத்தைத் தியானம் செய்ய
சரஸ்வதியும் சாமுண்டி வீரவாகு
செந்திவளர் விநாயகரே முருகா அய்யா
சீர்பாத மெந்நாளும் சரணங் காப்பே. 1

சீர்புகழும் யானைமுகன் செழித்து வாழ்க
சிறப்புடனே திருமாலும் மங்கை வாழ்க
வார்குழலாள் தெய்வானை வள்ளி வாழ்க
மணம்புணர்ந்த ஆறுமுகம் வடிவேல் வாழ்க
தார்புகழும் மேலமலை முருகர் வாழ்க
தமிழ்சொன்ன பிள்ளைகளும் தழைத்து வாழ்க
பார்புகழும் அன்னமொரு கொடிக ளாகும்
பாரமலை யாண்டவரே பழநி வேலா. 2

## செந்திமலை

வீதிசுற்றி கீழ்ப்புரத்தில் யானும் வந்தேன்
விஸ்தாரக் கொடிமரத் தலங்காரங் கண்டேன்
ஆதியெனும் மூலவிக்கினத் தழகைக் கண்டேன்
அடியேனும் திருச்செந்தூர் வலமாய் வந்தேன்
நீதிபுகழ் பெரியோர்கள் தன்னைக் கண்டேன்
நிச்சயமாய் உன்னடியைக் காண வேண்டி
ஆதியெனும் கடற்கரையில் வந்து நின்று
ஆறுருவத் தெரிசனங்கண் டருள்பெற் றேனே. 3
நாழிதனை கிணறுதனை யானும் கண்டேன்
நளினமுடன் தீர்த்தமதி லாடக் கண்டேன்
வாழிசொல்லும் பெரியோர்கள் தன்னைக் கண்டேன்
வள்ளியுட கணவனைநான் காண வேண்டி
வேறுவினை யணுகாம லிருக்கக் கண்டேன்
வேலருட தன்பாதம் காண வேண்டி
ஆதியெனுங் கடற்கரையில் வந்து நின்று
ஆறுருவத் தெரிசனங்கண் டருள்பெற் றேனே. 4
மாசிமா தத்தில்தேர் வரவுங் கண்டேன்
மனிதரெல்லாம் மடத்திலன்னம் விழுங்கக் கண்டேன்
தேசிகனார் தேர்மீதி லமரக் கண்டேன்
தினந்தினமும் பூச்சரங்கள் சிறப்பாய்க் கண்டேன்
வாசியென்னும் பெரியோர்கள் தன்னைக் கண்டேன்
வள்ளியுட கணவனைநான் காணவேண்டி
ஆதியெனும் கடற்கரையில் வந்து நின்று
ஆறுருவத் தெரிசனங்கண் டருள்பெற் றேனே. 5

மூன்றுசுற்று மண்டபமும் சுற்றிப் பார்த்தேன்
முன்னாலே இடும்பனவர் தன்னைக் கண்டேன்
நானுமே மலைக்குடலில் பெருமானைக் கண்டேன்
நல்லவள்ளி சந்நிதியைத் திறக்கக் கண்டேன்
தேனும்பால் அபிஷேகம் செய்யக் கண்டேன்
சிவனார்தம் பாலகனைக் கண்ணாற் கண்டேன்
ஆதியெனும் கடற்கரையில் வந்து நின்று
ஆறுருவத் தெரிசனங்கண் டருள்பெற் றேனே. 6

ஆறுமுக நாயகனார் பாதங் கண்டேன்
அவர்க்கெதிரே சண்முக விலாசங் கண்டேன்
கூறுமடி யேன்துயரம் தீர்க்கக் கண்டேன்
குமரருட திருவருள் தன்னைக் கண்டேன்
கானமயில் எத்தனையோ யானும் கண்டேன்
கதிர்வேலன் சேவல்கொடி யானும் கண்டேன்
ஆதியெனும் கடற்கரையில் வந்து நின்று
ஆறுருவத் தெரிசனங்கண் டருள்பெற் றேனே. 7

அமணர்குலம் வேரறுத்த கையு மெங்கே
ஆறுமுகம் பன்னிருகை வேலு மெங்கே
தருணத்தி லோடிவரும் இடும்ப னெங்கே
உன்சந்நிதியி லிருக்கின்ற கடம்ப னெங்கே
வேகமாய் ஓடிவரும் மயிலு மெங்கே
வேதாந்த சங்குமணி நாத மெங்கே
வள்ளிதெய் வானையுடன் மயிலு மேறி
வரவேணும் திருச்செந்தூர் வேலபோற்றி. 8

வண்டாடும் மலர்ச்சோலை உன்னு தானல்
வள்ளியம்மை யெனையீன்ற தாயு மானள்
தெண்டாயுதம் உனதுகையில் வேலு மானல்
தெய்வானை யெனையீன்ற தாயு மானள்
கொண்டாடும் மாதுகுற வள்ளி தன்னை
கோலமணம் சூட்டிவைத்த குழந்தை யாண்டி
பண்டாரம் நீருமானல் என்னைக் காரும்
பச்சைமயில் வாகனரே பாதம் போற்றி. 9

---

## 30 - வது

# பழநிவேலவர் விருத்தம்

மண்டலந் தன்னிலே மானிட ஜென்மமாய்
மனிதனுய் உருவமாகி
மாறாத செல்வமும் தேறாத கல்வியும்
மந்திரமெல்லாம் கற்று
மாலைதனில் மயானத்தில் மன்னரைப் போல்நின்று
மாறியே வேடம்பூண்டு
மங்கையும் நீருமாய் வண்மையுடன் வைரவர்
இருபேரும் நின்றுகாத்து
கணபதியை முன்வைத்துக் காத்த கந்தனை
காளியும் வந்துமக்கு [யில்
கடகடென அதம்செய்ய கதறியேவேலெடுத்து வேளை
கடத்தைத் தானறுக்க

கருவியில் லாமலே கடுபொடிகள் செய்துமே
கயிலாசம் சேர்த்த முருகா
பளபளென மயிலேறி வள்ளிதெய் வானையுடன்
வருகுவாய் பழநிமலை வேல்முருகனே. 1

பத்தியுட னுலகத்தில் வினையரும் அரசரும்
பசியரும் வசியராட
பதினெட்டு மலையாளம் ஒன்பது கம்பளம்
பகவதி தேவியாட
வெற்றியுட மதனுட ரதியாட வாகுள்ள
வீரபத்திரனும் நின்றுடவே
வேலுமயி லவனுட வல்லிடும் பைரவனும்
விருதுகட்டியம் படிக்க
சத்திமக மாயிகாட் டேரிஇரு ளனுமின்னும்
தரும தேவதைகளாட
சங்கிலி கறுப்பனும் மதுரைவீ ரய்யனும்
தானுமொரு பாரிலாட
மத்தளம் தாளமும் வெற்றிமுரசு சீரவே
வடிவே லெடுத்துநின்று
பளபளென மயிலேறி வள்ளிதெய் வானையுடன்
வருகுவாய் பழநிமலை வேல்முருகனே. 2

மாதா வயிற்றிலே மாயமாய் தரித்துநான்
மருவியிருந்தேன் சிலநாள்
மண்ணில் விழுந்தேன் மாதா யெடுத்துமே
மருவி வளர்த்தநாள் சிலநாள்

ஐந்து வயதிலே அருமையாய் எந்தனை
பள்ளியில் வைத்தார் சிலநாள்
அண்டத்தை யிரண்டுதுண் டாகவே அறுத்திடும்
ஆறுமுக னிருப்பதாக
ஆராவ தெனக்கு நேராவ தாகவே
ஆருமே சொல்லவில்லை
சொற்பனந் தன்னிலே சுயரூப மாய்வந்த
சோமசுந்தரக் கடவுளே
பாலன் வருந்துகிறேன் ஓலமிட் டழுகிறேன்
பதறியே வேலெடுத்து
பளபளென மயிலேறி வள்ளிதெய் வானையுடன்
வருகுவாய் பழநிமலை வேல்முருகனே. 3

பஞ்சாய கோடிபூ மண்டலம் தனிலுள்ள
பதிகளும் நதிகள்தோறும்
பாருலகில் தெய்வ ஸ்தலங்களும் நான்காணேன்
பாதமதில் உனைநம்பினேன்
செஞ்சரி வயல்சூழும் பழநியப்பா வென்று
சிந்தையில் நினைந்தபோது
சேவல் பிதாக்களும் வேலா யுதத்துடன்
தக்ஷணையில் பக்கம்வந்து
அஞ்சாதே யென்றொரு வார்த்தைகவி சொல்லியே
அருள்தரும் கந்தசுவாமி
ஆறுமுகவா கார்த்தி கேயா சேவகா
சேனாதிபதியும் நீயே

மயிலாடும் மலர்சோலை தென்பழநி வாசனே
வள்ளி தெய்வானையுடனே
வாலவய தாயுனது வாளுமயி லேறிநட
மாடிவரும் முருகேசனே. 4

தந்திரம தாகவே மந்திரம் செய்தது
ஓம்சரஹண பவாமந்திரம்
சண்முகனொரு மந்திரம் முருகனொரு மந்திரம்
சுவாமிநாத னொருமந்திரம்
கந்தனொரு மந்திரம் குமரனொரு மந்திரம்
கார்த்திகேய னொருமந்திரம்
கானவர் புனத்திலே மான்மகிழ் குறத்தியை
கைவசம் செய்தமந்திரம்
சுந்தரி துரந்தரி ஆறுமுக மந்திரம்
சுத்தமுத்தைய னொருமந்திரம்
சூரரொடு மார்படை வேல்விடும் மந்திரம்
சிவசுப்பிரமண்ய மந்திரம்
வந்தமரர் நிற்கிறார் இந்தமந் திரம்சொன்னால்
வந்துகாத் ததுபோலவே
வாலவய தாயுனது வாளுமயி லேறிநட
மாடிவரு முருகேசனே. 5

30-சில்லரைக் கோர்வை முற்றிற்று.

---

மலர்மகள் விலாச அச்சுக்கூடம் சென்னை-1. (25-5-59)

# மலர்மகள் புத்தக விளம்பரம்

| [மலர்மகள் பதிப்பை கவனித்து வாங்கவும்] | ரூ. | ந-ப |
|---|---|---|
| நாலாயிர திவ்ய ப்ரபந்தம் | 10 | 0 |
| தோத்திரத்திரட்டு | 2 | 0 |
| கதிர்காம புராணம் | 2 | 0 |
| ஸ்ரீபகவத்கீதை வசனம் | 4 | 0 |
| பட்டினத்தார் திருப்பாடற்றிரட்டு பத்திரகிரியார் திருப்புலம்பல் உரை | 4 | 0 |
| ஔவைக்குறள் விருத்தியுரை | 2 | 0 |
| ஜாதக அலங்காரம் விருத்தியுரை | 10 | 0 |
| ஹஸ்தரேகை சாஸ்திரம் 3-பாகங்கள் | 2 | 50 |
| சோதிட அரிச்சுவடி 4-பாகங்கள் | 2 | 50 |
| பெரிய வருஷாதி நூல் | 3 | 0 |
| புலிப்பாணி சோதிடம் தாய்மகள் ஏசல் | 1 | 50 |
| பெரிய ருது நூல் சாஸ்திரம் | 1 | 50 |
| அனுபோக ஜாதக ரகசியம் | 3 | 0 |
| அனுபோக ஆரூட சிந்தாமணி | 1 | 0 |
| கனவு நூல் திறவுகோல் | 1 | 25 |
| கண்ணுசாமி பெருமு[illegible] பாக்கெட் வைத்தியம் | 2 | 50 |
| பசுமூலி அகராதி | 1 | 25 |
| காமதகனமென்னும் நவரத்தின ஒப்பாரி | 0 | 75 |

கிடைக்குமிடம்:—சரஸ்வதி புத்தகசாலை

175, செட்டியார்தெரு, கொழும்பு.

மலர்மகள் பதிப்பு

கீரனூர். நடராஜர் அருளிய

# சாதக அலங்காரம்

## [விளக்க விருத்தியுரை]

842 - பக்கங்களுடன் கலிகோ பயிண்டு செய்தது.

வேலூர் வேலப்பாடி சோதிட கணித ஆருட சித்தாந்த வல்லவரும், சோதிட கலாநிதி பத்திராதிபருமாகிய

**K. M. தெய்வசிகாமணி சோதிடராலும்,**

காவேரிப்பாக்கம் பாலசோதிடம்

**V. K. வேலுநாயகர் அவர்களாலும்,**

உரை எழுதப்பட்டது.

[மலர்மகள் பதிப்பாளர் அ. இராஜரத்தின முதலியார் வெளியிட்டுள்ள 'சாதக அலங்காரம்' என்னும் இந்த நூலை பயிற்சிசெய்ய விரும்பும் எவரும் படித்தறிந்த பின்னர் மற்றைய சாதகங்களைப் படித்தறியவேண்டியது என்று கூறுவது மிகையாகாது.] **விலை ரூ. 10.**

இடைக்குமிடம்: சரஸ்வதி புத்தகசாலை

175, செட்டியார் தெரு, கொழும்பு.